
# எனது ஆன்மாவைக் கோருதல்

## இலங்கையின் சுகாதார மற்றும் நீதித் துறைகளில் நிகழும் பாலியல் இலஞ்சம் பற்றிய ஒரு கற்கை




Centre for Equality and Justice



# எனது ஆன்மாவைக் கோருதல்

## இலங்கையில் சுகாதாரம் மற்றும் நீதித்துறைகளில் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஓர் கற்கை



**© சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice), இலங்கை.**
**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.**

வடிவமைப்பு : தனுஶ்ரீ வெலிகல.

நவம்பர் 2022 அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

ஆசிய மன்றத்தால் ஆதரவளிக்கப்பட்டது.

இவ்வெளியீட்டின் எப்பகுதியையும் முழுமையான அனுமதியின்றி மீள் உற்பத்தி செய்யவோ மீளப்பெறும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எவ்வகையிலும் மின், இயந்திர, நகலெடுத்தல், ஒலிப்பதிவு அல்லது வேறு எந்தவகையிலும் பரிமாற்றவோ முடியாது.

மேலதிக தகவலுக்கு தயவு செய்து தொடர்புக் கொள்ளவும்:-
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice), இலங்கை
16/1, மொறிஸ் பிளேஸ், கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி/ தொலைநகல் : +94112055404
மின்னஞ்சல் முகவரி: srilanka.cej@gmail.com

ISBN 9786245847204

# முகவுரை

பெண்களை விகிதாசாரமற்ற வகையில் பாதிக்கின்ற இலஞ்சத்தின் ஒரு வடிவமான பாலியல் இலஞ்சம் தொடர்பான அறிவு நிலையிலான இடைவெளிகளை குறைப்பதற்காக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) 2015 முதல் ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை அரசச் சேவையின் சுகாதார மற்றும் நீதித் துறைகளில் பரவலாக காணப்படுகின்ற பாலியல் இலஞ்சம் தொடர்பில் 2021/22 இல் ஒரு பண்புசார் கற்கையினை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் முன்னெடுத்தது. கொவிட்-19 பெருந்தொற்று, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து மேற்கூறப்பட்ட இரண்டு அத்தியாவசிய அரசச் சேவைகள் மேலும் தீர்மானமிக்கதாக கருதப்பட்டது.

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களிடையே பாலியல் இலஞ்சப் பாதிப்பு கடுமையாக இருப்பதையும், அது மாற்றுப்பாலின சமூகத்தினர் மீது மேலும் அதிகமாக காணப்படுகின்றது எனவும் இந்தக் கற்கை உறுதிப்படுத்துகிறது. பாலியல் தொழிலாளிகளும் பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகின்றனர் என்றும் கற்கையில் கண்டறியப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்கள், விளைவுகள் ஆழ்ந்த அதிர்ச்சிகரமானவை, சமூகக் களங்கம், பொருளாதார மற்றும் சமூக விளைவுகள் உட்பட பிற எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தினேஷா சமரரத்னவினால் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்துக்காக இந்தக் கற்கை மேற்கொள்ளப்பட்டது. எமது நிலையத்துடன் இணைந்து கற்கை முறையியலை வடிவமைத்து கற்கை அறிக்கையை தொகுத்து வழங்கியமைக்காக கலாநிதி சமரரத்னவுக்கு சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. மேலும் எம்முடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட நேர்காணலில் பங்கெடுத்தவர்களுக்கும் எமது நிறுவனம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

இந்தக் கற்கையினை முன்னெடுப்பதற்கு எமக்கு ஆதரவளித்த பல ஆலோசகர்களுக்கும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்த வெளியீடு கல்விசார் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பாலியல் இலஞ்சம் தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆர்வமுள்ள நிறுவனங்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் ஆகியோருக்குப் பயனுள்ளதாக விளங்கும் என்று நம்புகிறோம்.

ஷியாமளா கோமஸ்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்

# பொருளடக்கம்


## சொற்ச் சுருக்கங்கள் 8

## நிறைவேற்றுச் சாராம்சம் 9

## 1. அறிமுகம் 12

1.1. கற்கையின் குறிக்கோள்கள் 12
1.2. இலங்கை அரசு 13
1.3. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய பொதுவான நிலைமை 14
1.4. பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூகத்தின் நிலமை 14

## 2. சட்டக் கட்டமைப்பு 16

2.1. சர்வதேசச் சட்டம் 16
2.2. அரசியலமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் 17
2.3. இலஞ்சச் சட்டம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் 18
2.4. நீதி மற்றும் சட்ட அறிவுக்கான அணுகல் 20

## 3. பாலியல் இலஞ்சம் தொடர்பாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் பரிந்துரை 22

3.1. கடப்பாடு 22
3.2. இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பாக காணப்படும் அறிவுநிலை 22
3.3. அறிவுநிலை இடைவெளி 23

## 4. தரவு சேகரித்தல் முறையியல் 25

4.1. பண்புசார் கற்கைக்கான நியாயப்படுத்தல் 25
4.2. முறையியல் 25
4.3. கற்கை வடிவமைப்பு 25
4.4. மட்டுப்பாடுகள் 26
4.5. கற்கையை நடைமுறைப்படுத்தல் 27

## 5. பாலியல் இலஞ்ச நிகழ்வு தொடர்பான முடிவுகள் 29

5.1. தனிப்பட்ட பாதிப்பு 29
5.2. குடும்பம் மற்றும் சமூகம் மீதான பாதிப்பு 39
5.3. முறைசாரா ஆதரவு 42
5.4. சமூக மற்றும் கலாச்சாரக் காரணிகள் 42
5.5. பாலியல் இலஞ்சம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் கண்ணோட்டங்கள் 44
5.6. பாலியல் இலஞ்சக் குற்றமிழைத்தவரின் கண்ணோட்டங்கள் (பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரால் தெரிவிக்கப்பட்டவாறு) 47
5.7. ஒப்புதல் பற்றிய கண்ணோட்டங்கள் 50
5.8. நீதிக்கான அணுகல் 52

5.9. பயனுறுதியான பரிகாரங்களின் கிடைக்கும் தன்மை 53
5.10. தொடர்பாடல் தொழில்நுட்பத் துஷ்பிரயோகம் 57
5.11. பெருந்தொற்றினால் ஏற்பட்ட பாதிப்பு 60
5.12. ஏனைய சிந்தனைகள் 61
5.13. இலக்குக் குழுக் கலந்துரையாடல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனைகள் 62
5.14. பிரதான தகவலளிப்பவர் நேர்காணல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனைகள் 67

6. பாலியல் இலஞ்சத்தைத் தடைசெய்தல் தொடர்பாக அரசின் பொறுப்பு 72

6.1. மனித உரிமைகளின் ஒரு மீறலாகப் பாலியல் இலஞ்சம் 72
6.2. ஒரு குற்றவியல் தவறாகப் பாலியல் இலஞ்சம் 73
6.3. ஊழலாக பாலியல் இலஞ்சம் 73

7. முடிவுரை 76

8. பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் தொடர்பான பரிந்துரைகள் 78

8.1. தடுத்தல் 78
8.2. புலன்விசாரணை மற்றும் வழக்குத் தொடுத்தல் 80
8.3. பரிகாரம் 82


பின்னிணைப்புகள் 83

I: கற்கைக்காகப் பயன்படுத்திய வினாக்கொத்து 83
II: கற்கைக்காக அணுகிய நிறுவனங்களின் பட்டியல் 87
III: பண்புசார் நேர்காணல்களின் மேலோட்டப் பார்வை 88

உசாத்துணைகள் 93

# சொற்ச் சுருக்கங்கள்

| | |
|---|---|
| CEJ | சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் |
| CIABOC | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (சுருக்கமாக CIABOC என்றே குறிப்பிடப்படும்) |
| FGD | இலக்குக் குழுக் கலந்துரையாடல் |
| LGBQTI | ஓரினப் பாலீர்ப்புடையவர்கள், இருபாலீர்ப்புடையவர், பால்புதுமையினர், திருநங்கைகள், இடைப்பாலினர் (சுருக்கமாக LGBQTI என்றே குறிப்பிடப்படுவர்) |
| SGBV | பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை |



# நிறைவேற்றுச் சாராம்சம்


இலங்கையில் பாலியல் இலஞ்சம் வெளிப்படையான வகையில் குற்றமானதாக ஆக்கப்படவில்லை. அது இலஞ்சம் தொடர்பான சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட முடியும். ஆனாலும், நீதிமன்றங்களின் இறுதிப் பதிவுகளில் அவ்வாறு நடைபெற்றதாக அறிந்த வகையில் எந்தவொரு வழக்குப் பதிவுகளும் இல்லை. சர்வதேச ரீதியான உடன்படிக்கைகள் பாலியல் இலஞ்சம் அல்லது பாலியல் சலுகைக்கான மிரட்டலை மனித உரிமைகளின் ஒரு தீவிரமான பிரச்சினையாகவும் ஊழலின் ஒரு மோசமான வெளிப்பாடாகவும் அங்கீகரித்தது. பெண் நீதிபதிகளின் சர்வதேசச் சங்கத்தினால் அளிக்கப்பட்ட வரைவிலக்கணம் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் எனும் ஒரு சர்வதேச ஸ்தாபனம் ஆகிய இரண்டினாலும் இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில், பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு அதிகளவில் ஆளாகும் தன்மை கொண்ட ஆபத்துடையவர்களாக தனிப்பட்ட வகையில் அறியப்படுகின்றனர். ஆதலால் பாலியல் இலஞ்சத்திற்கும் அவர்கள் கூடுதல் ஆளாகுந்தன்மை கொண்ட ஆபத்து கொண்டவர்களாகின்றனர். இலங்கையிலுள்ள பெண்கள் சுகாதாரக் கவனிப்பு மற்றும் கல்வி என்பவற்றுக்கு ஒரு நியாயமான அணுகல் கொண்டவர்களாக உள்ளனர். எனினும், அவர்கள் அரசியல் மற்றும் கலாச்சார ரீதியாக ஓரங்கட்டப்படுவதனால், அவர்கள் பாரபட்சம் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கான ஆபத்திலுள்ளதுடன் அவர்கள் அவற்றுக்கு ஆளாகும் அபாயம் கொண்டவர்களாகவும் உள்ளனர். இலங்கையில், ‘இயற்கைக்கு மாறான’ பாலியல் நடவடிக்கைகளின் குற்றமயப்படுத்தல், பால்நிலைப் பன்மைத்துவம் மற்றும் பாலியல் ரீதியான சிறுபான்மையினருக்கான குறித்த பாதுகாப்பின்மை என்பன மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்களை சட்ட அமைப்புமுறை மற்றும் சமுதாயம் என்பவற்றின் விளம்புகளில் இட்டு வைத்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணங்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் பாலியல் இலஞ்ச சம்பவங்கள் தொடர்பாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் முந்தைய கற்கைகள் ஆராய்ந்தது. இந்தப் பிரதேசங்கள் மற்றும் குழுவினருக்கு அப்பாலும் பாலியல் இலஞ்சம் காணப்படுகின்றமை குறித்தான ஓர் அறிவுசார் இடைவெளி அங்கே இருந்தது. தற்போதைய கற்கை, இலங்கையின் மத்திய, மேல், தென், மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் பாலியல் இலஞ்ச நிகழ்வுகளை ஆராய்வதன் மூலம் அந்த இடைவெளிக்கு பதிலளிப்பதாக அமைகின்றது. அரசத் துறையிலுள்ள சுகாதாரம் மற்றும் நீதித் துறைகளில் பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களைப் பாதிப்பதனால், இந்த கற்கை அதன் மீது கவனம் செலுத்துகிறது. இது ஒரு பண்புசார் ஆய்வாகும், அது, தகவலளித்துப் பெற்ற ஒப்புதல் மற்றும் இரகசியத்தன்மை உட்பட ஆய்வுத் தார்மீகங்களுடன் இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டது. சுயமாகத் தம்மை இனங் காட்டிக் கொண்ட, பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் 19 பேர்கள் மற்றும் சுகாதாரம், நீதித் துறைகளில் இருந்து 12 முக்கிய தகவலளிப்போர்கள் இந்த கற்கைக்காக நேர்காணல் செய்யப்பட்டனர். ஒவ்வொரு துறைக்கும் பிரதான தகவளிப்பவர்களில் மூவர் முறையே பிரதேச மற்றும் தேசிய மட்டத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்பட்டனர். மேலும், 5 இலக்குக் குழுக் கலந்துரையாடல்களிலிருந்தும் உள்ளீடுகளை இந்த கற்கை பெற்றுக்கொண்டது.

பாலியல் இலஞ்சத்தின் தனிப்பட்ட வகையிலான பாதிப்பு தனிநபர் மீது கடுமையாக உள்ளது என்பதை கற்கை முடிவுகள் வெளிப்படுத்தின. அது அவர்களின் உடல் ரீதியான நேர்மையை மீறுகின்றதுடன் அவர்களது பொருளாதார உரிமையை அனுபவிப்பதற்கும் ஒரு தடையாகச் செயற்படுகிறது. உளவியல் ரீதியான தாக்கம் மிக மோசமானது என்பதைப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் எதிர்கொள்ள நேரிடும் மன அதிர்ச்சி மற்றும் களங்கம் போன்றன எடுத்துக்காட்டுகின்றன. மாற்றுப்பாலினச் சமூக உறுப்பினர்கள் பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகும் போது இந்தக் கடுமையான பின்விளைவுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தவையாகின்றன. பங்குபற்றியோர்களில் அநேகமானோர் இவ் கற்கைக்கு பங்களிப்பதற்கான வாய்ப்பினை தாங்கள் வரவேற்பதாக வெளிப்படையாகக் குறிப்பிட்டனர். இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் அநேகமானவர்கள் பாலியல் இலஞ்ச அனுபவம், அவர்களையும் அவர்களது நெருங்கிய குடும்பத்தினரையும் அவப்பெயரிற்குள்ளாக்கும் தன்மை பற்றிய கரிசனைகளின் காரணமாக அதனை ஒரு இரகசியமாக வைத்திருந்தனர். மேலும், பாலியல் இலஞ்சத்தைத்

தவிர்ப்பதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் அரசச் சேவைகளை அணுகுவதற்கான வழிவகைகளை கைவிட்டுவிடவோ அல்லது மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டிய காரணத்தினால், அது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் குடும்ப உறுப்பினர்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளது. 'வட்ஸ்அப்' போன்ற தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பல சந்தர்ப்பங்களில் பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரைத் தொடர்ந்து துன்புறுத்துவதற்கும் உபயோகிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பழைத்தவர்களில் அதிகமானவர்கள் தங்களது மன அதிர்ச்சியை சமாளிப்பதற்கு தொழில்முறை ரீதியான உதவியை நாடி வருவதில்லையென்பதுடன் அவர்களால் வரமுடிவதுமில்லை. ஆனாலும், சிலர் அவர்களது குடும்பங்கள் அல்லது சமூகத்திலுள்ள முறைசாரா முறைகள் மூலமாக சில ஆறுதல்களைப் பெற்றுக் கொண்டனர். பாலியல் இலஞ்சத்திற்கான ஒரு கடுமையான அழுத்தத்தின் மூலமாகவே, குற்றமிழைத்தவரால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் கோரிக்கைக்கு இணங்கி நிறைவேற்றுவதற்கு தாங்கள் ஒப்புதலளித்ததாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் பலர் தெரிவித்தனர். ஏனைய சிலர், குற்றமிழைத்தவர் தங்களது ஒப்புதலை ஒரு பொருட்டாகக் கூட நாடவில்லையெனக் குறிப்பிட்டனர். அவர்களின் கருத்துப்படி, அன்பைக் காண்பிப்பது போன்று நடிப்பதற்காக அல்லது பாலியல் நடவடிக்கைகளுக்கான ஒரு பரிவர்த்தனை ரீதியான அணுகுமுறையைக் கொண்டிருப்பதற்காக, குற்றமிழைத்தவர்கள் அவர்களை ஒரு பொருள் அல்லது பாண்டமாகப் பயன்படுத்தினர். பாலியல் இலஞ்சம் பற்றி வலுவான எதிர்மறைக் கண்ணோட்டங்களை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கொண்டுள்ளதுடன் தங்களது வாழ்க்கை மீது அதன் அழிவுரீதியான பாதிப்பையும் விபரித்தனர். ஒரு பயனுறுதியான பரிகாரத்தை சட்டம் தங்களுக்கு வழங்கும் என அவர்களில் பலர் நினைக்கவில்லை. உண்மையில், பாலியல் இலஞ்சம் குறித்து முறைப்பாடுகளை மேற்கொள்வதைக் கூட அவர்களுக்கு மிகவும் சிரமமாக்கியும் அதனால் சட்டத்தின் சமனான பாதுகாப்புக்கான அவர்களது உரிமையை தீவிரமாக மீறுவதால், சட்ட நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களைக் குற்றமிழைப்பவர்களைப் பாதுகாப்பவர்களாக அவர்கள் கருதினர். சில சம்பவங்களில் கொவிட்-19 பெருந்தொற்று பாலியல் இலஞ்சத்திற்கு கூடுதலாக ஆளாகும் ஆபத்துக் கொண்டவர்களாக அவர்களை ஆக்கியது. வேறு சந்தர்ப்பங்களில், நடமாடுவதற்காக காணப்பட்ட மட்டுப்பாடுகள் அவர்களுக்கு சில பாதுகாப்புகளை அளித்தது. பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் மீதான இந்த முடிவுகள், பல்வேறு மனித உரிமைகளை மதித்து பாதுகாப்பதிலும் மற்றும் அவற்றின் மீறுதல்களைத் தடுப்பதற்குமான அதன் பொறுப்பைப் பூர்த்தி செய்வதிலும் இலங்கை அரசு தவறியுள்ளதையே தெரிவிக்கின்றன.

பாலியல் இலஞ்சம் ஒரு முப்பரிமாணக் கட்டமைப்பு மற்றும் பதிலிறுப்பைத் தேவைப்படுத்துகிறது. அது ஊழலின் ஒரு வடிவமாக, மனித உரிமைகளின் மீறலாகவும் மற்றும் ஒரு குற்றவியல் நீதிப் பிரச்சினையாகவும் விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசு கவனத்தில் கொள்வதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தவர்களினால் அரசுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் குற்றமாக்குவதற்கான முறைகள், பயனுறுதியானதும், சுயாதீனமான புலனாய்வு, வழக்குத்தொடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான இழப்பீடுகளுக்கு ஏற்பாடளித்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது. சிவில் சமூகத்திற்கான பரிந்துரைகள் பாலியல் இலஞ்சத்தை தடுப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு மற்றும் பரிகாரமளிப்பதற்கும் அரசைக் கண்காணிப்பதற்கான முயற்சிகளை உள்ளடக்குகிறது. மேலதிகப் பரிந்துரைகள், தப்பிப்பிழைத்த பெண்கள் மத்தியில் ஒரு வலையமைப்புக்கான உதவி மற்றும் ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கானவையாகும். தனியார் துறை மற்றும் தொழில்சார் அமைப்புகளுக்கான பரிந்துரைகள் பாலியல் இலஞ்சத்தைத் தடை செய்வதற்கு தொழில்சார் நடத்தைக் கோவைகளின் மறுசீராய்வு மற்றும் ஒரு பயனுறுதியான முறைப்பாடுகள் மேற்கொள்ளும் பொறிமுறையை அளித்தல் மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பில் ஒரு முற்றிலும் சகித்துக்கொள்ள முடியாத ஒரு கொள்கையை ஏற்றுக்கொள்ளல் என்பவற்றை உள்ளடக்குகிறது. பாலியல் இலஞ்சம் தொடர்பான கள யதார்த்தங்களுக்கு செயல்திட்டங்கள் மற்றும் கொடையின் சுழற்சிகள் பயனுறுதியான வகையில் பதிலிறுப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. உள்ளூர் உரிமைத்துவங்கள் மற்றும் அனுசரித்துப் போதலை உறுதிப்படுத்தும் அதேவேளை, பாலியல் இலஞ்சத்தைக் கையாள்வதற்கான உலக விதிமுறைகள், கோட்பாடுகள் மற்றும் தரநியமங்களை உருவாக்குவதற்கு சர்வதேச ஸ்தாபனங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.



# 1. அறிமுகம்

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பன இலங்கைச் சமுதாயத்தில் கடும் கரிசனைகளுக்கு உரியவையாக உள்ளன. எனினும், அதன் நிகழ்வு மற்றும் செயற்பாடு என்பவற்றின் ஆய்வு ஆரம்ப கட்டங்களிலேயே உள்ளது. மேலும், இலஞ்சம் மற்றும் ஊழலின் சட்டவிரோதத் தன்மையைக் கவனத்தில் கொள்கையில், பரவலாகக் காணப்படுகின்ற பாலியல் இலஞ்சம் தொடர்பாக ஆய்வு செய்வது சவாலானது. கற்கை வடிவமைப்பு, அதன் தார்மீகம், ஒரு நடைமுறை ரீதியில் பங்குபற்றுவோர்களை இனங்காணுதல் மற்றும் தெரிவு செய்தல், தகவல்களைப் பெறுதல் மற்றும் நேர்காணல்களை நடத்துதல் ஆகியவற்றின் கண்ணோட்டத்திலிருந்து இந்தச் சவால்கள் எழுகின்றன. பூகோள மட்டத்தில், பாலியல் இலஞ்சத்தைக் கவனத்தில் கொள்வதற்கு ஒரு பிரத்தியேகமான மற்றும் இலக்கு கொண்டதுமான ஒரு அணுகுமுறையின் தேவை குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. பாலியல் இலஞ்சம் பல மட்டங்களிலான அடுக்குகள் மற்றும் முப்பரிமாணம் உடையதாகவும் அமைகிறது. அது, பாலியல் துன்புறுத்துதல் போன்ற பாலியல் வன்முறைகளின் ஏனைய வகைகள் மற்றும் ஊழல் என்பவற்றிலிருந்து வேறுபட்டதான ஒரு பாலியல் வன்முறையாகக் காணப்படுகிறது. அது ஒரு தனிநபரை இலக்கு வைக்கின்ற ஒரு குற்றமாகவும் மற்றும் மனித உரிமைகளின் ஒரு மீறலாகவும் உள்ளது. எனினும், இந்த அறிக்கையில் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளதன் படி, தனிநபரின் பால்நிலை அல்லது வகுப்பு அடையாளம் காரணமாக தனிநபரே அநேகம் இந்தக் குற்றத்திற்கு இலக்கு வைக்கப்படுகின்றார். மேலும், பாலியல் இலஞ்சம் புரையோடிப்போயுள்ள ஓர் ஊழல் கலாச்சாரத்தின் ஓர் காரணமாகவும், ஓர் அறிகுறியாகவும் அநேகமாக. பாலியல் இலஞ்சத்தைக் கவனத்தில் கொள்வதற்கு உள்நாட்டுச் சட்டம் (அடிப்படை உரிமைகளின் உத்தரவாதங்கள், குற்றவியல் சட்டம் மற்றும் ஊழலுக்கு எதிரான சட்டம்) மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பன ஒன்றாகவும் மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட வகையிலுமாகக் கருதப்படுதல் வேண்டும். பாலியல் இலஞ்சத்தைக் குற்றமாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு சர்வதேச மட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் இணக்கப்பாட்டினை உருவாக்கியுள்ளதுடன் இது தொடர்பில் அரசின் பொறுப்புகளையும் தெளிவுபடுத்தியது. தேசிய மட்டத்தில் பொதுச் சட்டம் (அரசியலமைப்புச் சட்டம், நிர்வாகச் சட்டம், மற்றும் குற்றவியல் சட்டம்) பாலியல் இலஞ்சத்தை ஊழலின் ஒரு வடிவமாக, அடிப்படை உரிமைகளின் உத்தரவாதங்கள், நிர்வாக நீதி என்பவற்றின் ஒரு மீறலாகவும், அதேபோன்று ஒரு பிரத்தியேகமான குற்றவியல் குற்றமாகவும் அங்கீகரித்தல் வேண்டும்.

இந்தச் சவால்கள் பாலியல் இலஞ்சம் தொடர்பான கற்கையில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் இடைக் கதைகளாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளின் திட்டமுறையிலான கற்கைகள், பங்களிக்கும் காரணிகள் என்பன குறிப்பிடும் வகையில் இல்லாதிருந்தன. பிரிவு 3 இல் கலந்துரையாடப்பட்டவாறு, சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், இந்த விடயம் தொடர்பாக பல்வேறு கற்கைத் தேடல்களை நடத்தியது. இந்த கற்கைகள், பாலியல் இலஞ்சத்தின் நிகழ்வுகள் தொடர்பான கதை வடிவிலான சான்றுகளை உறுதிப்படுத்தின.

## 1.1. கற்கையின் குறிக்கோள்கள்

இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முறைப்படுத்தப்பட்ட நான்காவது கற்கையாகும். அது பெண்கள் மற்றும் மாற்றுபாலின சமூகத்தினர் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்ற பாலியல் இலஞ்ச நிகழ்வுகளை ஆராய்வதற்கும் மற்றும் அதன் நிகழ்தலுக்குப் பங்களிக்கும் காரணிகளை இனங்காண்பதற்கும் வடிவமைக்கப்பட்டது. தற்போதைய இந்தக் கற்கையின் மூலமாக சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள், கல்வியியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் தங்களது பணிப் பரப்புகளில் பாலியல் இலஞ்சம் குறித்துக் கவனம் செலுத்த முடியுமான ஒரு சான்றுத் தளத்தை உருவாக்குவதற்கு சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் நோக்கம் கொள்கிறது. கற்கை முடிவுகளின் அடிப்படையில் கொள்கை மற்றும் சட்டச் சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் எதிர்பார்த்துள்ளது.. அதனால், இந்த கற்கையின் துணை இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் இலங்கையிலும் மற்றும் பூகோள அளவிலும் ஊழல் மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறையின் வடிவங்கள் தொடர்பான சமகால உரையாடல்களில் தலையிடுதல், இலங்கையில்

ஊழல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பவற்றின் ஒரு பிரத்தியேக மற்றும் தீவிரமான வடிவமாக பாலியல் இலஞ்சத்தை உள்ளடக்குவதற்கு பிரேரனை செய்தல், நாட்டில் பரவலாகக் காணப்படுகின்ற பாலியல் இலஞ்சம் தொடர்பான அறிதலைப் பரப்புரைத்தல், மற்றும் இலங்கையில் பாலியல் இலஞ்சம் நிகழ்கின்றமை குறித்து கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குதல் என்பவையாகும்.

இந்தக் கற்கையானது சுகாதார மற்றும் நீதித் துறைகள் மீது கவனம் செலுத்துகிறது. இலங்கையில் இலஞ்சத் தவறு அல்லது குற்றம் அரசத் துறைக்குப் பொருந்துகிறது. அரசத் துறையில், மக்களின் மனித உரிமைகள் குறித்த அரசின் பொறுப்புகளைப் பூர்த்தி செய்வதில் நடுநிலை வகிக்கின்ற நீதித் துறை ஆற்றிய முக்கிய வகிபாகத்தை கவனத்தில் கொண்டு பொதுவாகவும் மற்றும் கொவிட்-19 பெருந்தொற்றின் போதும் கூட அதன் முக்கிய வகிபாகத்தை கவனத்தில் கொண்டு செயற்பட்ட சுகாதாரத் துறையையும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் கற்கைக்காகத் தெரிவு செய்தது. அதாவது பராமரிப்பு பணியாளர்களாக, இல்லத்தரசிகளாக, மற்றும் நோயாளிகளாக அண்மைக் காலங்களில் கூடுதலான பெண்கள் இந்தத் துறையுடன் இடைவினையாற்றினர். மேலும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பாக கிடைக்கப்பெற்ற அதிகளவிலான முறைப்பாடுகள் பெண்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடும்போது பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களாக உருவாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகளவிலும் மற்றும் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கிறது. இரண்டு காரணங்களுக்காக மாற்றுப்பாலின சமூகத்தினரும் கூட இக் கற்கைக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். அதில் முதலாவது, சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் பணிகளில் பால்நிலை உள்ளடக்கம் காணப்படுகின்றமை மற்றும் இரண்டாவதாக இலங்கையில் தங்களது அன்றாட வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகளை இச்சமூகத்தினர் அனுபவிக்கிறார்கள் என்பது தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதனாலாகும்.[1]

## 1.2. இலங்கை அரசு

தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் நாளாந்த வாழ்க்கை முறையில் இலங்கை அரசு ஒரு வலுவான மற்றும் தனித்துவமான நிலையைக் கொண்டுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கு வலுவான சமூகக் குறிக்காட்டிகளைக் கொண்ட ஒரு நீண்ட வரலாற்றுடன் இலங்கை ஒரு பொதுநலன் பேணும் அரசாக உள்ளது. கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றை அரசு வழங்குகிறதுடன் உரம் மற்றும் எரிபொருள் உட்பட பல்வேறு மானியங்களையும் அளிக்கின்றது. 1960களில் அங்கீகரிக்கப்பட்ட காணிச் சீர்திருத்தக் கொள்கைகள் காரணமாக, இலங்கையில் சுமார் 80% காணிகள் அரசுக்குச் சொந்தமானவையாகும். மேலும், இலங்கை ஒரு பாரிய அரசத் துறைச் சேவையைக் கொண்டுள்ளதுடன் 500இற்கும் மேற்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை[2] உள்ளடக்குகிறது. இலங்கையில் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 1.1 மில்லியனாகும் (ஆயுதப் படைகள் நீங்கலாக).[3]

அதனால், அரசுடனான தனிப்பட்ட தலையீடுகள் வழமையானவையுடன் குறிப்பாக, வறுமை, வன்முறை மற்றும் பாரபட்சம் ஆகியவற்றின் ஆபத்திலுள்ள ஆட்களுக்கு அவை அவசியமானவையாகும். பொதுவாக, தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூக சேவைகளை தொடர்ச்சியாக அணுகுகின்றனர். கற்கைக்கு முன்னைய ஆறு மாதங்களில் 87.6% குடும்பங்கள் சுகாதார சேவைகளை அணுகினர், 54.9% குடும்பங்கள் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தை அணுகினர் மற்றும் 25.7% ஆனவர்கள் பொலிஸ் மற்றும் நீதிச் சேவைகளை அணுகினர் என ஓர் கற்கை கண்டறிந்தது.[4] அந்தக் கற்கையில் பங்குபற்றிய 52.3% ஆன பெண்கள் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முகங்கொடுத்த அனுபவத்தைக் கொண்டிருந்தனர்.[5] ஊழல் பரந்தளவில் காணப்படுகின்ற ஒரு அரசியல் கலாச்சாரத்தில் (அது, இலங்கை நிலைமை போல காணப்படுகின்றது), அரசில் தங்கியிருக்க வைப்பது பாலியல் இலஞ்சத்திற்கு ஆளாகும் ஆபத்தில் பல நபர்களை இட்டு செல்கின்றது.

[1] 'அறிவு, மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்கள் மதிப்பாய்வு அறிக்கை: பாலியல்தன்மை மற்றும் இலங்கையில் மாற்றுப்பாலின சமூகத்தவர்களின் அனுபவங்கள் பற்றி இலங்கைச் சமுதாயத்தின் பார்வைகள்' (சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2021) 'மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த இலங்கையர்களை பின்தங்க வைக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக மீள்சிந்தனை செய்தல்' (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் பவுண்டேஷன் 2021).

[2] இலங்கையில் அரச நிறுவனங்களின் நிலை - 2019 (அட்வோக்கட்டா நிலையம் 2019) 8.

[3] அரச மற்றும் பகுதிளவிலான அரசாங்கத்துறை தொழில்வாய்ப்புகளின் தொகைமதிப்பு - 2016 (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2018) 6.

[4] 'அரசச் சேவை ஊழலில் பெண்களின் அனுபவம்' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், இலங்கை, ஜுன் 2014)15-16.

[5] 'அரசச் சேவை ஊழலில் பெண்களின் அனுபவம்' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், இலங்கை, ஜுன் 2014) 15.

## 1.3. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய பொதுவான நிலைமை

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவை கட்டமைப்பு ரீதியான பிரச்சினையென பூகோள ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட குறிக்காட்டிகள் தெரிவிக்கின்றன. ஊழல் தொடர்பான தரப்படுத்தல் சுட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள 180 நாடுகளில் இலங்கை 102 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை 2021ஆம் ஆண்டில் 100இற்கு 37 புள்ளிகளையே பெற்றது.[6] (2020இலுள்ள தரவுகளின் மூலம்)[7] உலக ஊழல் நிலைக் குறிக்காட்டியின் படி, 79% ஆனவர்கள் அரசாங்க ஊழல் ஒரு 'பாரிய பிரச்சினை' என எண்ணுகின்றரெனவும், முந்தைய 12 மாதங்களில் அரசச் சேவைகளை நாடுகின்றவர்களில் 16% ஆனவர்கள் இலஞ்சம் கொடுத்திருந்தனர். சட்டமுறைமை இந்தப் பிரச்சினையைப் பயனுறுதியான வகையில் தடைசெய்யவோ அல்லது தீர்க்கவோ இல்லை. பாலியல் இலஞ்சம் சமுதாயத்திலுள்ள ஊழலின் ஒரு பிரத்தியேகமான வடிவமென அதன் மீது சிவில் சமூகம் மிக அண்மையில், தனது கவனத்தைச் செலுத்தியது.[8]

## 1.4. பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூகத்தினரின் நிலைமை

இலங்கையில் பெண்களின் நிலைமை என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்ட ஒரு முரண்பாடு கொண்டதாகும். அவர்கள் சட்டத்தின் சமனான பாதுகாப்பு, உயர்ந்த சமூக குறிக்காட்டிகள் மற்றும் முறைசார் வகையான சமத்துவத்தையும் அனுபவிக்கின்றனர். எனினும், அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் பரந்த சமுதாயத்தில் தலைமைத்துவ நிலைகளில் அவர்கள் மிகவும் குறைந்தளவிலேயே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனர். மேலும், இலங்கையின் ஆடைக் கைத்தொழில், பெருந்தோட்டத் துறை, மற்றும் புலம்பெயர் பணியாளர்களாக பெண்கள் சுரண்டப்படும் நிலைமைகளின் கீழேயே பணியாற்றுகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு தீவிர கரிசனைக்குரியதுடன் அதனை இலக்கு வைத்து சட்டங்கள் உருவாக்கப்பட்ட போதிலும் கூட வன்முறை தொடர்ந்து நிலவுகின்றது.

'இயற்கைக்கு மாறான தன்னிச்சையான வகையிலான உடலுறவு' மற்றும் 'ஏதேனும் முற்றிலும் அநாகரீகமான பாலியல் செயற்பாடு' என்பன இலங்கையில் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் (ஒரு காலனித்துவக் காலச் சட்டம்) குற்றமாக்கப்பட்டுள்ளன.[9] இந்த ஏற்பாடு பல்வகைப் பாலியல் விருப்புகளுடனான தனிப்பட்டவர்களை குறி வைப்பதற்கு உபயோகிக்கப்பட்டது.[10] இலங்கையில் தனியே எதிர்ப்பாலினத் திருமணங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பாலியல் தொழில் இடம்பெறும் விடுதிகளை நடத்துவது தவிர, இலங்கையில் பாலியல் தொழில் குற்றமாக்கப்படவில்லை.[11] எனினும், வேறுபட்ட பாலியல் ஈர்ப்புகள் மற்றும் வேறுபட்ட பால்நிலைகள் பாலியல் பணியாளர்களை கைது செய்வதற்கும் மற்றும் குற்றத் தீர்ப்பளிப்பதற்கும் இலங்கையில் அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் (மற்றொரு காலனித்துவச் சட்டம்) உபயோகிக்கப்பட்டது.[12] இவற்றின் பயனாக, இலங்கையில் பாலியல் தொழிலாளர்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்கள் கடுமையான அழுத்தங்களிற்கு உள்ளாகுவதுடன் ஆபத்துக்குள்ளாகும் தன்மை கொண்டவர்களாகவும் உள்ளனர்.

[6] 'ஊழல் நிலை குறிகாட்டி சுட்டி' ((டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், இலங்கை, 2022) 3.

[7] உலக ஊழல் நிலைக் குறிக்காட்டி 2019 இலங்கை (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 30

[8] உதாரணத்திற்கு பார்க்கவும், 'பாலியல் இலஞ்சம்: ஊழலின் மௌனிக்கப்பட்ட பக்கம்' செப்டெம்பர் 3, 2020, டெய்லி எ.்.ப்டி பத்திரிகை, https://www.ft.lk/Opinion-and-Issues/Sexual-bribery-The-silenced-side-of-corruption/14-705482 எனும் இணைய முகவரியில் கிடைக்கப் பெற்றது 'பிரதி பலன்: இலங்கையில் பாலியல் இலஞ்சத்தின் ஒரு ஆய்வு' டெய்லி எ.்.ப்டி பத்திரிகை (ஜனவரி 24, 2020) https://www.ft.lk/Opinion-and-Issues/Quid-pro-quo-A-study-of-sexual-bribery-in-Sri-Lanka/14-694260 இணையதள முகவரியில் அணுகப்பட்டது, 'பாலியல் சலுகைக்கான மிரட்டல்: ஒரு புதிய பெயர், ஒரு பழைய குற்றம்' சிலோன் இன்டிபென்டன்ட் ஜனவரி 4, 2020 (http://www.independent.lk/sextortion-a-new-name-an-age-old-crime/ இல் அணுகப்பட்டது)

[9] 1883 ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 365 மற்றும் 365 'அ'. இந்தக் குற்றம் 10 வருடங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையினால் தண்டிக்கப்படத் தக்கது.

[10] அறிவு, மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்கள் தொடர்பான மதிப்பாய்வு அறிக்கை: பாலியல்தன்மை மற்றும் இலங்கையில் மாற்றுப்பாலின நபர்களின் அனுபவங்கள் பற்றி இலங்கைச் சமுதாயத்தின் பார்வைகள்' (சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2021) 'மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த இலங்கையர்களை பின்தங்க வைக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீள்சிந்தித்தல்' (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் பவுண்டேஷன் 2021).

[11] திருத்தியமைக்கப்பட்டவாறான 1889 ஆம் ஆண்டின் பாலியல் தொழிலாளர் விடுதிகள் கட்டளைச் சட்டம்.

[12] திருத்தியமைக்கப்பட்டவாறான 1841 ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம்



# 2. சட்டக் கட்டமைப்பு

## 2.1. சர்வதேசச் சட்டம்

சர்வதேச ரீதியில் அதிகரித்துவருகின்ற பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களைக் குறிவைக்கின்ற இலஞ்சம் மற்றும் ஊழலின் ஒரு தனித்துவமான வடிவமாக பாலியல் இலஞ்சமானது அங்கீகரிக்கப்படுகின்றது.

பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சமவாயம் (CEDAW) பெண்களுக்கு கணிசமான சமத்துவம் உத்தரவாதமளிக்கப்படல் வேண்டுமென அரச தரப்புகளை தேவைப்படுத்துகின்றதுடன் அது பெண்களுக்கு எதிரான எதிரான வன்முறைகள் மீது ஒரு தடையை உள்ளடக்க வேண்டுமெனவும் பொருள் கொள்ளப்படுகிறது. பாலியல் இலஞ்சம் ஒரு வடிவிலான பாலியல் வன்முறை எனவும் அது பெண்களுக்கான கணிசமான சமத்துவத்தை (அல்லது வாய்ப்புகளின் சமத்துவத்தை) மீறுகின்றதாக பாலியல் இலஞ்சம் தொடர்பான கற்கைகள் காண்பிக்கின்றன. குற்றமிழைப்பவர்கள் அநேகமானவர்களின் சுய அடையாளம் ஆண்களாகவும் மற்றும் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களில் அநேகமானவர்களின் சுய அடையாளம் பெண்களாகவும் உள்ளதினால், அது பெண்களுக்கு எதிரான திட்டமுறையான மற்றும் கட்டமைப்பு ரீதியான பாரபட்சம் என்பதற்கு சான்றாக அமைகிறது. எனினும், வன்முறையைப் போன்று, பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்கான சமவாயத்தில் பாலியல் இலஞ்சம் வெளிப்படையான வகையில் தடைசெய்யப்படவில்லை.

பாலியல் இலஞ்சத்தை ஒரு விசேடமான மனித உரிமை மீறலாக, குற்றவியல் தவறாக, மற்றும் ஊழலின் வடிவமாக அங்கீகரித்த முதலாவது சர்வதேச அமைப்பாக பெண் நீதிபதிகளின் சர்வதேச சங்கம் விளங்குகின்றது. இந்தத் தோற்றப்பாட்டை விபரிப்பதற்கு அவர்கள் உபயோகித்த வார்த்தை 'பாலியல் சலுகைக்கான மிரட்டல்' (Sextortion) என்பதாகும். 'பாலியல் சலுகைக்கான மிரட்டலுக்கு' எதிரான அவர்களது கருவித் தொகுதி அதனை, ஒரு பாலியல் பகுதி மற்றும் ஒரு ஊழல் பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டதாக உள்ளது என விபரிக்கின்றது. அவர்களின் கருத்துப்படி, 'ஒரு அரசாங்க நன்மைக்கான பரிமாற்றத்தில் பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு வெளிப்படையான அல்லது மறைமுகமான ஒரு வேண்டுகோளுடன் பாலியல் சலுகைக்கான மிரட்டல் சம்பந்தப்படுகிறது'.[13] பாலியல் சலுகைக்கான மிரட்டலில் ஓர் அதிகாரத் துஷ்பிரயோகம், ஒரு பிரதி பலன் உள்ள பரிவர்த்தனை, உடல் ரீதியான பலப்பிரயோகத்தை விட உளரீதியான நிர்ப்பந்தம் என்பவை சம்பந்தப்படுகின்றன.[14] குறிப்பாக, நடைமுறையிலிருக்கும் சட்டங்களின் கீழ் பாலியல் சலுகைக்கான மிரட்டலை வழக்கு நடவடிக்கைகளில் உட்படுத்துவதின் சவால்களை அவர்கள் குறிப்பிடுகின்றனர். பாலியல் தவறுகள் அல்லது குற்றங்களின் தற்போதைய வரைவிலக்கணங்களில் ஒப்புதலில்லாமை ஓர் அத்தியாவசிய பகுதியாக உள்ளது. உடல் ரீதியான காயம் அல்லது உடல் ரீதியான பலவந்தப்படுத்தலின் சான்று அங்கே ஒப்புதலில்லாமையை நிரூபிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. பாலியல் இலஞ்சம் ஒரு பிரத்தியேகமான குற்றம் மற்றும் அது ஒப்புதலுடன் நிகழலாம் (பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் அவரது இடருக்குள்ளாகும் ஆபத்தின் காரணமாக வேறு வழியின்றி, கோரப்பட்ட பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அநேகமான நிலைமைகளில் தள்ளப்படுகின்றனர்) என்பதால் உடல்ரீதியான தீங்கு அங்கே இல்லாதிருக்கலாம், என அவர்களது அறிக்கை விபரிக்கிறது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான முன்னணி சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனமான டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், 'பாலியல் சலுகைக்கான மிரட்டலை' அடையாளம் காண்கிறது. 'பணத்திற்குப் பதிலாக, பாலுறவு அல்லது பாலியல் நடத்தை இலஞ்சத்திற்கான நாணயமாக அங்கே உள்ளது என அவர்கள் குறிப்பிடுகின்றனர். இது, சில நாடுகளுக்கு அல்லது சில துறைகளுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்படவில்லை, ஆனால் நேர்மையில்லாது அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள மற்றும் அவர்களின் அதிகாரத்தில் தங்கியிருக்கும் நலிவுற்ற நிலையிலுள்ளவர்களை பாலியல்

[13] பொருத்தமில்லா வகையில் பெயரிட்டு அழைத்தல், கேலி பண்ணுதல் மற்றும் பாலியல் சலுகைக்கான மிரட்டலுக்கு முடிவுகட்டுதல்: கருவித் தொகுதி (பெண் நீதிபதிகளின் சர்வதேச அமைப்பு 2012)9

[14] பொருத்தமில்லா வகையில் பெயரிட்டு அழைத்தல், கேலி பண்ணுதல் மற்றும் பாலியல் சலுகைக்கான மிரட்டலுக்கு முடிவுகட்டுதல்: கருவித் தொகுதி (பெண் நீதிபதிகளின் சர்வதேச அமைப்பு 2012)9-11

ரீதியாகத் துஷ்பிரயோகிக்க முயற்சிக்கும் இடமெல்லாவற்றிலும் காணப்பட முடியும்'.[15] சட்டத் தொழிலுக்கான உலக தொழில்சார் அமைப்பான சர்வதேச சட்டத்தரணிகள் சங்கமும் கூட பாலியல் இலஞ்சத்தை தீவிர கரிசனைக்குரியதொன்றாக அடையாளம் கண்டுள்ளது. அவர்களும் கூட பெண் நீதிபதிகளுக்கான சர்வதேச சங்கத்தால் உருவாக்கப்பட்ட வரைவிலக்கணத்தை ஏற்றுக் கொண்டனர்.[16]

தற்போது, சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களில் பாலியல் இலஞ்சம் அல்லது பாலியல் சலுகைக்கான மிரட்டலுக்கு எதிராக வெளிப்படையான தடைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. ஊழலைத் தடை செய்தல் மற்றும் எதிர்த்துப் போராடுதல் தொடர்பாக ஆபிரிக்க ஒன்றிய உடன்படிக்கை 'ஊழல் என்பது ஒரு அரசத் துறை உத்தியோகத்தர், தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்குட்பட்டு ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு அல்லது மேற்கொள்ளாது தவிர்ப்பதற்கான பரிமாற்றத்தில், தனக்காக அல்லது மற்றொரு நபர் அல்லது நிறுவனத்திற்காக, பணப் பெறுமதி கொண்ட ஏதேனும் பொருட்கள், அல்லது ஒரு வெகுமதி, சலுகை, வாக்குறுதி அல்லது அனுகூலம் போன்ற வேறு நன்மைகளை அவருக்கு அல்லது வேறு யாரேனும் நபருக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகக் கோருதல் அல்லது ஏற்றுக்கொள்ளல்' என அங்கீகரிக்கிறது.[17] ஐக்கிய நாடுகளின் இரண்டு உடன்படிக்கைகளான, 2004இல் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை, மற்றும் நாடுகடந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை என்பவையும் கூட பாலியல் இலஞ்சத்தை உள்ளடக்குபவையாக பொருள் கொள்ளப்பட முடியும். இந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழலின் ஒரு வரைவிலக்கணம் கீழே தரப்பட்டுள்ளது.

'தனது உத்தியோகபூர்வக் கடமைகளைப் புரிகையில் உத்தியோகபூர்வமாகச் செயற்படுவது அல்லது செயற்படுவதிலிருந்து விலகியிருக்கும் பொருட்டு, ஒரு அரசத் துறை உத்தியோகத்தர் தமக்காக அல்லது மற்றொரு நபர் அல்லது நிறுவனத்திற்காக ஒரு முறையற்ற அனுகூலத்தை, நேரடியாக அல்லது மறைமுகமாகக், கோருதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்'[18]

(அ) தனது உத்தியோகபூர்வக் கடமைகளை புரிகையில் உத்தியோகபூர்வமாகச் செயற்படுவது அல்லது செயற்படுவதிலிருந்து விலகியிருக்கும் பொருட்டு, ஒரு அரசத் துறை அலுவலர் தமக்காக அல்லது மற்றொரு நபர் அல்லது நிறுவனத்திற்காக ஒரு முறையற்ற அனுகூலத்தை, நேரடியாக அல்லது மறைமுகமாக ஒரு அரசத் துறை உத்தியோகத்தருக்கு வழங்கும் அல்லது அளிக்கும் வாக்குறுதி

(ஆ) தனது உத்தியோகபூர்வக் கடமைகளை புரிகையில் உத்தியோகபூர்வமாகச் செயற்படுவது அல்லது செயற்படுவதிலிருந்து விலகியிருக்கும் பொருட்டு, ஒரு அரசத் துறை உத்தியோகத்தர் தமக்காக அல்லது மற்றொரு நபர் அல்லது நிறுவனத்திற்காக ஒரு முறையற்ற அனுகூலத்தை, நேரடியாக அல்லது மறைமுகமாகக், கோருதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல்[19]

இலங்கை இந்த உடன்படிக்கைகளை முறையே 2004 மற்றும் 2006இல் ஏற்று வலுவளித்தது.

## 2.2. அரசியலமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகள்

இலங்கை அரசியலமைப்பு 2001இலிருந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை (CIABOC) அங்கீகரிக்கிறது. 2015இல் அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் மூலம் இவ் ஆணைக்குழுவானது அரசியலமைப்பிற்குள் உள்ளிணைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கை மற்றும் 'இலங்கை ஒரு தரப்பாக உள்ள ஊழலைத் தடை செய்வது தொடர்பான ஏதேனும் வேறு சர்வதேச உடன்படிக்கைகளின் நடைமுறைப்படுத்தலுக்கு பாராளுமன்றத்தின் கடப்பாடு குறித்த பிரத்தியேகமான கவனத்தையும் திருத்தம் குறிப்பிட்டது.[20] இலங்கையில் இலஞ்சம்

[15] பாலியல் சலுகைக்கான மிரட்டலைச் சுற்றியுள்ள மௌனத்தை உடைத்தல்: அதிகாரம், பாலுறவு மற்றும் ஊழல் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள் 8 (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் 2020)

[16] பாலியல் சலுகைக்கான மிரட்டல்: ஊழல் மற்றும் பாலியல் சுரண்டலின் ஒரு குற்றம் (சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் 2019)

[17] உறுப்புரை 4 (1)(அ) ஊழலைத் தடைசெய்தல் மற்றும் எதிர்த்துப் போராடுதல் தொடர்பான ஆபிரிக்க ஒன்றிய உடன்படிக்கை 2003

[18] உறுப்புரை 15(ஆ) ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை 2004

[19] உறுப்புரை 8(1) நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை 2000

[20] இலங்கை அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் உறுப்புரை 156 அ(1)(இ)

மற்றும் ஊழல் பிரச்சினையைக் கவனத்தில் கொள்வதற்கு அரசின் பொறுப்புக்கு எப்போதுமான மிகவும் உயர்ந்த அங்கீகாரம் இதுவாக இருந்தது. 2020இல் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் மூலம் இந்த உறுப்புரை நீக்கப்பட்டது.

அரசியலமைப்பின் கீழ் சமத்துவத்திற்கான உரிமை எதேச்சாதிகார நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கைகள் மீதான ஒரு தடையை உள்ளடக்குவதற்கு நீதித்துறையால் பொருள்கோடல் செய்யப்பட்டது. அப்போது சமத்துவத்தின் புதிய கோட்பாடு'[21] என அறியப்பட்ட இந்திய சட்டவியலைப் பின்பற்றி, இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்த சட்டவியல் உருவாக்கப்பட்டது. மேலும், 2016இல், முதல் தடவையாக, மனோகரி பல்லேகெட்டிய வழக்கில் உயர் நீதிமன்றம் பாலியல் துன்புறுத்தலை பாரபட்சத்திலிருந்து சுதந்திரமாயிருப்பதற்கான உரிமையின் ஒரு மீறலென அங்கீகரித்தது.[22] அந்த வழக்கில், உயர் நீதிமன்றம், முதல் தடவையாக, பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவிலான பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் தொடர்பான சமவாயத்திற்கு மேற்கோள் காட்டியது.

## 2.3. இலஞ்சச் சட்டம் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்

1954ஆம் ஆண்டின் இலஞ்சச் சட்டம் இலங்கையில் இலஞ்சத்தை குற்றமாக்குகிறது. இந்தச் சட்டம் பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் குற்றமாக்கவில்லை. அரசச் சேவையொன்றைப் பெறுவதற்காகவோ அல்லது அரசச் சேவையின் நிறைவேற்றத்தினைத் தூண்டுவதற்காகவோ 'அவாநிறைவைக்' (gratification) கோருதல் அல்லது அளித்தல் ஓர் இலஞ்சமாகும் என இலஞ்சச் சட்டம் அறிவிக்கிறது.[23] சட்டம் 'அவாநிறைவை' விரிவான வகையில் வரையறுக்கிறது.[24] இலஞ்சச் சட்டத்தின் கீழ் 'அவாநிறைவு' அதன் பரந்த அர்த்தத்தின் கீழ் உபயோகிக்கப்பட்டது என 1998இல் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது. பாலியல் உடலுறவுக்கான 'ஏக்கம், மனம் மற்றும் உடல் ரீதியான ஆசைகளின் ஒரு உதாரணமாகும். அதன் திருப்தி அவாநிறைவு, அது பணத்தில் மதிப்பிடப்பட முடியாதது.'[25] தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஓர் ஆண் சிரேஷ்ட பாதுகாப்பு முகாமையாளர் ஒரு பெண் பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து பாலியல் இலஞ்சம் கோரியதற்காக இலஞ்சச் சட்டத்தின் கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கு இதுவாகும். இலங்கையில், பாலியல் இலஞ்சம், இலஞ்சச் சட்டத்தின் கீழ் வருவதாக அங்கீகரிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்ட ஒரேயொரு வழக்கு இதுவாகும். அதனால், பாலியல் இலஞ்சம் மீதான ஒரு தடையை இலஞ்சச் சட்டம் உள்ளடக்குகிறது என சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் மற்றும் நீதித்துறையும் பொருள் கொள்வது சாத்தியமாகும். பாலியல் இலஞ்சம் தொடர்பில் வெற்றிகரமான முறையில் வழக்குத் தொடரப்பட்ட வேறு சந்தர்ப்பங்கள் அறிந்த வகையில் இல்லை. எனினும், பாலியல் இலஞ்சம் தொடர்பாக தொடர்ந்தும் முறையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாலியல் இலஞ்சத்தின் மறைமுகமான தடைசெய்தல் போதுமானதல்ல மற்றும் பயனுறுதியற்றது என்பதை இது தெரிவிக்கிறது. மேலும், இலஞ்சச் சட்டத்தின் கீழ் ஒரு பாலியல் இலஞ்சத்தைக் கோரும் அரச உத்தியோகத்தர் மற்றும் அதே போன்று அவாநிறைவினை அளிக்கும்

[21] இது தொடர்பில், தினேஷா சமரரட்ன, சட்டவியல் கடன் வாங்கல் மற்றும் ஊடுருவும் செல்வாக்குகள்: இலங்கை பொதுச் சட்டத்தில் இந்திய சட்டவியல் 2(3) (2018) இந்திய சட்ட விமர்சனம் 205

[22] மனோகரி பல்லேகெட்டிய எதிர் செயலாளர், கல்வி அமைச்சு SC/FR 76/2012, உயர் நீதிமன்றக் குறிப்புகள், செப்டெம்பர் 28, 2016.

[23] திருத்தப்பட்டவாறான 1954ஆம் ஆண்டின் இலஞ்சச் சட்டம்.

[24] இலஞ்சச் சட்டத்தின் பிரிவு 90.

[25] கதுப்டீன் எதிர் இலங்கைக் குடியரசு [1998] 3 இலங்கை107, 117. நீதிமன்றம் எச்.எஸ்.கவரை (H S Gour) மேற்கோள் காட்டியது, இந்திய தண்டனைச் சட்டம், (இந்திய சட்டப் பதிப்பகத்தர்கள்) தொகுதி 1 (தீர்ப்பில் பதிப்பு குறித்துரைக்கப்படவில்லை).

[26] உதாரணத்திற்கு, இலஞ்சச் சட்டத்தின் பிரிவு 19 பின்வருமாறு ஏற்பாடளிக்கிறது: '(அ) ஓர் அரச உத்தியோகத்தர் ஏதேனும் உத்தியோகபூர்வ செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு அல்லது அதன் நிறைவேற்றுதலிருந்து விலகியிருப்பதற்கு அந்த அரச உத்தியோகத்தருக்கான ஒரு ஊக்கியாக அல்லது ஒரு வெகுமதியாக அல்லது அந்த அரச உத்தியோகத்தரினாலோ அல்லது வேறேவரேனும் அரச உத்தியோகத்தரினாலோ ஏதேனும் உத்தியோகபூர்வ நடவடிக்கையின் நிறைவேற்றத்தை விரைவுபடுத்தல், இடையூறு செய்தல் அல்லது தடுத்தல் அல்லது அரசாங்கத்துடனான ஏதேனும் காரியத்தின் பரிவர்த்தனையில் யாரேனும் நபருக்கு உதவுதல், ஆதரவளித்தல், இடையூறு செய்தல் அல்லது தாமதப்படுத்தல் என்பவற்றுக்காக ஓர் அரச உத்தியோகத்தருக்கு ஏதேனும் அவாநிறைவினை அளிக்க முன்வருகின்ற, ஒருவர், அல்லது (ஆ) ஒரு அரச உத்தியோகத்தராக இருந்து கொண்டு, ஏதேனும் உத்தியோகபூர்வக் கடமையை அவர் நிறைவேற்றுவதற்கு அல்லது நிறைவேற்றுதலிருந்து விலகியிருப்பதற்கு ஒரு ஊக்கியாக அல்லது வெகுமதியாக அல்லது அந்தப் பிரிவின் பந்தி (அ)இல் குறிப்பிட்டவாறு அந்த விரைவுபடுத்தல், தாமதித்தல், இடையூறு செய்தல், தடுத்தல் உதவுதல் அல்லது ஆதரவளித்தல் என்பவற்றுக்காக ஏதேனும் அவாநிறைவினைக் கோருகின்ற அல்லது ஏற்கின்ற, ஒருவர், அல்லது (இ) ஒரு அரச உத்தியோகத்தராக இருந்து கொண்டு ஏதேனும் அவாநிறைவினைக் கோருகின்ற அல்லது ஏற்கின்ற, ஒருவர், ஏழு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான கடூழிய மறியல் தண்டனை மற்றும் ஐயாயிரம் ரூபாய்களுக்கு மேற்படாத ஒரு அபராதத்துடன் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்கான குற்றப் பொறுப்புடையவராவர்

தனிநபர் மீதும் வழக்குத் தொடரப்பட முடியும்.[26] இந்த ஏற்பாடு, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் முறைப்பாடுகள் மேற்கொள்வதைத் தடுக்க முடியும். அத்தோடு இது, முறைப்பாடுகளை மேற்கொள்வதிலிருந்து தடுப்பதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்துவதற்கும் குற்றமிழைத்தவர்களால் சாதகமான வகையில் எடுத்துக் கொள்ளப்படவும் முடியும்.

மேலும், பாலியல் இலஞ்சங்கள் அவாநிறைவின் ஒரு வடிவமாக கருதப்பட முடியுமென இலங்கையின் மேல் நீதிமன்றம் அங்கீகரித்ததையும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டது.[27] குறிப்பாக பாலியல் இலஞ்சத்தைக் குற்றமாக்குவதற்கு அக்கறை கொண்டவர்களுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்ததுடன் இந்தச் சட்டத்திற்கான திருத்தங்களுக்காகப் பரிந்துரைத்தது.[28] சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் உரையாடல்கள், பரிந்துரைத்தல், சட்டச் சீர்திருத்தத்திற்கான ஆதரவு போன்ற இந்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

1994ஆம் ஆண்டின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், இலஞ்சச் சட்டத்தின் கீழான தவறுகளைப் புலன்விசாரணை செய்வதற்கும் மற்றும் வழக்குத்தொடர்வதற்கும் ஆணைப்படுத்தப்பட்ட ஓர் ஆணைக்குழுவை ஸ்தாபிக்கிறது.[29] இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடை செய்தல் மற்றும் வழக்குத்தொடுத்தலில் ஆணைக்குழுவின் பயனுறுதித்தன்மை அதன் சுயாதீனம், சட்ட அதிகாரம், மற்றும் பரந்தளவில் குற்றவிலக்களிப்பு அரசியல் கலாசாரம் தொடர்பான விடயங்கள் உட்பட பல காரணிகளால் முட்டுக்கட்டையிடப்பட்டன.[30] மிக அண்மையில், இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதில் ஆணைக்குழுவின் முயற்சிகள் தேசிய செயல் திட்டம் (2019-2023) ஒன்றின் அங்கீகரித்தல், கருத்து முரண்பாடு மற்றும் அத்தோடு பொதுமக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அதன் பணியாளர்களுக்கான பயிற்சி என்பவற்றுக்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் உட்பட அபிவிருத்தி வழிகாட்டல்களையும் உள்ளடக்கியது. தேசிய செயல் திட்டம், பாலியல் இலஞ்சத்தை கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு பிரத்தியேகமான பிரச்சினையாக அங்கீகரிக்கவில்லை. தேசிய செயல் திட்டத்திற்கு மேலதிகமாக, சட்டச் சீர்திருத்தங்களுக்கான பிரேரணைகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு பிரசுரித்தது. இந்தப் பிரேரணைகளுள், இலஞ்சச் சட்டத்தின் கீழ் அவாநிறைவின் ஒரு பிரத்தியோக வடிவமாக பாலியல் இலஞ்சம் வரைவிலக்கணப்படுத்தப்படல் வேண்டுமென ஆணைக்குழு உத்தேசித்தது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு பாலியல் இலஞ்சத்திற்காக பின்வரும் வரைவிலக்கணத்தைப் பிரேரிக்கின்றது:

‘

... [அ] அதிகாரம் அல்லது கட்டுப்பாட்டைக் கொண்ட நபர்கள், அந்த அதிகாரம் அல்லது கட்டுப்பாட்டை பிரயோகிப்பதில் பாலியல் சலுகைகளைக் கோரியமை அல்லது பெற்றுக்கொண்டமை அந்த சலுகைகள் தொழில்வாய்ப்பு, ஒரு பதவியுயர்வு, ஓர் உரிமை, ஒரு சிறப்புரிமை அல்லது ஏதேனும் வேறு

[27] இலங்கையில் பாலியல் இலஞ்சத்தைக் கவனத்தில் கொள்வதற்கு சட்டம் மற்றும் கொள்கையைத் திருத்துதல் என்பதில் காட்டப்பட்டவாறு இலங்கை எதிர் அப்துல் ரசாக் கதுப்டீன் (சமத்துவம் மற்றும் நீதிக்க்கான நிலையம் வருடம்) 7. அத்தோடு பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் தொடர்பான ஆணைக்குழு பற்றி எதிர்க் கட்சித் தலைவரின் அறிக்கையிலும் குறிபிட்டுக் காட்டப்பட்டது. (டிசம்பர் 2014) 48 (http://gbvforum.lk/r-library/document/ Report%20of%20the%20Leader.pdf எனும் இணையதள முகவரியில் கிடைக்கப்பெறும்).

[28] இலங்கையில் பாலியல் இலஞ்சத்தைக் கவனத்தில் கொள்வதற்கு சட்டம் மற்றும் கொள்கையைத் திருத்துதல் (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் 2018).

[29] 2001இல், இந்த ஆணைக்குழுவின் சுயாதீனம் அரசியலமைப்பிற்கான 17ஆவது திருத்தம் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டது. இந்தத் திருத்தம் CIABOC உட்பட பிரத்தியேகமான நியதிச்சட்டமுறை ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படுபவர்களைப் பிரேரிப்பதற்கு ஒரு அரசியலமைப்புப் பேரவையை ஸ்தாபித்தது. இந்த அரசியலமைப்புப் பேரவை 18ஆவது திருத்தத்தின் கீழ் (2010) இரத்துச் செய்யப்பட்டு, 19ஆவது திருத்தத்தின் கீழ் (2015) ஒரு மறுசீரமைக்கப்பட்ட வடிவில் மீளவும் ஸ்தாபிக்கப்பட்டதுடன் மீண்டும் 20ஆவது திருத்தத்தின் கீழ் (2020) இரத்துச் செய்யப்பட்டது. அரசியலமைப்புப் பேரவை ஊடாக CIABOCஇற்கு நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட காலங்களில் கூட, ஆணைக்குழு பாரியளவிலான இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச் சார்த்துதல்களை ஒரு பயனுறுதியான வகையில் கையாள்வதில் வினைத்திறனுடன் இருக்கவில்லை.

[30] 2019இல், ஆணைக்குழுவின் நிறைவேற்றுகை அறிக்கையின் படி, ஆணைக்குழு வெற்றிகரமாக 46 வழக்குகளைத் தொடுத்தது. இவற்றுள், ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானி தொடர்பான வழக்கு அதிக கவனத்தை ஈர்க்கும் உயர் மட்டத்திலானதாக இருந்தது, ஏனையவை சிறிய மட்டத்திலான உத்தியோகத்தினர்களுடையவையாக இருந்தன. ஆனாலும், குற்றம் சார்த்தப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். நிறைவேற்றுகை ஆண்டறிக்கை (CIABOC 2019) 18

சேவை, சலுகை அல்லது அனுகூலம் என்பவற்றை அளிப்பதற்கான ஒரு நிபந்தனையாக கோரப்படுகின்றன. ஒரு 'பாலியல் சலுகை' என்பது உடலுறவு, அல்லது உடலுறவுக்கு சமனானதாக அமையாத, ஆனால் உடல் ரீதியான, வாய்மொழி மூலமான, அல்லது வாய்மொழி மூலமானதாக அல்லாத பாலியல் தன்மையான நடவடிக்கைக்கு சமனான அல்லது அதனை உருவமைக்கும் ஏதேனும் நடவடிக்கையாகவும் இருக்கலாம்.’[31]

## 2.4. நீதி மற்றும் சட்ட ரீதியான அறிவுக்கான அணுகல்

இலங்கையில் நீதி மற்றும் சட்ட ரீதியான அறிவுக்கான அணுகல் தொடர்பில் கணிசமான முன்னேற்றம் தேவைப்படுத்துகிறது. அரசினால் நிதியளிக்கப்படும் சட்ட உதவி தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் சில சிவில் சமூக அமைப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட சட்ட உதவிச் சேவைகளை வழங்குகின்றன.[32] மனித உரிமைகள் ஆணைக்குழு நாடு முழுவதிலுமாகப் பல்வேறு கிளைகளைக் கொண்டுள்ளதனால் அணுகமுடியுமான நீதித்துறை சாரா ஒரு பரிகாரம் கிடைக்கக்கூடியதாக உள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைகளை மாத்திரமே வழங்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அவை சட்டக் கட்டளை ஒன்றின் வலுவைக் கொண்டிருக்க மாட்டாது. மேலும், காலத்திற்கு காலம், ஆணைக்குழு நியமிக்கப்படுவதற்கான செயன்முறை அரசியல்மயப்படுத்தப்பட்டு, ஆணைக்குழுவின் சுயாதீனம் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டதுடன் ஒவ்வொரு தடவையும் அது கேள்விக்கு உள்ளானது.[33]


எனினும், ஓர் அடிப்படை உரிமை மீறல் அல்லது உடனடி உரிமை மீறல் என்பதைக் கோரும் மனுக்கள் ஒரு மாத காலத்திற்குள் கொழும்பில் அமைந்துள்ள உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்.[34] மேலும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இலங்கையின் வேறு பகுதிகளில் எங்கும் கிளைகளில்லாது கொழும்பில் மட்டுமே அமைந்துள்ளது. இலங்கையில் சட்ட ரீதியான அறிவு ஒரு முறைமைசார் கற்கையினூடாக அளவிடப்படவில்லை. சட்டம் தொடர்பான அறிவின்மை, அச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பரிகாரங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் சட்ட ஆலோசனையை அணுகுவதற்கான வழிமுறையின்மை பாலியல் இலஞ்சம் உட்பட மனித உரிமைகளின் மீறல்களுக்கு உள்ளாகும் நபர்களை மேலும் வலுவற்றவர்களாக்கும் தாக்கத்தைக் கொண்டுள்ளது.

[31] 'உத்தேசிக்கப்பட்ட சட்டத் திருத்தங்களுக்கான கொள்கை ஆலோசனைகள்', கைநூல் 4 (CIABOC 2019) 38

[32] ஒரு விளக்கமான கற்கைக்கு, 'இலங்கையில் சட்ட உதவித்துறை: பொருத்தமான தீர்வுகளுக்காத் தேடுகிறது (2009), ஆசிய மன்றம், நீதி மற்றும் சட்டச் மறுசீரமைப்புக்கான அமைச்சு, அரசியலமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, நீதி செயல்திட்டங்களுக்கு சமனான அணுகுவழிகள் - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம், இலங்கை, என்பவற்றின் கூட்டுப் பதிப்பைப் பார்க்கவும். உதாரணத்திற்கு, மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த இலங்கையர்களை பின்தங்க வைக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீள்சிந்தித்தல்' என்பதைப் பார்க்கவும் (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் பவுண்டேஷன் 2021 ).

[33] உதாரணத்திற்கு, மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த இலங்கையர்களை பின்தங்க வைக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீள்சிந்தித்தல்' என்பதைப் பார்க்கவும் (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் பவுண்டேஷன் 2021).

[34] அரசியலமைப்பின் உறுப்புரை 126.



# 3. பாலியல் இலஞ்சம் தொடர்பாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் பரிந்துரை

## 3.1. கடப்பாடு

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த அரசியல் வன்முறை மற்றும் ஏனைய வன்முறையின் வடிவங்களான உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட அமைதியின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டப் பெண்களின் உரிமைகள் தொடர்பில், கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இலாப நோக்கற்ற பெண்கள் நிறுவனமாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (CEJ) விளங்குகின்றது. இவ் அமைப்பானது நாடு முழுவதும் உள்ள பங்காளர் அமைப்புகள், மத்திய அரசாங்க மட்டத்திலான கொள்கை வகுப்பாளர்களுடன் மற்றும் மாகாண மற்றும் உள்ளூர் அதிகார மட்டத்திலான அரசாங்க உத்தியோகத்தர்களுடனும் பணியாற்றுகின்றது. சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலயமானது பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள், நிலைமறுகால நீதிச் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான இழப்பீடுகள் தொடர்பாக விரிவான மற்றும் பயனுறுதிமிக்க தலையீடுகளை மேற்கொண்டதுடன், 2016 ஆம் ஆண்டிலிருந்து பாலியல் இலஞ்சத்தை தடைசெய்தல் மற்றும் அது தொடர்பான பரிந்துரைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

## 3.2. இலங்கையில் பாலியல் இலஞ்சம் தொடர்பான அறிவுசார் நிலைமை

இலங்கையில் பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான பரிந்துரை நடவடிக்கைகளில் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் முன்னோடியாக விளங்குகிறது. பாலியல் இலஞ்சம் தொடர்பான முயற்சிகள் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட இந் நிலையத்தின் மூன்று கற்கைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது. 'இலங்கையின் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டல்' (மார்ச் 5, 2016) எனும் தலைப்பிலான ஓர் கற்கை பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்களைக் கொண்ட 25 சம்பவக் கற்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாறு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டம் என்பவற்றில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாகும். 'மறைக்கப்பட்ட இரகசியம்: யுத்தத்திற்குப் பிற்பட்ட மாவட்டங்களில் முஸ்லிம் பெண்கள் முகங் கொடுத்த பாலியல் இலஞ்சம்' (ஜூலை 2018) என்பது பாலியல் இலஞ்ச சம்பவங்கள் பற்றி முஸ்லிம் பெண்கள் மத்தியிலிருந்து பத்து நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் கற்கையாகும். இந்த கற்கையில் பங்குபற்றியவர்கள் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். 'இராணுவக் கணவரை இழந்தப் பெண்களால் எதிர்கொள்ளப்படும் பாலியல் இலஞ்சம்' (ஜூலை 2018) என்பது அநுராதபுரம், குருநாகல் மற்றும் காலி மாவட்டங்களிலிருந்தான பத்து சம்பவக் கற்கைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் கற்கையாகும். சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 'இலங்கையில் பாலியல் இலஞ்சத்தைக் அடையாளப்படுத்துவதற்காக சட்ட மற்றும் கொள்கைத் திருத்தம் செய்தல்' (ஆகஸ்ட் 2020) அறிக்கை, குறிப்பாக பாலியல் இலஞ்சத்தைக் குற்றமாக்குவதற்கு இலங்கையின் சட்டத்தை சீர்திருத்துவதற்கான பரிந்துரைகளையும் மேற்கொள்கிறது.[35] இந்த கற்கையின் முடிவுகள் பாலியல் இலஞ்ச நிகழ்விற்குப் பங்களிக்கும் காரணிகள், பாலியல் இலஞ்சத்திற்கு தனிப்பட்டவர்களை ஆளாக்கும் ஆபத்துக் கொண்ட காரணிகள், குற்றவாளியின் தன்மை அது போன்ற சட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பான (அதன் பொருள் மற்றும் அதன் அமுலாக்கம் ஆகிய இரண்டும்) தொடர்பான தற்போதைய கற்கை முடிவுகளுடன் ஒத்திசைகின்றன.


'2019 ஆம் ஆண்டின் இலங்கைக்கான உலக ஊழல் நிலைச் சுட்டி அறிக்கையானது (Global

[35] இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை முடிவுக்கு கொண்டுவரல்: சட்ட மற்றும் நடவடிக்கைமுறைச் சீர்திருத்தங்கள் பகுதி 2 (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், சித்திரை மாதம் 2022)

Corruption Barometer 2019 Sri Lanka) நாட்டில் பாலியல் இலஞ்ச (பாலியல் சலுகைக்கான மிரட்டல்) நிகழ்வு தொடர்பான பொதுவான உட்புரிதல்களை அளிக்கின்றது. இந்த அறிக்கையின் படி, 60% இற்கும் அதிகமானவர்கள் பாலியல் இலஞ்சத்திற்கான கோரிக்கைகள் சம்பந்தமான நேரடியான அனுபவத்தைக் கொண்டிருந்தனர் அல்லது அந்த அனுபவத்தைக் கொண்டிருந்தவர்கள் பற்றி அறிந்திருந்தனர்.[36] பதிலளிப்பவர்களில் 46% ஆனோர் 'பாலியல் சலுகைக்கான மிரட்டல் எப்போதாவது, அநேகமான சமயங்களில் அல்லது மிக அதிகளவான சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றதாக உணர்ந்தனர்'.[37] பாலியல் சலுகைக்கான மிரட்டல் கூடுதலாகக் காணப்படுகின்றதை கிராம மட்டத்தில் பதிலளித்தவர்களை விட நகர்ப்புறத்தில் பதிலளித்தவர்கள் உணர்ந்தனர். குறிப்பாக, பெருந்தோட்டத்துறையிலிருந்தான மாதிரியிலுள்ள பங்குபற்றியவர்களில் அரைப்பங்கினர் 'பாலியல் சலுகைக்கான மிரட்டல் அநேமான சமயங்களில் அல்லது மிக அதிகளவான சந்தர்ப்பங்களில் நிகழ்ந்ததாக' உணர்ந்தனர்.[38] அரசச் சேவையை அணுகல் தொடர்பாகப் பெண்களின் அனுபவம் தொடர்பாக, 2014இல் நடத்தப்பட்ட ஒரு கற்கையில், 52.3% ஆன பெண்கள் இலஞ்சம் மற்றும் ஊழலை, கற்கைக்கு முன்னதான 6 மாதங்களின் போது அனுபவித்திருந்ததாகக் கண்டறியப்பட்டது. இந்த கற்கை, 501 குடும்பங்கள் மற்றும் அரசச் சேவையின் 10 பிரதான துறைகளின் அடிப்படையில் அமைந்ததாக இருந்தது. ஊழலானது சட்டத் துறை, பிரதேச செயலகம் மற்றும் சுகாதாரத் துறையில் முறையே 58.1%, 30.9% மற்றும் 28% என்ற வீதத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த கற்கை, பெருந்தோட்டத்துறையிலிருந்தான பெண்கள் (65.6%) மற்றும் மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள (64.8%) பெண்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக அணுகப்படக்கூடிய அதிகளவில் ஆபத்துக் கொண்டவர்களாக இருப்பதைத் தெரிவிக்கிறது. கிராமப் பகுதிகளிலுள்ள பெண்களில் கூடுதலானவர்கள் (56.8%), நகர்ப்பகுதிகளிலுள்ள பெண்களை விட (64.8%) இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு முகங்கொடுத்தவர்களாக கண்டறியப்பட்டனர். அண்ணளவாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் (59.7%), ஆண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களை (49.6%) விட இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு அதிகளவில் ஆளாகுபவர்களாகக் காணப்பட்டனர்.[39] இலஞ்சப் பணமாக கொடுக்கப்பட்ட சராசரித் தொகை இலங்கை ரூபாய் 1,429.00. என இந்த கற்கையில் கணிக்கப்பட்டது.

## 3.3. அறிவு நிலையிலான இடைவெளி

பாலியல் இலஞ்சம் தொடர்பாக சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் இது வரை மேற்கொள்ளப்பட்ட கற்கைகளானது வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்கள், மற்றும் இராணுவக் கணவரை இழந்த பெண்கள் ஆகிய தனித்துவமான சமூகங்கள் மீது கவனம் செலுத்தின. ஏனைய ஸ்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட கற்கைகள் அரசத் துறையில் உள்ள இலஞ்சம் மற்றும் ஊழலைப் பொதுவாக ஆராய்ந்தன. இதுவரை, இந்த வகையான கற்கைகளில் பிரத்தியேகமான துறைகள் கவனத்திற்குரியவையாக இருந்ததில்லை. மேலும், பாலியல் இலஞ்சத்தின் நிகழ்வு மற்றும் தன்மை பற்றிய கற்கைக்கு பல பகுதிகள் இன்னமும் எட்டப்படவில்லை. இந்த அறிவுக்கான இடைவெளியை கவனம் கொள்வதற்கு தற்போதைய கற்கை வடிவமைக்கப்பட்டது. இது நீதி மற்றும் சுகாதாரத் துறை மீது பிரத்தியேகமாகக் கவனம் கொள்கின்றதுடன் பல்வேறு மாகாணங்களிலுள்ள பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களின் அனுபவங்களை ஆராய்கிறது.



[36] உலக ஊழல் நிலைக் குறிக்காட்டி 2019 இலங்கை (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 30
[37] உலக ஊழல் நிலைக் குறிக்காட்டி 2019 இலங்கை (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 19
[38] உலக ஊழல் நிலைச் சுட்டி 2019 இலங்கை' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் 2019) 19
[39] 'அரசச் சேவையில் காணப்படுகின்ற ஊழல் தொடர்பில் பெண்களின் அனுபவம்' (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல், இலங்கை, ஜூன் 2014) 42



# 4. தரவு சேகரித்தல் தொடர்பான முறையியல்

## 4.1. ஓர் பண்புசார் கற்கைக்கான நியாயப்படுத்தல்

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் என்ற பரந்த பிரச்சினை தொடர்பான கற்கை அவை போன்றன ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டபோது மேற்கொள்ளப்பட்டதாகும். இந்தப் பின்னணியில், பாலியல் இலஞ்சம் பற்றி இன்னும் குறைவாகவே அறியப்படுகிறது. மேலும், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு சமூகக் களங்கம் மற்றும் ஏனைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு குற்றச் செயலாகப் பாலியல் இலஞ்சம் காணப்படுகின்றது. எனவே சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையமானது பாலியல் இலஞ்சம் தொடர்பாக கற்கைக்காக ஒரு பண்புசார் அணுகுமுறையைத் தேர்வுசெய்தது. பாலியல் இலஞ்சம் மற்றும் அதன் நிகழ்வுகள் தொடர்பான தனிப்பட்ட அனுபவங்களை ஆழமாகப் பரிசீலனை செய்வதற்கு ஒரு பண்புசார் அணுகுமுறை வழிவகுக்கின்றது.

## 4.2 முறையியல்

பாலியல் இலஞ்சச் சம்பவம் மற்றும் அதன் நிகழ்தலுக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்ட ஓர் கற்கை இதுவாகும். இந்தக் கற்கையானது சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவு மூலமாகவும் மற்றும் கற்கையில் பங்குபற்றியவர்களின் கண்ணோட்டத்திலிருந்தும் பாலியல் இலஞ்ச நிகழ்வு, அதன் தன்மை மற்றும் பாதிப்பு என்பவற்றை பொருள்கோடல் செய்கின்றது. இது மூன்று பகுதிகளை உள்ளடக்கியது: பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களாக தங்களை சுய-அடையாளப்படுத்திய சில தனிப்பட்டவர்களுடன் நடத்தப்பட்ட ஆழமான நேர்காணல்கள், பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களுடனான இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் நீதி மற்றும் சுகாதாரத் துறைகளிலுள்ள முக்கிய தகவலளிப்பவர்களுடனான ஆழமான நேர்காணல்கள் போன்றனவாகும். ஒத்த எண்ணம் கொண்ட சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மூலமாக நீண்ட நேர்காணல்களுக்கான நேர்காணப்படுபவர்களை இனங் காண்பதற்கு சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஒரு பிரிவினரால் மற்றைய பிரிவினர் சேர்க்கப்படும் 'பனிப் பந்து' (snow-balling) எனும் மாதிரியொன்றுக்கு பங்குபற்றுவோர் தெரிவு செய்யப்படும் முறைமை உபயோகிக்கப்பட்டது.

## 4.3. கற்கை வடிவமைப்பு

இந்த கற்கைக்கான தரவுகள், பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களாக சுய அடையாளம் காணப்பட்டவர்கள், இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் போன்றவற்றினூடான பண்புசார் வகையிலான நீண்ட நேர்காணல்கள் மற்றும் முக்கிய தகவலளிப்பவர்களுடனான நேர்காணல்கள் என்பன மூலமாகத் சேகரிக்கப்பட்டன. கற்கையின் விடயப் பொருள் மீதான கூருணர்வினைக் கருத்தில் கொண்டு பதிலளிப்பவர்களுடன் ஒரு நெருக்கமான நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வது தரவுகள் சேகரிப்பின் வெற்றிக்கு அவசியமாகும்.

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் பாலியல் இலஞ்சம் தொடர்பாக கற்கைகளை முன்னர் மேற்கொண்டுள்ளது. இந்தக் கற்கைகள் வடக்கு, கிழக்கு வட மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் நடத்தப்பட்டன. அதனால், இந்தக் கற்கையானது தென் மாகாணம் தவிர்ந்து மேற்கூறப்பட்ட மாகாணங்களை இந்தக் கற்கையில் உள்ளடக்காமல் விலக்கியதுடன் இலங்கையில் ஏனைய சமூகங்கள் மத்தியில் பாலியல் இலஞ்சத்தின் நிகழ்வு, அதன் பாதிப்பு மற்றும் தன்மை என்பவற்றை கற்கைக்குட்படுத்தியது. ஏனைய உள்ளூர் ஸ்தாபனங்களுடன் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் நிறுவன ரீதியான பங்காளித்துவம் மற்றும் இவ்வாறான பங்காளித்துவங்கள் மூலமாகப் பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களைத் தேடுவதற்கான சாத்தியக்கூறுகள், மற்றும் செயல்திட்டத்தின் நிதி ரீதியான மட்டுப்பாடுகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு, ஆழமான நேர்காணல்களுக்காக 30 பங்குபற்றுனர்கள் வரையும் மற்றும் மாகாணத்திற்கு ஒன்று என்ற ரீதியிலும் இலக்குக் குழுக் கலந்துரையாடலையும் (ஒவ்வொன்றுக்கும் 5-10 பங்குபற்றுவோர்கள்) உள்ளடக்குவதனை இந்தக் கற்கை நோக்கமாகக் கொண்டது. ஒவ்வொரு துறையிலிருந்தும் 6 முக்கிய தகவலளிப்பவர்கள் நேர்காணப்பட்டதுடன், மொத்தமாக 12

நேர்காணல்கள் நடத்தப்பட்டன. இரண்டு துறைகளுக்குமாக, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களிலிருந்து மூவர் தெரிவுசெய்யப்படடனர்.

இலக்குக் குழுக் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவோர்கள், அவர்களது தகவலளித்துப் பெற்ற சம்மதத்திற்கு உட்பட்டவகையில், உள்ளூர் பங்காளர் சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் நம்பிக்கையான வலையமைப்புகள் அல்லது ஒத்த எண்ணம் கொண்ட குழுக்கள் அல்லது தனிப்பட்டவர்கள் மூலமாகப் பங்குபற்றுவதற்கு அழைக்கப்பட்டனர். குழு நிலைக் கலந்துரையாடல்களின் நோக்கம் பாலியல் இலஞ்சம் மற்றும் அதன் நிகழ்வு பற்றிய கருத்துக்களை இனங் காண்பதற்கும் பாலியல் இலஞ்சத்தை தடை செய்வதற்கான பரிந்துரைகளைத் திரட்டுவதுமாகக் காணப்பட்டது. கிராமப்புறம், நகரம் மற்றும் பெருந்தோட்டத் துறைகளை உள்ளடக்குவதற்கு இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நீதி மற்றும் சுகாதாரத் துறைகளிலிருந்தான பிரதான தகவலளிப்வர்கள் நீண்ட நேர்காணல்களுக்காக அணுகப்பட்டனர். இந்த நேர்காணல்களின் நோக்கங்கள் பாலியல் இலஞ்சம் தொடர்பான அவர்களது கண்ணோட்டங்களைப் புரிந்து கொள்வது பாலியல் இலஞ்சத்தின் நிகழ்தலைத் தடைசெய்வதற்கு நடைமுறையிலுள்ள தற்போதைய சட்ட மற்றும் கொள்கை அமைப்பு முறைகள், அவற்றின் நடைமுறைப்படுத்தல், வலியுறுத்தல் பற்றிய அவர்களது கண்ணோட்டங்களைப் புரிந்து கொள்வது சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் உள்ள இடைவெளிகள், பலவீனங்கள் பற்றிய அவர்களின் கண்ணோட்டங்களை இனங் காண்பது மற்றும் சீர்திருத்தத்திற்கான அவர்களின் பரிந்துரைகளை இனங் காண்பது என்பவையாகும். நீதி மற்றும் சுகாதாரத் துறைகளின் கீழ் பெயரிடப்பட்ட நிறுவனங்களிலிருந்து பிரதான தகவலளிப்பவர்கள், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தான அனுமதி மற்றும் தகவலளிக்கப்பட்டு பெறப்பட்ட அவர்களது சம்மதம் என்பற்றுக்கு உட்பட்டு அணுகப்பட்டனர். அணுகுவதற்கான வழிமுறை மற்றும் தயார்நிலை என்பவற்றின் அடிப்படையில் அவர்கள் அணுகப்பட்டனர். ஒவ்வொரு துறையிலிருந்தும், மாகாண மட்டத்தில் மூவர் மற்றும் மத்திய அரசாங்க மட்டத்தில் மூவருமென விரும்பத்தக்க நிலையில் முக்கியமான தகவலளிப்பவர்களுடன் (மொத்தம் 12 பேர்கள்) நேர்காணல்களை மேற்கொள்வதற்கு இந்தக் கற்கை நோக்கம் கொண்டது. இந்த வடிவமைப்பை நடைமுறைப்படுத்துகையில், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் 19 தனிப்பட்டவர்களுடன் ஆழமான நேர்காணல்கள், இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய தகவலளிப்பவர்களுடன் 12 நேர்காணல்கள் என்பவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டது.

## 4.4. மட்டுப்பாடுகள்

பாலியல் இலஞ்சம் போன்ற ஒரு சவால் மிக்க தலைப்பின் மீது ஒரு ஆராயும் தன்மை கொண்ட மற்றும் பண்புசார் ஒர் கற்றையை மேற்கொள்கின்ற போது பல்வேறு மட்டுப்பாடுகள் பிரயோகிக்கப்படும். பங்குபற்றுனர்கள் தகவல்களை மறைக்கலாம், மாற்றலாம் அல்லது மிகைப்படுத்தலாம். எனினும், இந்தக் கற்கையானது பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் கண்ணோட்டங்கள் மற்றும் அனுபவங்களை முன்வைக்கிறது. இந்தக் கற்கையானது பொதுவாக பாலியல் இலஞ்சத்தின் நிகழ்தல் மற்றும் அதன் தன்மையை விபரிப்பதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பழைத்தவர்களின் கண்ணோட்டத்திலிருந்து அதற்குப் பங்களிக்கும் காரணிகளை இனங் காண்பதற்கும் முனைகிறது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் நேர்காணல்களுக்கான மாதிரித் தெரிவு இயலுமானவரை அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் தகவல்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம் பதிலளிப்பவர்களுடன் ஒரு சிறந்த நல்லுறவை உருவாக்குவதற்கும் சாத்தியமான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டது.

தமிழ் பேசும் பங்குபற்றுனர்களை உள்ளடக்குவதற்கு சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூட அவர்களை அணுகுவதற்கு முடியாதிருந்தமை இந்தக் கற்கையின் ஒரு முக்கியமான மட்டுப்பாடாகும். நிதிசார் மட்டுப்பாட்டுக்கு உட்பட்டுச் செயலாற்றுவதற்கு சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் நிர்ப்பந்திக்கப்பட்டதும் கூட குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டும். அதற்கமைய இலக்கு கொள்ளப்பட்ட மாதிரியின் அளவும் சீர்செய்யப்பட வேண்டியிருந்தது.

## 4.5. கற்கையினை நடைமுறைப்படுத்தல்

நேர்காணல்களை மேற்கொள்பவர்கள் கூருணர்வுள்ள தலைப்புகளில் நேர்காணல்களை நடத்துவதற்கு பயிற்றப்பட்டனர். அத்தோடு, தகவலளித்துப் பெற்ற சம்மதங்களைப் பெறுவதிலும் மற்றும் தரவுகளைத் திரட்டுவதில் பொதுவான கற்கை ஒழுக்கங்களிலும் வழிகாட்டப்பட்டனர். பெருந்தொற்றின் போது விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, இந்த வழிகாட்டல் தொலைவிலிருந்து அளிக்கப்பட்டது. வழங்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டிக்கு அமைவாக நீண்ட நேர்காணல்கள் நடத்தப்பட்டன.[40] இந்தக் கற்கையில் பங்கெடுத்துக்கொண்ட ஆட்கள் ஒவ்வொருவரும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்துடன் இரகசியத் தன்மையைப் பேணும் உடன்படிக்கைகளை மேற்கொண்டனர்.

மேற்கொள்ளப்பட்ட நீண்ட நேர்காணல்கள், பிரதான தகவலளிப்பவர்களின் நேர்காணல்கள், மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் என்பவற்றின் இறுதி எண்ணிக்கை அட்டவணை 1இல் வழங்கப்பட்டுள்ளது. பங்குபற்றுனர்களின் தகவலளித்துப் பெற்ற சம்மதங்கள் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் ஆவணப்படுத்தப்பட்டது. நேர்காணல்களின் கையெழுத்துப் பதிவுகள் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டு அநாமதேயப்படுத்தப்பட்டன. நேர்காணப்பட்டவர்களின் விபரமான மற்றும் அநாமதேயப்படுத்தப்பட்ட விளக்கவுரைகளுக்கு தயவு செய்து பின்னிணைப்பு IIII பார்க்கவும். அறிக்கை பங்குபற்றியோர்களைக் குறிப்பிடும் போது புனைபெயர்களை உபயோகிக்கிறது.

[40] இலங்கையில் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் கண்காணித்து வருகின்றது. சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார காரணிகள் உட்பட பங்களிக்கும் காரணிகள் பற்றிய ஆய்வுகள் அரிதானவை. இலஞ்சம் மற்றும் ஊழலை அடையாளப்படுத்துவதில் நிறுவனங்களின் தோல்விக்கான காரணங்களுக்கான அனுபவ ஆய்வுகள் கிடைக்கவில்லை.



# 5. பாலியல் இலஞ்ச நிகழ்வு தொடர்பான முடிவுகள்

பண்புசார் தரவுகளிலிருந்து பெறப்பட்ட சிந்தனைகள் இந்தப் பகுதியில் விவாதிக்கப்பட்டு மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்தச் சிந்தனைகள் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவை. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் யதார்த்தங்களின் இடைத்தொடர்புகள் பாலியல் இலஞ்சத்தின் எதிர்மறையான பின்விளைவுகளை மேலும் மோசமாக்குகின்றன என்பது இந்தப் சிந்தனைகளிலிருந்து தெளிவாகிறது. இனங் காணல் மற்றும் பகுப்பாய்தலுக்காக இந்தச் சிந்தனைகள் தனியான தலைப்புகளின் கீழ் கலந்துரையாடப்படுகின்றன.

## 5.1. தனிப்பட்ட பாதிப்பு

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீதான ஆழமான தனிப்பட்ட பாதிப்பு, பங்குபற்றுனர்களால் பரந்துபட்ட வகைகளில் விபரிக்கப்பட்டது. பாலியல் இலஞ்சம் தொடர்பான அனுபவம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை உளரீதியாகவும் மற்றும் நிதி ரீதியாகவும் பாதித்தது. அவர்களின் வாழ்வாதாரம், சமூக இடைச்செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கைத் தரம் என்பவற்றுக்கான வாய்ப்புகள் உட்பட, பல்வேறு முனைகளிலுமான வாய்ப்புகளையும் கூட அது பாதித்தது.

### 5.1.1. உளவியல் ரீதியான பாதிப்பு

நீண்ட நேர்காணல்கள் மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களின் படி, நபரொருவரின் கௌரவம் சார்ந்த உணர்வின் மீது பாலியல் இலஞ்சத்தின் பாதிப்பு கடுமையானதாக இருந்தது. சில சம்பவக் கற்கைகளில், அனுபவம் பாலியல் இலஞ்சத்திற்கான கோருதலாக இருந்தது, ஆனால் நிகழ்வு நடைபெறவில்லை. அந்த சந்தர்ப்பங்களில் கூட, பயம், மனவழுத்தம் மற்றும் பதட்டம் போன்ற உணர்வுகள் காரணமாக உளரீதியாக அவர்களை அந்த அனுபவம் எவ்வாறு பாதித்தது குறித்துப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பேசினார்கள். அதனால் அவர்கள் அனுபவித்த மனவதிர்ச்சி, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் ஒரு நீண்ட காலத்திற்கு நீடித்திருந்தது.

> ‘நான் அதிகளவிலான அழுத்தத்திற்கு உள்ளானேன். நான் எனது இருப்பு பற்றிய கேள்வி எழுப்பினேன் அதோடு நான் மீண்டும் பிறக்கவே கூடாது எனவும் சிந்தித்தேன். ’
>
> ரமணி, கண்டி, மத்திய மாகாணம்

> ‘நான் அச்சுறுத்தப்பட்டதனால் நான் பயந்தேன். அவர்கள் இருவரும் (எனது கணவரும் குற்றவாளியும்) தாதிகளாக இருப்பதால் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு கொள்வார்கள் என்று நான் பயந்தேன். அவன் (குற்றவாளி) என்னைப் பழிவாங்குவான் என்று நினைத்து நான் மிகவும் பயந்தேன்.’
>
> ‘என் கணவர் இந்த நிலையில் நிலையில் இருப்பதால் [அவர்] என்னைப் பயன்படுத்திக் கொண்டார் என்று நான் மிகவும் வருத்தப்பட்டேன்..’
>
> ‘இந்த சம்பவத்திற்குப் பிறகு, அந்த மனிதனுடன் அதிகம் பேச நான் மிகவும் பயந்தேன். பேசும் போது அவர்களின் முகத்தை மட்டுமே பார்க்க வேண்டும். ஒரு அரசு உத்தியோகத்தரிடம் கூட இந்தப் பிரச்சினையைப் பற்றி பேச நான் பயந்தேன். ’
>
> சீதா, ஹட்டன், மத்திய மாகாணம்

குறித்த சம்பவம் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்பதனால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் எவ்வாறு கவலை மற்றும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர் என்பது தொடர்பான தங்களது அனுபவங்களை விபரிக்கின்றனர். குறித்து சம்பவம் தொடர்பாக ஆழ்ந்த அவமானத்தையும் வெறுப்பையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

‘ எனது குடும்பத்தினர் இதைப் பற்றி அறிந்தபோது, நான் ஏதோ தவறு செய்ததைப் போல அவர்கள் என்னைப் பார்ப்பார்கள் என்று நினைத்து நான் வெட்கப்பட்டேன். என் மாமியார் என் மீது சந்தேகப்படுவதாக உணர்ந்தேன். நான் ஏதோ தவறு செய்வது போல் என் கணவர் என்னைப் பார்த்தார். அந்த நபருடன் நான் அதிகம் பேசித் தவறு செய்தமையினால் தான் அவர் என்னை சந்திக்கச் சொன்னார் அவர்கள் கூறினர். நான் அவருடன் பேசியது கூட தவறு என்று அவர்கள் சொன்னார்கள். நான் அவருடன் அப்படிப் பேசவில்லை. ஆனால் மக்கள் அதை அப்படி பார்ப்பதில்லை.. ’

ராணி, மாத்தளை, மத்திய மாகாணம்

‘ துன்பமா? அதைப் பற்றியும் கூட நீங்கள் கேட்க வேண்டுமா? அதிகளவில் பாதிக்கப்பட்டோ அல்லது விசேட தேவை உடைய பெண்ணாக நான் இருந்தாலும் ஒரு பெண்ணாக என் வேலையைச் செய்து, சுயமரியாதையுடன் நன்றாக வாழ்ந்த பெண் நான். நான் ஏற்கனவே அந்த மனிதனுடன் கூடு கட்ட வேண்டியதில்லையா? ஒருவேளை நான் செய்தது தவறாக இருக்கலாம். ஆனால், முதல்முறையாக, அவர் என்னை பலவந்தப்படுத்திய போது, என்னால் தப்பிக்க முடியவில்லை. திறமையற்ற பெண்ணான நான் எப்படி போராடி அந்த ஆணின் பிடியிலிருந்து தப்பிக்க முடியும்? ’

இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

மனோரி அனுபவித்த கடுமையான அதிர்ச்சி மற்றும் சமூகக் களங்கம் அவளை தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு இட்டுச் சென்றது.

‘ நான் இந்தச் சம்பவத்தால் முற்றிலும் சோகமடைந்தேன். ஏனென்றால் நான் எந்த தவறும் செய்யவில்லை. நான் வெளிக் காட்டக்கூடிய ஆடைகளைக் கூட அணியும் நபரல்ல. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, எனக்கு நன்றாகத் தூக்கம் வரவில்லை, கவனம் செலுத்த முடியாமல், ஞாபக மறதிக்கு உள்ளானேன். இதற்கு முன்பும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருந்தும் மறுபடியும் எனக்கு ஏன் இப்படி நடக்கிறது என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இது (பாலியல் இலஞ்சம்) போன்ற முந்தைய நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கிறேன். அந்த சம்பவம் இடம்பெற்ற நாள் தொடங்கி [பாலியல் இலஞ்ச நிகழ்வு] இன்று வரை அந்தச் சம்பவங்களை நினைத்துப் பார்க்கிறேன். அந்த சம்பவத்திற்குப் பிறகு, முந்தைய நினைவுகள் அனைத்தும் என் மனதைத் தாக்கியதால், நான் எனது உயிரை மாய்த்துக் கொள்ள நினைத்தேன். ’

மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

இதன் விளைவாக, சில பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பாலியல் இலஞ்சத்திற்காக அனுகப்பட்டதற்காக அல்லது பாலியல் இலஞ்சத்திற்கான கோரிக்கைக்கு இணங்கியதற்காக தங்களைத் தாங்களே குற்றம் சாட்டுகிறார்கள். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் ஒருவர் பாலியல் இலஞ்சத்திற்காக தான் அணுகப்பட்டது தொடர்பாக மன வருத்தத்தையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தினார்.

> ‘ ஒரு அறை பதிவு செய்யப்பட்டுள்ளது என அவன் கூறினான். இந்த சம்பவத்தால் நான் மிகவும் குழப்பம் அடைந்தேன். நான் கண்டிப்பாக அவன் கூறிய விடுதி அறைக்கு செல்லவில்லை. அந்த நேரத்தில் நான் மிகுந்த சோகத்தை உணர்ந்தேன். வெட்கமே இல்லாமல் ஒருவன் எப்படி இன்னொருவரிடம் இப்படி ஒரு வேண்டுகோளை விடுக்க முடியும் என ஆச்சரியப்பட்டேன். அவன் இதற்கு முன்னரும் இவ்வாறான செயல்களை செய்திருக்கலாம் என நான் சந்தேகிக்கிறேன். ’
>
> பிரியா, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

> ‘ உணர்வுகளைத் தூண்டும் வகையில் நடந்து கொள்ளவில்லை. ’
>
> ரூபா, இரத்தினபுரி, சப்ரகமுவ மாகாணம்

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் ஒருவருக்கு, பாலியல் இலஞ்ச அனுபவம் அவர் அனுபவித்த மன அதிர்ச்சியைத் மேலும் அதிகரித்தது மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தின் முந்தைய அனுபவங்களை மீண்டும் அவளது நினைவில் கொண்டு வந்தது.

> ‘ எனது உறவினர்களிடமிருந்தும் இதுபோன்ற பிரச்சனைகளை நான் முன்பு அனுபவித்திருக்கிறேன். பல்வேறு நிர்பந்தங்கள் இருந்தன. சில சமயங்களில் நான் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடிந்தது. இவ்வாறான சூழ்நிலைகளுக்கு இடையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது என்னை மிகவும் பாதித்தது. முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்தும் என் மனதை ஆட்டிப்படைக்க ஆரம்பித்தன. ’
>
> மனோரி, கண்டி, மத்திய மாகாணம்


பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் ஒருவர் வலுவான பின்னடைவு உணர்வை வெளிப்படுத்தினார். அவளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அவள் உண்மையாக இருந்தாள், மேலும் எந்த எதிர்மறையான தாக்கமும் இல்லாமல் சம்பவத்தை கடந்து சென்றது போல் தோன்றியது.

> ‘ மனநலம் பாதிக்கப்பட்டதா? எவ்வளவு முட்டாள்தனம்... இவற்றால் மனதளவில் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? இவை கூட பிரச்சினைகளாக கருதப்படுகிறதா? சில காலம் கழித்து, அவை எதுவும் இல்லை. நீங்கள் அந்த சம்பவத்தை பற்றி மறந்துவிட்டால் அது முடிவடையும். பெரிய பாரதூரமான பிரச்சினைகள் எதுவும் இல்லை. இவற்றை நாம் மனதில் கொள்ளக் கூடாது. அதைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. ’
>
> ஜெயா, காலி, தென் மாகாணம்

இதற்கு நேர்மாறாக, பெரும்பாலான பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பாலியல் இலஞ்ச அனுபவத்துடன் தொடர்புடைய சமூகக் களங்கத்தைப் பற்றி பேசுகிறார்கள். இந்த சமூகக் களங்கம் தனிப்பட்டது, இது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தங்களைப் பற்றிய அவர்களது கண்ணோட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது இந்த சமூகக் களங்கம் வெளிவாரியானது மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. கிராமப்புற சமூகங்களில் வாழும் குறித்த சம்பவம் தவறான வதந்திகளால் தங்களது கிராமத்தவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டதாக விவரிக்கின்றனர்.

‘ நான் யாருடனும் இந்த விடயம் தொடர்பாக பகிர்ந்து கொள்ளாததால், நான் எந்தவித சமூகக் களங்கத்தையும் உணரவில்லை... நான் அச்சம்பவத்தை சங்கடமாக உணர்ந்ததால் அதுபற்றி வேறு யாரிடமும் சொல்லவில்லை. நான் எனது வேலையைப் பற்றி கவலைப்பட்டதனால் இது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. குறித்த சம்பவம் தொடர்பாக நான் பொலிசுக்கு சென்றால் நான் மீண்டும் குற்றம் சாட்டப்படுவேன் என்ற பயத்தால் முறைப்பாடு செய்யவில்லை. ’

ரூபா, இரத்தினபுரி, சப்ரகமுவ மாகாணம்



‘ எல்லோரும் என்னை தவறாகப் பார்த்தார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், வழக்கமாக கடைக்கு அருகில் என்னிடம் பேசுபவர்கள் இந்த சம்பவத்துக்கு பின்னர் என்னிடம் பேசுவதை நிறுத்தி விட்டார்கள்... இத்தகைய சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை பகிரங்கமாக சட்டத்தை பயன்படுத்தி பிடிப்பது என்பது வெறும் கனவு மட்டுமே. யார் இந்த விடயங்களைப் பற்றி பேசப்போவது? பரப்பப்பட்ட வதந்திகள் உண்மையில் என்ன நடந்தது என்பதை பிரதிபலிக்கவில்லை. பெண்கள் வெட்கத்தினால் இதை யாரிடமும் சொல்ல மாட்டார்கள். ’

லக்ஷ்மி, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

‘ என்னைப் குறித்து நான் வெட்கப்படுகிறேன். எனது நிலை குறித்து நான் கவலைப்பட்டேன். வெளியாட்கள் யாரும் இதைப் பற்றித் தெரிந்து கொள்ளாததால் எல்லாம் நன்றாக நடந்தது. இல்லையெனில் என்னால் கிராமத்தில் வாழ முடியாது. ‘இரவு 1, 2 மணி வரை நான் ஏன் அந்நியர்களுடன் பேசினேன்?’ அவர் எந்த வெட்கமும் பயமும் இல்லாமல் என்னிடம் கேட்டார், ஏனென்றால் நான் எதற்கும் பயனில்லாதவள் என்பதனால். ’

கயானி, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

## 5.1.2. பொருளாதார ரீதியான பாதிப்பு

நேர்காணல் செய்யப்பட்ட பலருக்கு பாலியல் இலஞ்ச அனுபவம் சில வகையான பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அது, அவர்கள் நிதி ஆதாயத்தை பெறுவதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கைக்கான செயற்பாட்டை அவர்கள் கைவிட்டு விடுவதற்கு வழிவகுத்தது. ரமணியின் விடயத்தில், அவர் சட்ட ஆலோசனைக்காக நாடிய சட்டத்தரணியே அவரிடம் பாலியல் இலஞ்சத்தைக் கோரியதால் அவரது இறந்து போன கணவருக்குச் சொந்தமான காணிக்கான உரிமை கோருவதை கைவிடுவதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

> “ எனது காணிப் பிரச்சினையையும் நான் விட்டுவிட்டேன். ஓரிரு வாரங்கள் கூட நான் இதைப் பொறுத்துக் கொண்டதற்கு ஒரே காரணம் என் வேலையைச் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ”
>
> ரமணி, கண்டி, மத்திய மாகாணம்

ஜென்னி, ரீட்டா மற்றும் வத்சலா போன்ற பாலியல் தொழிலாளர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்துடன் இணைந்த அவர்களின் பால்நிலை அடையாளம் பாலியல் இலஞ்சத்திற்காக குறிவைக்கப்படும் தன்மையில் அவர்களை இட்டது. பாலியல் இலஞ்ச நிகழ்வுகளுக்கு ஆளாகுகையில், அவர்கள் அனுபவிக்கும் வன்முறை மற்றும் மனவேதனைக்கு மேலதிகமாக, அந்த வேளையில், அவர்களின் தெரிவான ஒரு வாழ்வாதார முறையில் ஈடுபட்டு ஒரு வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு மறுக்கப்பட்டது.

ஜெயாவின் விடயத்தில் (காலி, தென் மாகாணம்), கடல்கடந்து தொழில்வாய்ப்புக்காகச் செல்வதற்கு முன் அவரது நலன் அறிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு பொலிஸிடமிருந்து ஆவணப்படுத்தல் அவளுக்கு தேவையாக இருந்ததினால் அவள் பாலியல் இலஞ்சத்திற்காக இலக்கு வைக்கப்பட்டாள். இந்த கற்கையில் பங்குபற்றிய பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மத்தியில், ஜெயா தனித்துவமானவராக இருந்தார். இதில் அவர் தனது செயற்பாட்டை அப்பியாசித்ததுடன் பாலியல் இலஞ்சத்திற்கான கோரிக்கையையும் பதிவு செய்தார். இருந்தபோதிலும், அவரது பொருளாதாரத் தேவை பாலியல் இலஞ்சத்திற்கான ஓர் இடர்நேரும் ஆபத்து நிலையில் இட்டு வைத்தது.

இரோமியின் விடயத்தில், ஓர் இடமாற்றத்திற்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்வதற்கு விரும்பிய போது அவளிடமிருந்து பாலியல் சலுகைகள் கோரப்பட்டன. இரோமி உடல் ரீதியான விசேட தேவைகள் கொண்ட ஒரு பெண். அவரின் இடமாற்றம் அவருக்கு கணிசமான தனிப்பட்ட மற்றும் நிதி ரீதியான சிரமங்களை ஏற்படுத்தியிருக்கும். இது, அவரது உயர் அதிகாரிகளை அணுகுவதற்கு அவரைத் தூண்டியது, அது பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் ஒருவராக இருப்பதற்கு அவரை மாற்றியது.

## 5.1.3. பாதுகாப்பு தொடர்பான பாதிப்பு

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் பாலியல் இலஞ்சத்தைக் கோரிய அரச உத்தியோகத்தரால் தாம் அச்சுறுத்தப்படுவதாக முறையிட்டனர். உதாரணத்திற்கு, சீதா, தான் பாலியல் இலஞ்சம் அளிப்பதற்கு மறுத்தபோது, ஆண் தாதி ஒருவர் அவர் மீது கோபம் அடைந்ததுடன், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரின் கணவர் மற்றும் உறவினரிடம் தனக்கு ஒரு காதல் விவகாரம் இருப்பதாகப் பொய் சொல்லப் போவதாக, அச்சுறுத்தியதாகக் குறிப்பிட்டார். அச்சம் காரணமாகவும் அல்லது மீளவும் நடைபெறலாம் என்ற அச்சத்தினாலும் கடினமான தெரிவுகளை மேற்கொள்வதற்குத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பலர் குறிப்பிட்டனர்.

மனோரி தனது வதிவிடம், அவரது தொலைபேசி இலக்கம் மற்றும் சமூக ஊடகத்திலான அவரது பிரசன்னம் என்பவற்றில் முக்கியமான மற்றும் நிரந்தரமான மாற்றங்களைச் செய்தார்.

‘ இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, நான் எனது சிம் அட்டையை மாற்ற வேண்டியிருந்தது. முகநூலையும் முடக்கிவிட்டேன். எனது இருப்பிடத்தைக் கூட மாற்ற வேண்டியதாயிற்று. நாங்கள் எமது முகவரியை மாற்றினோம். ’

மனோரி, கம்பளை, மத்திய மாகாணம்

‘ இப்போது ஒரு போலீஸ்காரரிடம் வழி கேட்க கூட நான் பயப்படுகிறேன். இன்றும் கூட, தெரியாத எண்ணிலிருந்து என் தொலைபேசி அழைப்பு வரும்போது என் இதயம் துடிக்கத் தொடங்குகிறது. ’

ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்

பாலியல் இலஞ்சத்திற்காக தொலைபேசி மூலம் குற்றமிழைப்பவர் கோரிக்கைகள் மேற்கொள்ளும் சாத்தியம் பற்றி அவரது கணவர் கண்டு பிடித்துவிடுவார் என்ற ஒரு நிரந்தரமான அச்ச நிலையில் தான் இருப்பது பற்றி ஜீவா விபரித்தார். தனது தொலைபேசியை எப்போதும் மௌன நிலையிலேயே வைத்திருக்கும் ஒரு வழமைக்கு இவ் அச்சம் அவரை இட்டுச் சென்றது.

‘ சிறைச்சாலைப் பேருந்தைப் பார்க்கும்போது கூட எனக்கு வெறுப்பு உணர்வு தான் ஏற்படும். நான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையோ அல்லது சிறைச்சாலை உத்தியோகத்தரையோ வீதியில் பார்த்தால் எல்லோரையும் சந்தேகப்படுவேன். அவர்கள் மீது எனக்கு வெறுப்பு அதிகம். அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் என்று நான் நினைக்கிறேன். ’

கயானி, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

‘ எனது கணவர் வீட்டில் இருக்கும் போதெல்லாம் எனது தொலைபேசியை மௌன நிலையில் அல்லது அதை அணைத்து வைத்திருப்பது எனக்குப் பழக்கமாகிவிட்டது. இல்லாவிட்டால் நான் வீட்டில் இருக்கும் போது இதை தான் செய்கிறேன் என்று எனது கணவர் நினைப்பார். நான் உண்மையில் பயந்துவிட்டேன். ’

ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்

பாலியல் இலஞ்சம் குறித்தான தங்களின் நினைவுகளையும், மனவதிர்ச்சியையும் அது தூண்டிவிடுவதால் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது சிறைச்சாலை உத்தியோகத்தரைத் தாங்கள் காணும் போது அனுபவிக்கும் அச்சம் மற்றும் மனவதிர்ச்சி பற்றி ஜீவாவும் கயானியும், விபரித்தனர்.

இந்த மேற்கோள்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த ஒருவர் மீது பாலியல் இலஞ்சம் கொண்டிருக்க முடியுமான ஆழமான மற்றும் மனவதிர்ச்சி தரும் பாதிப்புகளை வெளிப்படுத்துகின்றன. அது வாழ்க்கை பற்றிய அவர்களது பார்வை, அரசத் துறை உத்தியோகத்தர்கள் பற்றிய அவர்களது கண்ணோட்டம் அதே போன்று தங்களது பாதுகாப்பு பற்றிய கண்ணோட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

## 5.1.4. கற்கையில் பங்குபற்றுபற்றுவதன் மூலம் ஏற்படும் தாக்கம்

நீண்ட நேர்காணல்களில் பங்குபற்றியது ஒரு நேர்மறையான அனுபவமென நேர்காணப்பட்டவர்களில் பலரும் குறிப்பிட்டனர். அது ஒரு மனநல சிகிச்சைத் தன்மையைக் கொண்டிருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். கீழே மீள்காட்டப்பட்ட அவதானிப்புகள் பாலியல் இலஞ்ச நிகழ்வினை ஓர் இரகசியமாக அவர்கள் வைத்திருந்ததின் காரணமாக அவப்பெயரையும் மற்றும் மனவதிர்ச்சியையும் அவர்கள் அனுபவித்தனர் எனத் தெரிவிக்கின்றன. ஒரு பாதுகாப்பான மற்றும் இரகசியத்தன்மையான சூழலில் மற்றொரு நபருடன் தங்களின் அனுபவம் மற்றும் நடைபெற்ற முறை என்பவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு அவர்கள் சில வாய்ப்புகளையே கொண்டிருந்தனர்.

> ‘ இது மிகவும் நல்லது. இதைப் பற்றி உங்களிடம் பேசிய பிறகு நான் நிம்மதியாக உணர்கிறேன். முழுக்கதையையும் நான் யாரிடமும் சொன்னதில்லை. என்னிடம் பேச யாரும் இல்லை. நான் யாரிடமாவது சொன்னால், அவர்கள் என்னைப் பற்றி எதிர்மறையாக நினைப்பார்கள். ’
>
> ரமணி, கண்டி, மத்திய மாகாணம்

> ‘ எங்கள் மனதில் மட்டுமே உள்ள சில விடயங்கள் பின்னர் பூமியில் புதைந்துவிடும் ’
>
> லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

> ‘ நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என் கதை என் மனதில் பூட்டி வைக்கப்பட்ட கதை ’
>
> ராணி, மாத்தளை, மத்திய மாகாணம்

> ‘ உண்மையில் இது எனக்கு ஒரு பெரிய நிம்மதி. இந்த விடயங்களை மனதில் வைத்துக்கொண்டு தற்கொலைக்கு முயன்றேன். என் அம்மா, அப்பாவிடம் கூட சொல்லாத விஷயங்களை நான் உங்களிடம் சொல்லிவிட்டேன். உங்களுடன் கதைக்கும்போது என் மனம் நிம்மதி அடைந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.. ’
>
> மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

மேலும், இந்த அவதானிப்புகள் பாலியல் வன்முறை தொடர்பான உண்மை கண்டறியும் செயன்முறையின் போது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை மீளவும் மனவதிர்ச்சிக்கு உள்ளாக்குவது பற்றிய கரிசனைக்கு சுவாரசியமான முரண்பாட்டை அளிக்கின்றன.

## 5.1.5. மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்கள் மீதான தனித்துவமான பாதிப்பு

பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்கள் மீது பாலியல் இலஞ்சத்தின் தனிப்பட்ட பாதிப்பு கடுமையானதாக உள்ளது. மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், தங்களது நாளாந்த வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் கடுமையான சமூகக் களங்கம் மற்றும் ஒதுக்கப்படுதல் காரணமாக பாதிப்பின் கடுமையைத் தீவிரப்படுகின்றது. கீழ்க் காட்டப்பட்ட குறிப்புகள் அவர்கள் பாலியல் இலஞ்சத்திற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களால் அணுகப்படும் போது அவர்களின் சம்மதம் முக்கியமற்றதாகிறது எனத் தெரிவிக்கின்றன.

“பொலிஸ் என்றால் இல்லை என்று சொல்ல முடியாது. பெண் வேடமிட்டு இந்த வேலையை செய்து வருகிறேன். என்னை மிரட்டுகிறார்கள். நான் அதை செய்துவிட்டு தப்பிக்க வேண்டும்...”

“ஒரு முறை, நான் 6 பேருடன் இருந்தேன். அது 3 மணி நேரத்திற்கும் அதிகமான நேரம் மற்றும் கோவிட் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட முடக்கம் திடீர் என நீக்கப்பட்ட நேரம். அப்போது அதிகாலை 2 மணி இருக்கும். அது நானும் என் நண்பரும் மட்டுமே இருந்தோம்..”

“இந்த வாழ்க்கை எனக்கு போதும் என்று உணர்ந்தேன். அவர்கள் போலீஸ்காரர்கள். பிறகு நான் அவர்களைப் பார்க்கவில்லை. நான் அவர்களை பார்க்க மாட்டேன் என்று நம்புகிறேன் ”

ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

இலங்கையில் ‘இயற்கைக்கு மாறான பாலுறவு’ குற்றமாக்கப்பட்டுள்ளதனால் மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் பொலிசாரினால் அதிகளவில் பாலியல் இலஞ்சப் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். நேர்காணப்பட்டவர்களின் கருத்துப்படி, பாலியல் தொழிலாளர்களாகப் பணி செய்யும் மாற்றுப்பாலினத்தினரிடம் பாலியல் அனுகூலத்தை பெற்றுக்கொள்வதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கள் தற்றுணிவைத் துஷ்பிரயோகிக்கின்றனர்.

“பின்னர் அவர் என்னிடம் கேட்டார், அப்படியானால் நீங்கள் எங்களுக்கு என்ன கொடுக்க முடியும்? நீங்கள் இதை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல விரும்பவில்லை என்றால், எங்களுடன் இருங்கள் [பாலுறவு கொள்தல்]. எங்களை மகிழ்விக்கவும்”

“...நான் இதையெல்லாம் [உங்களுக்கு] சொல்கிறேன், அதனால் இது வேறு யாருக்கும் நடக்காது..”

“...அவர்கள் எம்மை பிடிக்கும்போது எங்கள் தொலைபேசிகளைப் பிடுங்குகிறார்கள். அவர்கள் நினைத்தால் மட்டுமே எங்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். சில சமயங்களில் எங்களது பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். நாங்கள் ஒரு வாடிக்கையாளருடன் இருந்தால், அவர்கள் தங்கள் [வாடிக்கையாளரின்] பணத்தை எடுத்துக்கொண்டு எங்களுடன் தங்கியிருப்பார்கள். அல்லது எங்களை தாக்குவார்கள். இது எல்லா நேரத்திலும் நடக்கும் விடயங்கள். ”

நுஸ்ரத், மேல் மாகாணம்

இந்த சமூகத்திலிருந்து பாலியல் தொழிலாளர்கள் அவர்களின் பால்நிலை அடையாளம் மற்றும் அவர்களின் தொழிலின் தன்மை காணமாக பல வழிகளில் மேலும் ஓரம் கட்டப்படுகின்றனர். ஏனைய வாய்ப்புகள் இல்லாமை காரணமாகவே பாலியல் தொழிலில் அவர்கள் ஈடுபடுவதாக இந்த நேர்காணப்பட்டவர்கள் குறிப்பிட்டனர். அவர்களின் பால்நிலை அடையாளத்திற்கு எதிராக புறந்தள்ளப்பட்டும் பாரபட்சப்படுத்தப்பட்டதால் மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்கள் பலர் சமூகப் பாதுகாப்பு அல்லது ஒரு சமூக வலையமைப்புகளை அணுகுவதற்கு வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லை.

> ‘ எங்களுக்கு வேறு வழியில்லாததால் இந்த வேலையைச் செய்கிறோம். எங்களுக்கு வேறு வேலை இருந்தால் இதைச் செய்ய மாட்டோம். அவர்கள் [பொலிஸ்] எங்களிடம் உள்ள அனைத்தையும் எடுத்துக்கொள்கிறார்கள், எங்களுடன் பாலுறவு கொள்கிறார்கள், பணத்தை எடுத்துக்கொள்கிறார்கள், அவர்கள் வெளியேறும்போது எங்கள் பைகளை வீசுவிட்டு செல்கிறார்கள். சம்பாதிக்க ஒரு வழி இருந்தால், நாங்கள் இதைச் செய்ய மாட்டோம். எங்களுக்கு சம்பாதிக்க வேறு வழியில்லை. எங்களுக்கு சகோதரர்கள் இருந்தால், அவர்கள் எங்களை கவனித்துக் கொள்வார்கள்... ’
>
> நுஸ்ரத், கொழும்பு, மேல் மாகாணம்

> ‘ நான் வேலையைப் பற்றி மன சோர்வடைந்தேன். நமக்கு சரியான வேலை இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. நான் என் வாழ்நாள் முழுவதும் சோர்ந்து போனேன். நாம் ஏன் பிறந்தோம் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ’
>
> வத்சலா, கொழும்பு, மேல் மாகாணம்

பாலியல் இலஞ்ச நிகழ்வின் காரணமாக உயிருக்கான அச்சத்தினால் தங்களது வதிவிடத்தை மாற்றுவதற்குத் திரும்பத் திரும்ப முயற்சிப்பதாக நேர்காணப்பட்டவர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

> ‘ இந்த சம்பவங்களுக்குப் பிறகு, நான் எனது இருப்பிடங்களை [வேலை செய்யும் பகுதிகளை] மாற்ற வேண்டியிருந்தது... ’

> ‘ அவர்களின் கோரிக்கைக்கு நான் கீழ்ப்படியவில்லை என்றால் அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள் என்று நான் அதிகம் பயந்தேன். அவர்கள் என்னைத் தேடி வருவார்களா? என்னை வீதியில் கண்டால் சுட்டு வீழ்த்துவார்களா? அல்லது என்னைப் பற்றி என் குடும்பத்தினரிடம் சொல்வார்களா? அந்த சமயங்களில் நான் மிகவும் பயந்தேன். ’
>
> நுஸ்ரத், கொழும்பு, மேல் மாகாணம்

பாலியல் இலஞ்சம் எவ்வாறு தங்களது ஆரோக்கியத்தை பாதிக்கிறது என்பது பற்றியும் நேர்காணப்பட்டவர்கள் குறிப்பிட்டனர். இந்த விடயத்தில், பாலியல் இலஞ்சத்திற்கு கோரும் எதிர்பாராத தன்மை ஒரு திருநங்கை நபரை பாலுறவு மூலம் பரவும் ஒரு நோய்க்குத் தொற்றுக் கொண்டவராக ஆளாக்கும் அபாயத்திற்கு வழிசெய்தது.

> ‘
> .பின்னர், [பாலியல் லஞ்சம் சம்பவத்தின் போது] ஆணுறைகள் பயன்படுத்தப்படாததால், பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் (STD) கிளினிக்கில் ஒரு பரிசோதனையை மேற்கொண்டேன் ’
>
> ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

மாற்றுப்பாலின சமூகத்தின் பாலியல் தொழிலாளர்களுக்கு இந்த நிகழ்வுகள் சாதாரணமாகியுள்ளன. மேலும், பாலியல் இலஞ்சத்திற்காக பொலிசாரினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதக் கோரிக்கைகளுடன் அவர்கள் இணங்காவிட்டால், அவர்களது முழுச் சமூகத்தையும் அது ஆபத்திற்குள் இட்டுச் செல்ல முடியுமென நேர்காணப்பட்ட ஒருவர் குறிப்பிட்டார்.

> ‘
> இந்த சம்பவத்திற்குப் பிறகு, எனது நண்பர்கள் பலர் என்னைக் குற்றம் சாட்டினார்கள். அன்று இரவு நாங்கள் யாருடைய வீட்டிற்கு சென்றிருந்தோமோ அந்த நண்பர் என்னிடம் நீண்ட நேரம் பேசவில்லை. நான் நண்பர் வீட்டிற்கு அழைத்துச் சென்றது தவறு என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் நாங்கள் அதைச் செய்ய வேண்டியிருந்தது, எனவே நாங்கள் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட மாட்டோம் மற்றும் எங்கள் அடையாளங்களை (தேசிய அடையாள அட்டை) திரும்பப் பெறுவோம். அந்த நேரத்தில் நான் மிகவும் சிரமமான நிலையில் இருந்தேன். எங்களுடன் [வசித்த] அனைவரும் என்னுடன் பேசவில்லை. எனது துன்பங்கள், மகிழ்ச்சி மற்றும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள நண்பர்கள் மட்டுமே உள்ளனர். எனது தொழில் பற்றி என் குடும்பத்தாருக்கு கூட தெரியாது...
>
> வீட்டில் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் நினைத்துக் கொண்டிருந்தேன். தினக்கூலியைக் கூட எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. எங்கள் உடம்பு வலித்தது. மருந்து வாங்க செல்லவில்லை. இது எங்களுக்கு மிகவும் சாதாரணமானது. ’
>
> வத்சலா, கொழும்பு, மேல் மாகாணம்


பாலியல் மற்றும் பால்நிலை அடையாளங்கள் போன்றன பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களை பாலியல் இலஞ்சத்தினைக் கோரி அணுகுவதற்கான ஆபத்தை உருவாக்குகின்றது. மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்கள் மத்தியிலான ஒரு இலக்குக் குழுக் கலந்துரையாடலில் இந்த ஆபத்து பொதுவானது என்பதும் மற்றும் ஒரு நாளாந்த அடிப்படையில் அவர்கள் அதற்கு உள்ளாகுவதும் கண்டறியப்பட்டது. பெண்களைப் பொறுத்தவரை, அவர்களது பால்நிலை அடையாளம் அவர்களை ஆரம்பநிலை இலக்குகளாக உருவாக்குகின்றன. அதனைத் தொடர்ந்து ஒரு சமமற்ற உறவில் உள்ளதாக அவர்கள் அறியப்படும் பொழுது பாலியல் இலஞ்சத்திற்கான ஆபத்து அதிகரிக்கின்றது.

நீண்ட நேர்காணல்களில் விபரிக்கப்பட்டவாறான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்கள் சேவையொன்றைப் பெறுவதற்கு ஒரு அரசத் துறை உத்தியோகத்தரை அணுகுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அந்தச் சேவையை

வழங்குவதற்கான தற்றுணிவு அதிகாரத்தை அந்த அரசத் துறை உத்தியோகத்தரே கொண்டுள்ளார். இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் ஆபத்திலிடப்படுவதுடன் பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்படுகினறனர்.

அதிகாரம், பதவிப் படிநிலை, கல்வியறிவு, மற்றும் வறுமை பற்றிய புரிதல்கள் ஒன்றிணைந்து எவ்வாறு ஒரு பெண்ணை அல்லது மாற்றுப்பாலின சமூக உறுப்பினரொருவரை பாலியல் இலஞ்சத்தின் ஆபத்தில் இடுகின்றது என்பதை இந்த உதாரணங்கள் காட்டுகின்றன. இந்த நிகழ்வுகளின் பாதிப்புகள் மோசமாக இருந்தபோதிலும், ஆபத்திற்கு முகங் கொடுத்த நேர்காணப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கையைத் தொடர்வதை அல்லது சட்டத்திலிருந்து பாதுகாப்பை நாடவில்லை. பாலியல் மற்றும் பால்நிலைச் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு குறிப்பான சட்டப் பாதுகாப்பு இன்மையானது சட்டம் அத்தகைய சமூகத்தினருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக அவர்கள் நோக்கவில்லை என்பதையே இது கருதுகிறது. மேலும், அவர்களின் நிச்சயமற்ற சமூக அந்தஸ்து காரணமாக சட்டப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான நிதிவசதிகளும் அவர்களுக்கு இருக்கவில்லை.

> ‘ நண்பரிடம் இது பற்றிச் சொன்னால், அவர்கள் சட்டத்தரணியிடம் செல்ல வேண்டும் என்று சொல்வார்கள். எங்களிடம் பணம் இல்லை, மிஸ். ’
>
> நுஸ்ரத், கொழும்பு, மேல் மாகாணம்



## 5.2. குடும்பம் மற்றும் சமூகம் மீதான பாதிப்பு

பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தமது அனுபவங்களை பெருமளவிற்கு இரகசியமாக வைத்துக்கொள்ள விரும்பினாலும் கூட, நிகழ்வு தொடர்பான வதந்திகள் சமூகத்தில் பரவும் சந்தர்ப்பங்கள் உள்ளன. பாலியல் வன்முறையைப் பொறுத்தவரையில், சமூகம், குறித்த தனிநபர்கள், அவர்களது குடும்பம் மற்றும் அவர்களது கூட்டுக் குடும்பத்தின் மீதும் கூட சமூகக் களங்கத்தைத் திணிக்கின்றது. இந்தப் பாதிப்பை தாம் எவ்வாறாகிலும் எதிர்பார்த்தார்கள் எனவும் அதனால் நிகழ்வு பற்றி தாங்கள் இரகசியத்தைப் பேணினார்கள் என நேர்காணப்பட்டவர்கள் கூறினர்.


> ‘ இந்த சூழ்நிலையில், எனது இக்கட்டான நிலை பற்றி நான் கதைத்தால், எனது மகளைப் பற்றி பல கதைகள் இருக்கும். ’
>
> லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

> ‘ இந்த சம்பவங்கள் நீடித்தால் சங்கடமாக இருக்கிறது. எனது இரண்டு குழந்தைகளும் வெளியே செல்ல முடியாது. எனவே, நான் எனது வேலையை பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கப் போகிறேன். ’
>
> கயானி, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

ஒரு சம்பவத்தில், சம்பவத்தை இரகசியமாக வைத்துக் கொண்டமை தமது நெருக்கமான வாழ்க்கைத் துணையுடனான உறவை எவ்வாறு பாதித்தது என நேர்காணப்பட்டவர்களில் ஒருவர் விளக்கினார்.

> ‘ எனது கணவர் என்னுடன் இது பற்றி வெளிப்படையாக எதையுமே பேசவில்லை. ஆனாலும், என் மீது அவர் மனதில் கொண்டுள்ள மதிப்பு மற்றும் மரியாதை என்பன குறைந்ததை நான் உணர்ந்தேன். ’
>
> மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

மேலும், பாலியல் இலஞ்சத்தின் நிகழ்தல், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் மருத்துவ சேவையை அல்லது நீதியை நாடுவதிலிருந்து தடுக்கின்றது. இந்தப் பதிலளித்தல் நடவடிக்கை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தின் மீது ஏனைய கடும் பின்விளைவுகளைக் கொண்டிருக்க முடியும். கீழே தரப்பட்டுள்ள இரண்டு மேற்கோள்களில், இராணி மற்றும் மாலனி ஆகிய நேர்காணப்பட்ட இருவரும், வைத்தியசாலையின் சிகிச்சைகளில் சிகிச்சைப் பெற்றுக் கொள்வதற்கு தமது குடும்ப உறுப்பினர்களை உடன் அழைத்துச் செல்வதனை நிறுத்திவிட்டனர். பாலியல் இலஞ்சம் கோரப்படுதலை தவிர்ப்பதற்காக அவர்கள் அதனை மேற்கொண்டனர்.



> ‘ எனது மாமி நினைத்தார், நான் திருமணத்திற்கு அப்பாற்பட்ட ஒரு உறவைக் கொண்டிருக்கிறேன். எனது மாமி இது பற்றி எனது கணவரிடம் கூறினார். எனது கணவர் நிலைமையை அவருக்கு விளக்கிக் கூறினார். தான் மீண்டும் சிகிச்சைக்குப் போக வேண்டிய தேவை இல்லை என எனது மாமி கூறினார். எனது கணவர் வீட்டிற்கு வந்ததும் தொலைபேசி இலக்கத்தை தொடர்புப் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டார். பிரச்சினை அங்கேயே முடிந்தது. ’
>
> ராணி, மாத்தளை, மத்திய மாகாணம்


> ‘ இலக்கத்தைத் தடை செய்ததும் அவன் வேறு தொலைபேசி இலக்கங்களிலிருந்து பேசுவதற்கு ஆரம்பித்தான். கடைசியில், நான் எனது ‘சிம்’ அட்டையையே தடை செய்தேன். சிகிச்சைக்குப் போவதையும் கூட நிறுத்தினேன். எனது மைத்துனியுடன் எனது அம்மாவை சிகிச்சைக்கு அனுப்ப ஆரம்பித்தேன். சிம் அட்டையை செயலற்றதாக்கிய பின்னர், எனது தாயை சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதாயின், அந்த மனிதனுக்கு நான் முகம் கொடுக்க வேண்டியதாகி விடும். ’
>
> மாலினி, கண்டி, மத்திய மாகாணம்

இன்னும் சில சந்தர்ப்பங்களில், பாலியல் கோரிக்கைகளுக்கு இணங்குவதற்கு பாதிக்கப்பட்டுத் தபபிப்பிழைத்தவர் மறுப்பாராயின், சேவை ஒன்றை வழங்குவதற்கு ஒரு சட்டக் கடப்பாட்டின் கீழ் உள்ள குற்றமிழைப்பவர் அதனை வழங்குவதற்கு

மறுக்கின்றார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் கோரப்பட்ட பாலியல் இலஞ்சத்தை அவர் மறுத்ததின் பின்னர் அப்பொலிஸ் உத்தியோகத்தரின் பதில் நடவடிக்கை குறித்து பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

> ‘ அதன் பின்னர், நாங்கள் பொலிஸிற்குச் சென்ற போது அவன் முகத்தைக் கோணலாக்கி எங்களை நிந்தனை செய்தான். ’
>
> ஜென்னி, கம்பஹா, மேல் மாகாணம்

பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மட்டுமே இந்த அனுபவத்தினூடாக கடந்து செல்வதில்லை. குற்றமிழைப்பவரைத் தடுப்பதற்கு தமது வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளைகள் எவ்வாறு தலையிடுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர் என நேர்காணப்பட்டவர்களில் சிலர் குறிப்பிட்டனர். மாலனியின் விடயத்தைப் பொறுத்தவரையில் குற்றமிழைத்தவரை இந்தத் தலையீடுகள் தடுக்கவில்லை. இரண்டாவது சந்தர்ப்பத்தில், ஜீவா (குழந்தையின் தாய்) தனது பிள்ளை இதனால் பழிவாங்கப்படக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாக பிள்ளையை இந்த விடயத்தில் தலையிடுவதற்கு அனுமதிக்கவில்லை. ரூபாவின் அனுபவத்தைப் பொறுத்தவரையில் வாழ்க்கைத் துணையின் தலையீடு வெற்றிகரமானதாக இருந்தது.



> ‘ அதன் பின்னர், அன்று இரவிலிருந்தே தொலைபேசியில் அவன் அழைப்பை மேற்கொள்ள ஆரம்பித்தான். எல்லா வேளைகளில் அழைக்க ஆரம்பித்தான். ‘வட்ஸ்அப்’ இற்கு குரல் பதிவுச் செய்திகளை அனுப்ப ஆரம்பித்தான். அதன் பின்னரே அவனது இந்த தொலைபேசி இலக்கத்தை எனது கணவரிடம் கொடுத்தேன். கணவர் அவனை அழைத்து எனக்கு அழைப்பு ஏற்படுத்தி பேச வேண்டாம் என்று கூறினார். எனினும், அவன் இன்னமும் கேட்பதாக இல்லை. எல்லா வேளைகளிலும் அவன் எனக்கு அழைப்பினை மேற்கொண்ட வண்ணமே உள்ளான் ’
>
> மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

> ‘ இல்லை அம்மா, அவர் எப்படி அவ்வாறு செய்வதற்கு முடியும்? நாங்கள் சென்று பொறுப்பதிகாரியிடம் சொல்லுவோம். [ஜீவாவின் மகன்]
>
> ‘ தற்போதைய நிலைமையின் படி, பொலிஸ் பதிவுகளில் எனது மகனின் பெயர் எழுதப்படுவது எதிர்காலத்தில் கூட எனது மகனால் வேலை ஒன்றைப் பெறுவதற்கு இயலாது போய்விடுவதைக் கருதும். அது ஒரு பாதிப்பைக் கொண்டிருக்கும். நான் அந்தக் கோணத்தில் பார்த்தேன். நான் மிகவும் பயந்தேன். ’
>
> ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்

> ‘
> அனைத்துத் தொலைபேசி உரையாடல் பதிவுகளையும் வெளியிடப் போவதாக எனது கணவர் அச்சுறுத்தினார். இயலுமாயின் அதனைச் செய்யுமாறு குறித்த குற்றவாளி எனது கணவருக்குச் சவால் விட்டார். அப்போது எனது கணவர் பதிவு செய்த உரையாடலொன்றைப் போட்டுக் காட்டியதும் அவர் சார்பாக வாதாட வந்த சட்டத்தரணி தனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கினார் ’
>
> ரூபா, இரத்தினபுரி, சப்பிரகமுவ மாகாணம்

## 5.3. முறைசாரா ஆதரவு

பாலியல் இலஞ்ச அனுபவத்தின் மனஅதிர்ச்சி மற்றும் சமூகக் களங்கத்தைக் கையாள்வதில் தங்களது முறைசாரா ஆதரவுக் கட்டமைப்புக்களிலேயே தாங்கள் தங்கியிருந்ததாக அதிகளவிலான பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தெரிவித்தனர். அநேகமான சம்பவங்களில், தமக்கு நம்பகமான நண்பரொருவரிடம் இரகசியத்தைப் பகிர்ந்தும், மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஒரு குடும்ப உறுப்பினரிடமும் அவர்கள் ஆறுதல் கண்டனர்.

> ‘
> இது பற்றி நான் கிராமத்திலுள்ள நண்பரிடம் கூறினேன். அதன் பின்னர் நான் நிம்மதியாக உணர்ந்தேன். சுமை குறைந்து, நான் அதிகம் இலேசாக உணர்ந்தேன். ’
>
> ரமணி, கண்டி. மத்திய மாகாணம்

> ‘
> எனது தந்தை என்னை வீட்டிற்கு கூட்டிச் சென்று என்னை ஆசுவாசப்படுத்தினார். எனக்கு அவர் ஓர் உளவள ஆலோசகர் மாதிரி இருந்தார். எனது தந்தை மட்டும் அங்கு இருந்திராவிட்டால், நான் தற்கொலை கூட செய்திருப்பேன். ’
>
> பிரியா, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

இந்த கற்கைக்காக நேர்காணப்பட்டவர்கள் எவரும், சம்பவத்துடன் சார்ந்த மனஅதிர்ச்சியை கையாள்வதற்கு ஓர் உளச்சமூக ஆலோசகரின் சேவைகளை நாடவில்லை அல்லது அத்தகைய உதவிகள் வழங்கப்படவோ இல்லை. இலங்கையில், உளவியல் நலன்களுக்கு தொழில் ரீதியான தலையீடு அல்லது கவனிப்பு ஒரு தேவைப்பாடாக கருதப்படாத நிலையில், மேலே தெரிவிக்கப்பட்ட நிலைமை ஒன்றும் அசாதாரணமானதல்ல. தனிநபர்கள் தங்களின் மனநலத்தை மேம்படுத்துவதன் தேவையை உணர்ந்தாலும் கூட அத்தகைய தொழில்சார் சேவைகளைத் தொடர்ச்சியாக அணுகுவதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கோ இயலுமான வசதிகளை அவர்கள் கொண்டிருப்பர் என்பது நிச்சயமல்ல.

## 5.4. சமூக மற்றும் கலாச்சாரக் காரணிகள்

பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்படுகின்ற ஆபத்து ஏற்படும் தன்மை மற்றும் அதற்கான ஆபத்து நிலைமையொன்றில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இட்டுச்செல்லும் காரணிகளை அவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. அநேகமான பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் இந்த காரணிகள் மற்றும் அவர்களை ஆபத்தில் இட்டுச்செல்லும் சில சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரக் காரணிகள் பற்றி சுயமாகவே அறிந்துள்ளனர். மேலும், நெருங்கிய குடும்பத்திற்குள் கூட பாலியல் இலஞ்ச சம்பவம் பற்றி வெளிப்படையான அபிப்பிராயம் கொண்டிருப்பதில் ஆண்மை பற்றிய கண்ணோட்டங்களும் ஒரு தடையாக இனங் காணப்பட்டன.

‘

இது தொடர்பாகக் கணவர்மார்களுக்கு விளங்கப்படுத்த முடியாது பொலிஸ்காரரைப் பார்த்து நீர் ஏன் எனது மனைவிக்கு அழைப்பை எடுத்தீர்? என அவர் கேட்டால், அது எனது கணவருக்குப் பிரச்சினைகளை உருவாக்கும். அவர்கள் இதனைப் புரிந்த கொள்ள மாட்டர்கள். ’

ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்

‘

[பாதிக்கப்பட்டவரின் மகளுக்கு கூட இந்த சம்பவம் தெரியாது. கணவரிடமும் கூட இது பற்றித் தெரிவிக்கவில்லை] ஆண்கள் மிகவும் ஆக்ரோஷமானவர்கள். இதை நான் அவர்களுக்கு கூறிய பின்னர், அவர்கள் பிரச்சினையில் மாட்டிக் கொண்டால், சதா காலமும் அவர்கள் உள்ளுக்குள்ளேயே (சிறையில்) இருக்க வேண்டும். ’

ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு உள்ளடங்கலாக பல்வேறு காரணங்களினால் வீட்டில் கணவர் இல்லாத நிலையில், பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்படும் ஆபத்தில் மனைவி இருக்கின்றார்.


‘

எனது கணவர் வீட்டில் இல்லாத காரணத்தினால் தான் இது போன்ற விடயங்கள் நிகழ்வதாக நான் எண்ணினேன். நான் வேதனை அடைந்ததுடன் மனமுடைந்து போனேன். அதனால் நான் கோபமடைந்து அவரைத் திட்டினேன்...

“வீட்டில் கணவர் இல்லாத ஒரு பெண்ணை கயமைத்தனமாக சிக்கலில் வீழ்த்துவது ஓர் ஆண்மகன் செய்கின்ற காரியமல்ல” என்று நான் திட்டினேன். ஆனால், நான் திட்டிய பொழுது அவன் சிரித்தான். நான் ஏதோ அவனது அனுதாபத்தைப் பெறுவதற்காக திட்டுவதாக நினைத்தான் என நம்புகிறேன் நான் அவனை திட்டும் பொழுது, அதனால் அவன் மேலும் உற்சாகமடைவது போல நான் உணர்ந்தேன் ’

மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சட்டவிரோத நடவடிக்கைகளிலான அவர்களின் ஈடுபாடு பாலியல் இலஞ்சத்தின் ஆபத்தில் தனிநபர்களை தள்ளும் மற்றொரு காரணியாக உள்ளது. ஜென்னியின் விடயத்தில், அவர் பாலியல் தொழில் செய்பவராக இருப்பதாலும், மற்றும் அவரது கணவர் போதைப்பொருள் சார்ந்த குற்றங்களுக்காக தடுப்பில் இருப்பதாலும், அவருடைய பருவ வயது மகளும் பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்பட்டார்.



‘ நான் நாள் முழுவதும் தனிமையில்... துக்கத்தில் அழுதேன். என்ன செய்வது? எனக்கு யார் இருக்கிறார்கள்? என்னால் இதை யாருக்கும் சொல்ல முடியாது. யாரிடம் நான் இதைச் சொல்வேன், கடவுள்களிடம் கூட என்னால் சொல்ல முடியாது. எங்களிலும் தவறு உள்ளது. நாங்கள் ஏதோ (தப்பாக) செய்திருக்கிறோம் என்பதால் தானே இந்த விடயங்கள் எங்களுக்கு நடந்தது, சரியா? மீண்டும் இதனை நான் செய்ய மாட்டேன் என நான் வாக்குத் தருகிறேன், உயிர்வாழ்வதற்கு எப்படியாகிலும் நான் சமாளித்துக் கொள்கிறேன். அடுத்த நாளிலிருந்து அதனை [வேலையை] நான் நிறுத்தி விட்டேன். அவர்கள் இன்னமும் வருவார்கள். காரணமேயில்லாமல், அந்தப் பேய்கள் இன்னமும் வருவார்கள். அண்மையில், அவர்கள் எனது கணவரை மீண்டும் கூட்டிப் போய்விட்டார்கள். ’

ஜென்னி, கம்பஹா, மேல் மாகாணம்

மனோரியும் இதே அனுபவத்தையே கொண்டிருந்தார். தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது கணவரைப் பார்வையிடுவதற்கான உரிமையை அவர் நாடியதால் பாலியல் இலஞ்சத்திற்கான ஒரு இலக்கானார்.

இரோமியை இரண்டு காரணிகள் ஆபத்திற்கு உள்ளாக்கியது. ஒன்று அவருடைய விசேட தேவைகள் கொண்ட உடல்நிலை மற்றையது அவரது தொழில். தனது நிலைமையின் காரணமாக தமக்கு அது சிரமமானதாக இருக்குமென்பதால் தனது இடமாற்றம் இரத்துச் செய்யப்படுவதற்கு வேண்டிக்கொள்ள அவர் விரும்பினார். அத்தகைய நலிவுற்ற நிலைமை அவரைப் பாலியல் இலஞ்ச ஆபத்திற்கு உள்ளாக்கியது.

‘ எனது வேலைக்காக எதனையும் நான் செய்வேன் என்பதே எனது மனதில் இருந்தது. ஆனால் அதற்காக எனது முழு வாழ்க்கையையுமே தியாகம் செய்ய வேண்டியிருந்தது... இரண்டு நாட்களில் அதே மாதிரி அவன் தொலைபேசியில் அழைத்தான். இரண்டாம் நாள் எனது தயார்நிலையை அவனுக்குக் கூறினேன். இது எனது விருப்பமல்ல, எனக்கு வேறேதும் தெரிவு இல்லாததனால், அந்த சம்மதம், எனது நிர்க்கதியான நிலையின் காரணத்தினால் அளிக்கப்பட்டதாகும். அவன் எங்கு அழைக்கிறானோ அங்கு நான் வருகிறேன் என்று கூறியதும், அவன் முழுவதும் தயாராகி விட்டான். ’

இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

## 5.5. பாலியல் இலஞ்சம் தொடர்பாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் கண்ணோட்டங்கள்

பாலியல் இலஞ்சம் என்பது நிச்சயமாகத் தவறு என்கிற கண்ணோட்டத்தைப் பல பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கொண்டிருந்தனர். பாலியல் இலஞ்சம் ஒரு தீர்க்க முடியாத பிரச்சினை என, லலிதா குறிப்பிட்டார். அதற்கு தீர்வுகள் காண்பது எளிதல்ல என்ற கண்ணோட்டத்தைக் அவர் கொண்டிருந்தார். பாலியல் இலஞ்சம் இரகசியமான வகையில் இடம்பெறுவதன் காரணமாக, ராணியும் அவ்வாறான அபிப்பிராயத்தினை தெரிவித்தார்.


‘ சட்டத்தைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ள ஒரு நபர் இவ்வாறு நடந்து கொள்வதென்பது நிச்சயமாக ஒரு பெரும் தவறு என நான் நினைத்தேன் ’

லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

‘ தற்போதைய நாட்களில் எல்லா விடயங்களும் தொலைபேசி ஊடாகவே இடம்பெறுவதனால், இந்தப் பாலியல் இலஞ்ச நிலைமையை இல்லாமல் செய்வது அல்லது தடைசெய்வது சாத்தியமானது என்றே நான் நினைக்கிறேன். ’

ராணி, மாத்தளை, மத்திய மாகாணம்

பாலியல் இலஞ்ச அனுபவத்தின் காரணமாக கோபம், விரக்தி மற்றும் அச்சம் போன்ற வலுவான உணர்வுகளை மனோரி வெளியிட்டார். அது வாழ்க்கையை அழித்து விடும் ஒரு விடயமாக ஜீவா விவரித்தார்.



‘ உண்மையில் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது எனக்கு கோபமும், துக்கமும் ஏற்பட்டது. ஏனென்றால், நான் உதவியற்ற ஒரு நிர்க்கதியான நிலையிலிருந்தேன். இருப்பினும் அவன் மட்டுமே இக்காரியத்தை எனக்கு செய்தான். ஏனென்றால், நான் மிகவும் உதவியற்றவளாக இருந்தேன். ஏனென்றால் நான் தவறு எதுவும் செய்யவில்லை, இல்லையா? ’

மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

‘ இது மிகவும் குறைந்த மட்டத்திலான இலஞ்சமாகும். இது ஒருவரது முழு ஆன்மாவைக் கோருவது போன்றது ’

ஜீவா, மாத்தளை. மத்திய மாகாணம்

‘ அவன் ஒரு மிருகம். ஒரு நாள் அவன் சாபம் இடப்படுவான் ’

இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

பாலியல் இலஞ்சத்திற்காக தான் அணுகப்பட்ட போது அவர் அனுபவித்த உறுதியான மற்றும் எதிர்மறையான உணர்வுகளையும், உடல் ரீதியாக தான் எதிர்கொள்ள நேரிட்ட விடயங்கள் தொடர்பாக கயானி விபரித்தார். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீது பாலியல் இலஞ்சத்தின் ஆழமான மனஅதிர்ச்சிப் பாதிப்பை இந்த அவதானிப்புகள் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன.

‘ நான் அதிர்ச்சியடைந்தேன். எனக்கு வியர்த்து நடுங்கியது. நான் விரைவாகத் தொடர்பைத் துண்டித்துவிட்டு சிறிது தண்ணீர் பருகவென வெளியே ஓடினேன். எனக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இந்த மனிதனை ஏசுவதற்கு கூட பலம் இல்லாதிருந்தது. அந்த நேரத்தில் நான் உணர்ந்தது துக்கமா, கோபமா அல்லது அச்சமா என்று எனக்கு விபரிப்பதற்குத் தெரியவில்லை. ’

கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

குற்றமிழைப்பவரால் ஏனையோரும் பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகலாம் என்ற சாத்தியத்தன்மைக்கு பல்வேறு நேர்காணல்களும் கூருணர்வு கொண்டதாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் ஒரு மௌனமான சமூகத்தினைக் கற்பனை செய்வதாகக் காணப்பட்டது.

‘ குறித்த சம்பவம் தொடர்பாகக் கதைப்பது எனது மனநிலையைக் கட்டியெழுப்ப உதவுகின்றது. இப்படிக் கதைப்பது முக்கியம் என நான் நினைக்கிறேன். என்னைப் போல் அங்கே எத்தனை பேர் இருப்பர்..? ’


மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

‘ பாலியல் இலஞ்சத்தை ஒரு சிறிய விடயமாக கருதாமல் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிலவற்றை நாங்கள் மறைப்பது போல இதனைச் செய்கிறோம். இதன் காரணமாக கூடுதலாக பிரச்சினைகளை எதிர்நோக்கும் பெண்கள் அங்கே இருக்கலாம். ’

மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

‘ என்னைப் போல் இன்னும் எத்தனை ஆதரவற்றவர்கள் இருக்க வேண்டும்? அதாவது, சமூகத்தில் அதிகம் வெளிப்படாத மற்றும் குறைந்த அறிவைக் கொண்டவர்கள் உண்மையில் உதவியற்றவர்களாக அதிகம் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களை காணப்படுகின்றனர். அழைப்புகளுக்கு பதிலளிப்பதன் மூலம் அவர்கள் இதை அனுமதிப்பார்கள். எத்தனை அப்பாவி பெண்கள் இருப்பார்கள்? ’

ஜீவா, மாத்தளை, மத்திய மாகாணம்



‘

எனக்கு விபரங்கள் தெரியாது, ஆனால் நிச்சயமாக வேறு பெண்களையும் இவ்வாறு செய்வதற்கு அவன் கேட்டிருக்கலாம். அவன் போதுமான தைரியத்துடன் என்னிடம் நடந்து வந்து எனது கைகளைப் பற்றுவதற்கு முடியுமானால், ஏனைய பெண் வாடிக்கையாளர்களின் நிலைமையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ’

ரூபா, இரத்தினபுரி, சப்பிரகமுவ மாகாணம்

மேலும், குற்றமிழைத்தவர் குற்றம் புரிவதனை வழக்கமாகக் கொண்ட ஒருவர் என்ற அபிப்பிராயத்தை மாலனி கொண்டிருந்தார். பாலியல் இலஞ்சம் என்பது இரு தரப்பினருக்கும் இடையிலான பரிவர்த்தனை மாத்திரமே என்ற கருத்தினை ஒரு திருநங்கையான ரீட்டா குறிப்பிட்டார். தனக்குத் தேவையாக இருந்த சேவை ஒன்றிற்குப் பதிலாக தம்மிடமிருந்து இந்தச் சலுகை கோரப்பட்டது என அவர் புரிந்து கொண்டார். இவ்வாறான பாலியல் இலஞ்ச நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்டவர் தான் மட்டுமல்ல, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த மற்றுமொரு நபரே என்பதனையும் கூட அவர் புரிந்து கொண்டார்.

‘

பழக்கத்தின் காரணமாக அவன் இவ்வாறு செய்வதாக நான் உணர்கிறேன். இல்லாது விட்டால் இதைப் போல பயமில்லாமல் எங்கும் கேட்க முடியாது. அடுத்த நாளே அழைப்பை ஏற்படுத்தி என்னை ஞாபகம் இருக்கிறதா எனக் கேட்க முடியாது, இவ்வாறு செய்வது அவனுக்கு பழக்கமானது போல ’

மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

‘

காரியங்களை முடித்துக் கொண்டு கூடிய விரைவாக எனது தந்தையைப் போய் பார்க்க வேண்டும். முன்னர் தான் ஒரு மாற்றுப்பாலினத்தவருடன் ஒரு தொடர்பைக் கொண்டிருப்பதாக அவர் என்னிடம் கூறினார். அந்தப் பெண் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் தந்தையுடன் பேசுவதை நிறுத்தி விட்டார், என்னைப் போல. அவர் அந்தப் பெண்ணை அதே வைத்தியசாலையில் சந்தித்தார்... ’

ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

## 5.6. பாலியல் இலஞ்சக் குற்றமிழைப்பவரின் கண்ணோட்டங்கள் (பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரால் தெரிவிக்கப்பட்டவாறு)

பாலியல் இலஞ்ச நிகழ்வு பற்றித் தம்மைச் சுயமாக இனங் காட்டிக்கொண்ட பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்கள் தொடர்பில் கற்கை கவனம் செலுத்தியது. அவர்கள் அனைவரும் குற்றமிழைப்பவர் தொடர்பில் கருத்து தெரிவித்ததுடன், பாலியல் இலஞ்சத்தைக் குற்றமிழைப்பவர் எவ்வாறு நோக்கினர் தொடர்பில் தங்களது புரிதல்களையும் வெளிப்படுத்தினர். பல சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரின் சம்மதத்தைப் பொருட்படுத்தாமல் அவர்கள் பாலியல் இன்பத்திற்கான ஒரு பொருட்டாக வெறுமனே கருதப்பட்டும் மற்றும் குறிவைக்கப்பட்டனர். மூன்று சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் மீது குற்றிமிழைப்பவர் ஏதோவொரு வடிவத்தில் அனுதாபத்தை வெளிப்படுத்தியுள்ளார், ஆனாலும் அந்த அனுதாபம் ஒருவித பிரதிபயன் கருதியே வெளிப்படுத்தப்பட்டது என பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர் இனங் கண்டு கொண்டார்.

‘

என்னுடன் தொடர்ந்து கதையுங்கள், உங்கள் மீது நான் ஈர்க்கப்பட்டுள்ளேன் ’

—

மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

‘

அவர் என்னைப் பார்க்கும்போது விரும்புவதாகவும், நான் அவரை தனியாக வந்து சந்திக்க முடியுமா என்று கேட்டார். நான் என் கையை நகர்த்திவிட்டு, மீண்டும் அவரது இருக்கைக்குச் செல்லச் சொன்னேன். ’

—


ரூபா, இரத்தினபுரி, சப்ரகமுவ மாகாணம்

‘

எனது தங்கமே! [நெருங்கிய உறவுகளுக்குள் அன்பின் நிமித்தம் பிரயோகிக்கப்படுகின்ற வார்த்தை] நாளை இரவு நீ என்னுடன் இருக்க வேண்டும். நான் இன்று இரவு உனது இடத்திற்கு வருகிறேன் எனவும் அவன் கூறினான். ’

—

கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்



‘

இது என்னவென்று எனக்குத் தெரியும். நான் புரிந்து கொண்டேன். நான் அவ்வளவு அப்பாவி இல்லை. [அவர் கூறினார்] “நான் உன்னைத் தொடும்போது எனக்கு உணர்வுகள் ஏற்படுகின்றன. நான் ஆயிரக்கணக்கான நோயாளிகளைத் தொட்டாலும், உங்கள் மீது ஆழமான உணர்வுகளைப் பெறுகிறேன் என்று அருவருக்கத்தக்கதாகக் கூறினான். ‘தொட்டால் போதாது, ஆடை இல்லாமல் இருக்கும் புகைப்படங்களை எனக்கு அனுப்புங்கள்’ என்றார். பிறகு கடைசியாக நான் வேண்டும் என்றார். அவர் நான் வேண்டும் என்று அன்பினால் சொல்லவில்லை. நான் அவருடன் இருக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். ’

—

லக்ஸ்மி, அம்பாந்தோட்டை, தென் மாகாணம்

‘

என்னுடன் தொடர்ச்சியான ஓர் உறவைக் கொண்டிருப்பதற்குத் தான் விரும்புவதாக அந்த மனிதன் அறைக்குள் வைத்து சொன்னான். இப்படியான ஆட்களுக்கு வெட்கமே இல்லை. என்னைப் பொறுத்தவரை அவன் நினைப்பது, அவனது ஆசை நாயகியாக நான் வந்து அந்த மிருகத்துடன் பாலுறவு கொள்ள வேண்டும் என்பதே, வேறு என்ன? எனக்குச் சில பேசத்தகாத வார்த்தைகள் மனதில் தோன்றுகின்றன. இந்த விடயங்களை நான் நினைக்கையில் இப்போதும் கூட எனது இரத்தம் கொதிக்கின்றது.

> விடயம் என்னவென்றால்... ஆண்களின் பாலியல் இச்சைகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே பெண்கள் உள்ளனர் என அவர்கள் நினைக்கிறார்கள். இது தான் இங்குள்ள பிரதான பிரச்சினையாகும்.
>
> இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

குற்றமிழைத்த மற்றொருவர், பாலியல் இலஞ்சத்திற்கான ஒரு நிலைமைக்குள் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரை கவர்ந்தழுத்துப் பின்னர் அவர் அதனைக் கோரியுள்ளார். வழமையானது போன்று காணப்பட்ட அழைப்பின் தன்மை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரது பாதுகாப்புக்கு பங்கம் விளைவித்தது.

> என்னைப் பற்றித் தப்பாக நினைக்காது என்னுடன் இரவு உணவுக்கு கொழும்புக்கு வர முடியுமா, என அவன் கேட்டான். காலியில் எத்தனையோ இடங்களிருக்கிறது, அப்படியிருக்க எதற்கு கொழும்பு? என நான் யோசித்தேன். கொழும்பு மிகவும் தொலைவில் உள்ளது. காலி என்றால் வருகிறேன் என்று நான் சொன்னேன். காலி அவனுக்குப் பாதுகாப்பில்லை என்பதால் நாம் கொழும்புக்கே போக வேண்டும் என்றான். யாருக்கும் அறிவிக்காது வரவும் என்று அவன் என்னைக் கேட்டுக் கொண்டான்...
>
> பிரியா, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

மற்றொரு குற்றமிழைத்தவரான, ஒரு பொலிஸ் உத்தியோகத்தர், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரான, ஜெயாவிற்கு, பாலியல் இலஞ்சம் என்பது, குடும்ப பின்னணி அறிக்கை ஆவணத்தை (விண்ணப்பதாரி வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதற்காக விரும்பியுள்ளார்)[41] தயார்ப்படுத்துவதற்கு அளிக்க வேண்டிய 'அதற்கு இது' என்ற வகையிலான ஒரு பிரதிபலன் நடவடிக்கை மட்டுமே என்று தெரிவித்துள்ளார். இதே அணுகுமுறை, வைத்தியசாலை உதவியாளரார் ஒருவரால், சுகவீனமுற்ற தனது தந்தையைப் பார்க்கச் செல்வதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரான, ரீட்டா என்பவரை அனுமதிப்பத்திரம் இன்றி அனுமதிப்பதில் காண்பிக்கப்பட்டது.

> பின்னர் அவன் பேசத் தொடங்கினான். 'ஷ், ஷ்', சத்தம் போட வேண்டாம், மெதுவான குரலில் "ஒரு பெண்ணாக இருந்து கொண்டு, பணத்திற்குப் பதிலாக உன்னால் என்ன தர முடியுமென்பது பற்றி உனக்குத் தெரியாதா?" என எனது மார்பை தனது கண்களால் துழாவியபடி அவன் சொன்னான்.
>
> ஜெயா, காலி, மேல் மாகாணம்

> [அவன் சொன்னான்] "எனக்கும் உதவி செய். ஐந்து நிமிடங்களுக்கு குளியலறைக்கு என்னுடன் வா. நாங்கள் குளியலறைக்கு போவோம்." அந்தச் சமயத்தில் என் மீது ஓர் ஆணுறை கூட இருக்கவில்லை. ஆனாலும் நான் அதைச் செய்தேன்.
>
> ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

[41] நேர்காணல் முன்னோடியை அணுகுவதற்கு இணைப்பைப் பார்வையிடவும்.

தமக்கு எதிர்கொள்ள இருக்கும் இடமாற்றம் பற்றி, தான் பேச வேண்டிய சுகாதாரத் துறையைச் சேர்ந்த அரசத் துறை உத்தியோகத்தரான குற்றமிழைத்தவரின் எதிர்பாராத மற்றும் அச்சுறுத்தும் நடத்தையின் காரணமாக தான் முற்றிலும் உதவியற்றவராக உணர்ந்தமை தொடர்பில் இரோமி கதைத்தார்.

> ‘
> என்னை அனுபவித்த பின் இரண்டாவது தடவை திரும்பவும் அழைத்து என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என நான் எனது துன்பத்தை வெளிப்படுத்திய போது, அவன் என்னை அச்சுறுத்தினான். என்னை தகாத வார்த்தைகளில் திட்டினான். அத்தனையும் கெட்ட வார்த்தைகள். “எனக்கு இடமாற்றம் மட்டுமல்ல, என்னை வேலையிலிருந்து நீக்கி என்னைச் சிறைக்கும் அனுப்பி விடுவதாகவும் சொன்னான். நான் அங்கு அவசியமற்று வந்து தன்னை உணர்ச்சி வசப்படச்செய்து தூண்டிவிட்டேன் என்று பையத்தியக்காரத்தனமாக உளறினான். எனக்கு 24 மணித்தியாலங்கள் மட்டுமே அவகாசம் தருவேன் எனவும் எனது முடிவு மட்டுமே தேவை என்றும் மிரட்டினான். நான் யாரிடம் இது பற்றிச் சொல்வேன். இந்த விடயங்களுக்காக மற்றையவர்களைப் போன்று பொலிஸ ாரிடமோ அல்லது நீதிமன்றத்துக்கோ செல்வதற்கு என்னிடம் பணம் இல்லை. நான் வேலையை இழந்தால் நாங்கள் அனைவருமே பட்டினி தான் இருக்க வேண்டி வரும். ’
>
> இரோமி. மாத்தறை, தென் மாகாணம்

## 5.7. ஒப்புதல் தொடர்பான கண்ணோட்டங்கள்

இலஞ்சத்தின் ஒரு வடிவமான பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு தாம் ஒப்புதல் அளித்தமை தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு கற்கையில் பங்குபற்றியவர்கள் அழைக்கப்பட்டனர். இதன் போது கிடைக்கப்பெற்ற பதில்கள் பாலியல் இலஞ்ச நிகழ்விலுள்ள ஒரு சிக்கலான விடயத்தை வெளிப்படுத்தின. வாய் வார்த்தை மூலமாக மறுப்பதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் முயற்சித்தனர், வேறு சிலர், இல்லை என்று சொல்வதற்கு உடல் ரீதியான வன்முறையைப் பிரயோகித்துள்ளனர். அவை எல்லாம் வெற்றிகரமானவையாக அமையவில்லை. வேறு சந்தர்ப்பங்களில், ஒப்புதல் அல்லது ஒப்புதல் இன்மையானது சம்பவம் நிகழ்வதற்கு ஒரு பொருட்டானவையாக இருக்கவில்லை. பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதற்கும், அவற்றுக்கான தண்டனைகளை வழங்குவதற்கும் சட்ட அல்லது கொள்கைச் சீர்திருத்தத்தினை மேற்கொள்ளும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான சிந்தனைகளை இந்தக் கற்கை முடிவுகள் வழங்கின. பாலியல் இலஞ்சம் இடம்பெற்றதா அல்லது இல்லையா என்பதனை சட்டம் தீர்மானிப்பதில் ஒப்புதல் ஒரு அளவுகோலாக இருக்க முடியாது.

மாலனி மற்றும் மனோரியைப் பொறுத்தவரையில், பாலியல் செயற்பாடுகளுக்கு அவர்கள் ஒப்பதல் அளித்தனரா அல்லது இல்லையா என்பது முக்கியமில்லை.

> ‘
> எனது மறுப்பைத் நான் தெரிவித்த போது எனக்கு அந்த உரிமை கிடைக்கவில்லை (மறுப்பதற்கான உரிமை). எனது கை அல்லது கால்களின் பலத்தை உபயோகித்ததால் மட்டுமே தப்பிப்பிழைத்தேன். இல்லாவிட்டால் வேறு விடயங்கள் நடந்திருக்கலாம். சம்மதமில்லாமலே எல்லாம் நடந்தன. ’
>
> மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

பெண்கள் பாலியல் இலஞ்சத்தில் ஈடுபடுவதற்கு தயாராக இல்லை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள் என்பதை சமூகம் நம்பாத ஒரு போக்கு காணப்படுதாக மாலனி குறிப்பிட்டார்.

> ‘ பிரச்சினை பற்றி நாங்கள் சிந்திக்கும் விதத்தை நாங்கள் மாற்ற வேண்டும். பெண்கள் எப்படித்தான் தவறு இழைக்காதவர்களாக இருந்தாலும் பயனில்லை, கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது ’
>
> மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

ரூபாவைப் பொறுத்தவரை, இரு தரப்பினதும் சம்மதத்துடன் மட்டுமே பாலுறவு இடம்பெற முடியுமென்பது அவருக்கு மிகத் தெளிவானதாக இருந்தது. வேறு எந்த வடிவமும் சட்டவிரோதமானது. அவ்வாறே, ஒப்புதலளிப்பதற்கு அல்லது அளிக்காமலிருப்பதற்கான ஓர் உரிமையைத் தான் கொண்டிருக்கிறார் என்பதை நுஸ்ரத் புரிந்து கொண்டார்.

> ‘ இரண்டு ஆட்களின் சம்மதத்துடனேயே பாலுறவு இடம்பெறுகின்றது. அது முறையற்ற பலத்தை உபயோகித்து நடைபெறக்கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் அது ஒரு துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தலாகும். ’
>
> ரூபா, இரத்தினபுரி, சப்பிரகமுவ மாகாணம்

> ‘ நான் ஒரு பாலியல் தொழிலாளி. ஒப்புதலுடன் எனது உடம்பைக் கொடுப்பதற்கு எனக்கு உரிமை உள்ளது. இந்த விடயத்தில், இது பலவந்தம். ஆனால், நான் முன்னர் விபரித்த சந்தர்ப்பங்களில், நாங்கள் பலவந்தப்படுத்தப்பட்டோம். ’
>
> நுஸ்ரத், கொழும்பு, மேல் மாகாணம்

பாலுறவு தொடர்பில் ஒப்புதல் அளிப்பதற்கான உரிமை குறித்து இவ்வாறான ஒத்த கருத்தையே இரோமியும் கொண்டிருந்தார்.

> ‘ ஆனால், நாங்கள் எதனை விரும்புகிறோம் மற்றும் விரும்பவில்லை தொடர்பில் தீர்மானிப்பதற்கு பெண்கள் எங்களுக்கு ஒரு சுதந்திரமான உரிமை உள்ளது. தெரிவு செய்வதற்கு உரிமை இருக்குமாயின், நிச்சயமாக நிராகரிப்பதற்கும் உரிமை அங்கே உள்ளது. எனக்குத் தெரிந்தவரையில் பாலுறவு விடயங்களிலும் இது அவ்வாறே... இங்கே விருப்பம் அல்லது விருப்பமில்லாமல் இருப்பது என்பதல்ல, இது ஒரு மனித உரிமை.. அதைத்தான் இந்த சமுதாயம் அறிதல் வேண்டும். இல்லையேல், அது முடிந்துவிடும். ’
>
> இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

மறுபுறத்தில், ரீட்டா, பாலியல் இலஞ்சத்துக்கான ஒப்புதல் அளிக்கக்கூடிய பங்குபற்றுனராக இருந்தார். இத்தகைய பாலியல் செயற்பாடுகள் அதற்கு இது என்ற ரீதியிலான ஒரு பிரதிபலன் கொண்ட செயற்பாடு என அவர் விளங்கிக் கொண்டுள்ளார். இருப்பினும், ஒரு திருநங்கையாக

சுதந்திரத்திற்கான உரிமை, பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம் போன்ற பல்வேறு உரிமைகளுக்கான சட்டப் பாதுகாப்பற்றவராக அவர் இருக்கிறார். அதனால், வழமைக்கு மாறான மற்றும் சட்டவிரோத வழிகள் மூலமாக தனது வழியை அமைத்துக் கொள்வதற்கு அநேகம் அவர் நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

> ‘ அங்கே பலவந்தம் இருக்கவில்லை. அனுமதியைப் பெறுவதற்கு நான் விருப்பத்துடனேயே அதனைச் செய்தேன். சாப்பிடுவதற்கு எனக்கு ஏதேனும் வேண்டுமா எனவும் அவன் கேட்டான். ’
>
> ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

இந்த நிகழ்வு ஒரு பிரதிபலன் கருதிய செயற்பாடு என்பதை இரோமியும் கூட புரிந்துகொண்டார்.

> ‘ உனக்கு சுமையாக இருக்கும் ஒன்றை நாங்கள் தீர்த்து வைப்பதற்காக எங்களுக்கு எதுவும் கிடையாதா, அவன் கேட்டான். … அவன் எனது உடம்பைக் கேட்பது முறையானது. என்னுடன் படுத்துக் கொள் என அவன் கேட்டவாறே, என்னைத் தள்ளிக் கொண்டு நடுவில் இருந்த ஒரு அறைக்குள் புகுந்தான். ’
>
> இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

சம்மதிப்பதற்கான அவரது மறுப்பினால் குற்றமிழைப்பவர் திகைப்படையக் கண்டதாக ரூபா குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் பலர் குற்றிமிழைப்பவருக்கு எதிராகத் தங்களை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ளும் நிலைமையில் இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

> ‘ தனது இருக்கை நோக்கிச் செல்லும் பொழுது, நான் மட்டுமே அவனது அழைப்பை நிராகிரித்த ஒரே நபர் எனக் கூறினான். ’
>
> ரூபா, இரத்தினபுரி, சப்பிரகமுவ மாகாணம்

## 5.8. நீதிக்கான அணுகல்

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பவர்களாக சட்ட, நீதி நிறுவனங்கள், அல்லது அதன் பணியாளர்களைப் பார்ப்பதில்லை என்பது நேர்காணல்களில் இருந்து ஒரு தெளிவான முறையில் வெளிக்கொணரப்பட்டது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் அநேகமானவர்கள் தங்களது உரிமைகளில் உண்மையில், குற்றமிழைப்பவர்களாக சட்டம் மற்றும் அதன் முகவர்கள் குறித்து பேசினர். பாலியல் இலஞ்ச நிகழ்வைப் பொறுத்த வரை, சட்டத்துடனான பிரச்சினைகள் பல்பரிமாணம் கொண்டவை. அது பாலியல் இலஞ்சத்தைக் குறிப்பாகத் தடை செய்யவில்லை. மேலதிகமாக, இந்த கற்கையில் பங்குபற்றிய பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் கருத்துப்படி, சட்ட அமுலாக்கப் உத்தியோகத்தர்களிடம் பொறுப்பளிக்கப்பட்ட தற்றுணிவு அதிகாரம் சில சந்தர்ப்பங்களில் பாலியல் இலஞ்சத்தைக் கோருவதற்காகத் துஷ்பிரயோகிக்கப்படுகின்றது. மேலும், நீதித் துறைசார் நிறுவனங்கள் பாலியல் இலஞ்சத்தினை நிலைநிறுத்துபவையாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சிலரால் நோக்கப்பட்டது. நீதித் துறை பாலியல் இலஞ்சத்திற்கு உகந்ததான பரிகாரங்களை வழங்க முடியும் என்று பலர் நினைக்கவில்லை. சட்டமும், அதன் முகவர்களும் பாலியல் இலஞ்சம் நிகழ்வதற்கு பங்களிப்பதாகவே கருதப்படுகின்றது.

உதாரணமாக, சட்டத்தின் முன் பாதிக்கப்பட்ட தன்னைப் பிரதிநிதித்துவம் செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட சட்டத்தரணி ஒருவரினாலேயே, ரமணியிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டது. அவரது வழக்கு ஒரு காணிப் பிணக்கு சம்பந்தப்பட்டது, பாலியல் இலஞ்ச அனுபவத்தின் காரணமாக குறித்த காணி வழக்கையே கைவிட்டு விட்டார்.

❛ எங்களுக்கிடையில் பெரியதொரு வயது இடைவெளி இருந்ததினால் என்னைப் போன்ற ஒருவரிடமிருந்து அவரைப் போன்ற ஒரு சட்டத்தரணி பாலியல் இலஞ்சம் கோருவார் என நான் அதிகம் எண்ணிப் பார்க்கவே இல்லை. ❜

ரமணி, கண்டி, மத்திய மாகாணம்

லக்ஷ்மி, கயனி மற்றும் ஜென்னி ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளில் காண்பிக்கப்பட்டவாறு சட்ட ஒழுங்கு மதிக்கப்படுவதாக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நினைக்கவில்லை. சட்டம் அல்லது சட்ட நிறுவனங்கள் மூலமாக நீதியை நாடவோ அல்லது அடையவோ முடியும் என அவர்கள் நினைக்கவில்லை. சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்றுணிவு அதிகாரம் பாலியல் இலஞ்சம் கோருவதற்கு துஷ்பிரயோகிக்கப்படுகின்றது என ஜென்னி குறிப்பிடுகிறார்.

❛ எதற்காகவும் பொலிஸ் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு என்னால் போக முடியாது. சட்டம் அவர்களுக்கே சாதகமாகச் செயற்படும். இறுதியில், அனைத்துச் சங்கடங்களுக்கும் நாங்களே முகம் கொடுக்க வேண்டும். ❜

கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

❛ அது சட்டமாயின், அது சட்டமாக இருத்தல் வேண்டும். இழைக்கப்படுகின்ற குற்றங்களுக்கு தகுந்த முறையில் தண்டனை விதிக்கப்பட்டு நீதி வழங்கப்படுவது என்பது வேறு விடயம்... இதுவா சட்டம்? அவர்களுக்கு இலஞ்சமும் வேண்டும், பெண்களும் வேண்டும்? இதுவா சட்டம்? ❜

ஜென்னி, கம்பஹா, மேல் மாகாணம்

## 5.9. பயனுறுதிமிக்க பரிகாரங்களின் கிடைக்கும் தன்மை

சட்டம், சட்ட நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் மீதான நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை இன்மையினால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சட்டம் ஊடாக பரிகாரத்தை நாடுவதற்குத் தயக்கம் கொண்டுள்ளனர். அவ்வாறு செய்வதற்கு முயற்சிப்பதும் கூட மேலதிக சமூகக் களங்கம் மற்றும் மனஅதிர்ச்சிக்கு வழிகோலும் என அவர்கள் அறிந்திருந்தனர்.

❛ அப்படி ஒரு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டால்..., அது எனது மனதைக் குடைந்து கொண்டு இருந்தது. அது ஒரு மனச் சுமையாகும். அத்துடன், இந்தச் சம்பவம் எனது பிள்ளைகள், சகோதரர்கள், அல்லது கிராமத்து மக்களுக்குத் தெரிந்து போகும் என நான் அப்படியே வியப்படைகின்றேன். இந்தக் காயத்தை எனது மனதிற்குள்ளேயே மறைத்து வைத்திருந்தால், அங்கு ஒரு பிரச்சினையும் இருக்காது. ❜

ரமணி, கண்டி, மத்திய மாகாணம்


‘ நான் முறைப்பாடொன்றையும் மேற்கொள்ளவில்லை, ஆனாலும் கிராம சேவை உத்தியோகத்தரிடம் நான் சொன்னேன். ஒரு விதத்தில் அதுவும் கூட ஒரு முறைப்பாடு தான். அந்த உத்தியோகத்தரிடம் சொல்வது நல்லது என நான் நினைத்தேன். ஆனால் அது பயனற்றது. அந்தப் பெண் (கிராம சேவை உத்தியோகத்தர்) பாலியல் இலஞ்சம் பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை.. ’

இரோமி, மாத்தறை, தென் மாகாணம்

‘ நாங்கள் முறைப்பாடுகளை மேற்கொண்டால், அவர்கள் எங்களைக் கொன்று விடுவார்கள் ’

நூஸரத், கொழும்பு, மேல் மாகாணம்

அதிகளவான பாலியல் இலஞ்சச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளில் நீதித் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் சம்பந்தப்பட்டுள்ள காரணத்தினால், புலனாய்வு மற்றும் விசாரணை பக்கச்சார்பற்றதாகவோ அல்லது இரகசியமாகவோ மேற்கொள்ளப்படும் என்று பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் நினைக்கவில்லை. நடவடிக்கைகள் அணுகப்படக்கூடியவை அல்லது நம்பகமானவை என அவர்கள் கருதவில்லை.



‘ சம்பவத்தில் (பாலியல் இலஞ்சம்) ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு இருக்கக் கூடுமென்பதால் வேறொரு விடயத்திற்கு கூட அதே பொலிஸ் நிலையத்திற்கு எப்படிப் போவது என்பது தொடர்பில் சற்றுப் பயம் இருந்தது. ’

லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

‘ இந்த விடயங்கள் வெளியே கசிந்தால் என்னால் தெருவில் கூடச் செல்ல முடியாது. அத்துடன் இரண்டு பெண் பிள்ளைகளும் பொலிஸ் நிலையத்தில் என்ன செய்வார்கள்? ஒரு பொலிஸ் நிலையத்தைப் பார்ப்பதற்கு கூட எனக்கு பயமாக உள்ளது. வைத்தியருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு எங்களிடம் என்ன பலம் இருக்கிறது? நிச்சயமாக, எனது நலிவுற்ற தன்மை என்ன என்பதை அறிந்து கொள்வதே எனக்குத் தேவை, சட்ட நீதி அல்ல. ’

லக்ஷ்மி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

‘ எங்களிடமிருந்து அனுகூலங்களைப் பெறுவதற்கு அவர்கள் தங்களது ஆயுதங்கள், துப்பாக்கிகள் மற்றும் அதிகாரச் செல்வாக்கை உபயோகிப்பார்கள். இது மாற்றமடைய வேண்டும். ’

நுஸ்ரத், கொழும்பு, மேல் மாகாணம்

மனோரியின் அனுபவத்தைப் பொறுத்தவரை, பால்நிலை, வறுமை மற்றும் சமூக அந்தஸ்து காரணமாக அதிகம் பாலியல் இலஞ்சப் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாக பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூகத்தினர் உள்ளனர். மனோரியின் விடயத்தில், அவரது கணவர் பொலிஸ் காவலில் இருந்ததின் காரணமாக தமது அனுபவம் குறித்து ஏதேனும் முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கு அவருக்கு வழிமுறைகள் எதுவும் இருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில், அரசிடமிருந்து சேவைகளைப் பெற நாடுகின்றமை கூட தனிநபர்களை பாலியல் இலஞ்ச ஆபத்தில் தள்ளிவிட முடியும் என அவரின் இந்த அனுபவம் கூறுகின்றது.

> எங்களது தாயார் செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார். அதனால், என்னுடன் சேர்ந்து பொலிஸ் நிலையம் வருவதற்கு யாரும் இல்லை. நான் தனியாகத் தான் செல்வேன். எனக்கு ஞாபகத்தில் உள்ளபடி, சுமார் ஒன்றரைக் கிழமைகளாக அவ்வப்போது பொலிஸ் நிலையத்திற்கு சென்று எனது கணவரை விடுவிப்பதற்காக முயற்சித்தேன். குற்றமிழைத்தவர் அந்தப் பொலிஸ் நிலையத்திலேயே இருப்பதினால் நாங்கள் பயந்தோம். முதலில், அவர் அங்கிருந்து நீக்கப்பட்டால் தான் நாங்கள் சட்ட உதவியை அனுக முடியும். ஏனென்றால், எங்களிடம் சாட்சியங்கள் உண்டு. ஆனால், அவர்கள் அதிகாரத்தைக் கொண்டுள்ளார்கள். நாங்கள் சாட்சியங்களைச் சமர்ப்பிக்க முடியும், ஒரு சட்டத்தரணியைக் கூட அமர்த்திக் கொள்ள முடியும். ஆனாலும் நாங்கள் அச்சம் கொண்டுள்ளோம்.
>
> மனோரி, கம்பளை, மத்திய மாகாணம்

பஹ்ரா மற்றும் ஜீவா ஆகியோரால் குறிப்பிடப்பட்டவாறு, குற்றமிழைத்தவர் பொலிஸ் அல்லது நீதித்துறையிலுள்ள ஏனைய நிறுவனங்களைச் சார்ந்தவர்களாக இருப்பின், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சட்டத்தின் முன் ஆதரவற்றவர்கள் ஆக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வேறு வழி எதுவும் இல்லை.

> உதவியை நாடி நாங்கள் பொலிஸ் நிலையம் போகிறோம். அந்த இடத்திலும் கூட இவ்வாறான சம்பவங்கள் எங்களுக்கு நடக்குமாயின் யாருடைய உதவியை நாங்கள் நாடுவது?
>
> ஜீவா, மாத்தளை. மத்திய மாகாணம்

> முறைப்பாடொன்றைப் பதிவுசெய்து நீதியை நாடுவதற்கு பொலிஸ் நிலையம் ஒன்றே எங்களுக்குள்ள ஒரு இடம். பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூட, இந்த விதத்தில் நடப்பார்களாயின், சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் மீது எவ்வாறு நாங்கள் நம்பிக்கை வைப்பது? எப்போதெல்லாம் பெண்கள் அங்கு போகிறார்களோ, அங்கே அவர்கள் பாதுகாப்பாக உணர வேண்டும்
>
> பஹ்ரா, சப்பிரகமுவ மாகாணம்

ரூபாவைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இலக்கு வைப்பதற்கு தவறிழைப்பவர்கள் நீதித் துறையிலுள்ள தமது பதவி அதிகாரத்தை சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். குற்றவிலக்களிப்புடன் தங்களால் அவ்வாறு செய்வதற்கு முடியுமென அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

‘

இத்தகைய குற்றங்களைத் தடுப்பதற்கு இப்போதைக்கு பொறிமுறை எதுவும் உபயோகத்தில் இல்லை. தங்களைக் கைது செய்வதற்கு எந்த முறைமையும் உபயோகத்தில் இல்லை என்பதைக் குற்றமிழைப்பவர்கள் அறிந்துள்ளதனால் இந்த நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்கின்றன. பணம் அல்லது அதிகாரத்துடன் யாரிடமிருந்தாவது எப்போதும் அவர்கள் ஆதரவைப் பெற முடியுமென்பதோடு அவர்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும் தண்டனைகளிலிருந்து தவிர்ந்திருக்கவும் முடிகிறது. ’

—

ரூபா, இரத்தனபுரி, சப்ரகமுவ மாகாணம்

ஒரு சமயத்தில், பராமரிப்பு விடயத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னிடம் இருந்து பாலியல் இலஞ்சம் கோரிய சந்தர்ப்பத்தில், சட்ட உதவி ஆணைக்குழுவிடமிருந்து தான் ஆதரவைப் பெற்றதாக பஹ்ரா தெரிவித்தது குறிப்பிடத்தக்க விதிவிலக்கான ஓர் அனுபவமாக இருந்தது.

முறைப்பாடு செய்யும் செயற்பாடு பகிரங்கமாக மற்றயவர்கள் அவதானிக்கும் வகையில் இருப்பதாக கயானி சுட்டிக்காட்டினார். பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்கள் பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான நடவடிக்கை எடுப்பதிலிருந்து அந்த பகிரங்க செயல்முறையே தடுக்கின்றது.

‘

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்ளும் எனது விபரங்கள் அனைத்து பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறில்லாமல் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் இந்த விதத்தில் நடந்த கொள்வாராயின், நாங்கள் அழைத்து முறைப்பாடு செய்வதற்கு 119 போல ஒரு அவசர அழைப்புக்கான தொலைபேசி இலக்கத்தை நாங்கள் கொண்டிருத்தல் வேண்டும் ’

—

கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

முறைப்பாடுகள் மேற்கொள்வதற்காக தற்போதுள்ள முறைமை, பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களுக்கு சிநேகபூர்வமானதாக இல்லை என்பதை இந்தக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. சட்டத்தின் ஊடாக பரிகாரங்களைத் நாடுவதற்கு அது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை ஊக்குவிக்கவில்லை. உதாரணமாக, பிரியாவின் தந்தை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டிருந்தாலும் கூட பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் வழக்கினை மேற்கொண்டு தொடர விரும்பாததினால் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது.

‘

முறைப்பாடு செய்வதற்கும் ஆலோசனை பெறுவதற்கும் எனது தந்தை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அழைப்பபை மேற்கொண்டார். அவர்களும் மிக ஆதரவாக உள்ளனர் என அவர் சொன்னார். நிரூப்பிப்பதற்கு அத்தாட்சிகளை அவர்கள் கேட்டனர். நான் விரும்பவில்லை ஆதலால் அதற்கு மேல் அந்த விடயத்தை நாங்கள் மேற்கொண்டு முன்னெடுக்கவில்லை. எனது தந்தையும் கூட அதனை விரும்பவில்லையென நான் புரிந்து கொண்டேன். அந்த சமயத்தில் அவர் என்னை எனது வழமையான நிலைக்கு மீட்டு வருவதற்கே விரும்பினார். ’

—

பிரியா, திஸ்ஸமாராகம, தென் மாகாணம்

மேலே கலந்துரையாடப்பட்ட அனைத்துச் சிக்கல்களும், சவால்களும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களின் விடயத்தில் ஒன்றுசேர்ந்து காணப்படுகிறது. பொலிசிற்கு எதிராக பரிகாரங்களை அவர்கள் நாடுவது சாத்தியம் இல்லை என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களது பால்நிலை அடையாளம், நடைமுறையில் சட்டத்தின் பாதுகாப்பினை அவர்களுக்கு மறுக்கின்றது.

> ‘ எங்களது [முறைப்பாடுகள்] ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. பொலிஸில் (நிலையத்தில்) கூட. நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் போனால் அவர்கள் மேலும் இழுத்தடிப்பார்கள். பொலிஸிடம் இந்த விடயங்களைச் சொல்வதில் எந்தப் பயனும் இல்லை. ’
>
> ரீட்டா, கொழும்பு, மேல் மாகாணம்

> ‘ அவர்கள் சாதாரண பிரஜைகளாக இருந்தால் நாங்கள் மறுப்பதற்கு முடியும். ஆனால், அவர்கள் பொலிஸ் அல்லது இராணுவத்தில் இருந்தவர்களாயின், அவர்களிடம் அதிகாரம் உள்ளது. இராணுவம் எங்களை பொலிஸிடம் கையளிப்பதற்கு முடியும். பின்னர் எங்களால் எதுவும் செய்ய முடியாது ’
>
> வத்சலா, கொழும்பு, மேல் மாகாணம்

## 5.10. தொலைத்தொடர்புத் தொழில்நுட்பத்தின் துஷ்பிரயோகம்

தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பாலியல் இலஞ்சத்திற்காக தவறாக பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து நேர்காணப்பட்டவர்கள் பலர் பேசினர். சில சந்தர்ப்பங்களில், அரசத் துறை உத்தியோகத்தர்கள் அல்லது தொழில்சார் நிபுணர்கள் பாலியல் இலஞ்சத்திற்காக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை குறிவைப்பதற்கு அவர்களின் உத்தியோகப்பூர்வ கடமைகளின் போது அவர்களுக்குக் கிடைத்த தொடர்பு விபரங்களைப் பயன்படுத்தினர். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பலர் பாலியல் இலஞ்சம் கோரிய குற்றமிழைப்பவரால் தொலைபேசியில் பலமுறை துன்புறுத்தப்பட்டது குறித்து பேசினர். ஏனைய சந்தர்ப்பங்களில், வாட்ஸ்அப் (WhatsApp) போன்ற சமூக ஊடகத் தளங்கள் வழியாக பாலியல் ரீதியாக வெளிக்காட்டும் புகைப்படங்களுக்காக குற்றமிழைப்பவரால் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

> ‘ இது எனக்கு உண்மையிலேயே ஒரு தொல்லையாகி விட்டது. எனது தொலைபேசியை அணைத்து விட்டு வைப்பதற்கு ஆரம்பித்தேன். வைத்தியசாலையிலிருந்து எனது கணவரைப் பற்றி ஒரு அழைப்பு வந்தால் கூட எனக்கு பதிலளிப்பதற்கு முடியாது. நான் தொலைபேசியை மீண்டும் இயக்க ஆரம்பித்ததுமே அவன் தொலைபேசியில் அழைப்பான். அவன் எப்பொழுதுமே இரவிலேயே அழைப்பை எடுப்பான். அரை மணித்தியாலம், ஒரு மணித்தியாலம் வரை என அவன் கதைப்பான். வைத்தியசாலைக்கு செல்லாது கூட ஒரு வாரம் வரை நான் இருந்துள்ளேன்... அதன் பின்னர் அவன் என்னை அச்சுறுத்த ஆரம்பித்தான்... இறுதியில் நான் எனது ‘சிம்’ அட்டையைக் கூட அகற்றி விட்டேன். ’
>
> சீதா, ஹட்டன், மத்திய மாகாணம்

பாலியல் இலஞ்சம் கோருவதற்கும் மற்றும் ஈடுபடுவதற்கும் இலத்திரனியல் தொழில்நுட்பம் உள்ளடங்கலாக தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது ஏனைய பரிமாணங்களையும் அதற்குச் சேர்க்கின்றது. தொடர்பு விபரங்களை அனுமதியின்றி உபயோகிப்பது தனிநபர் ஒருவரின் தனியுரிமையை மீறும் செயலாகும். இலத்திரனியல் மயமாக்கப்பட்ட பாலியல் இலஞ்சம், பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்த ஒருவரை ஏனைய வகைப் பாலியல் சுரண்டல்களுக்கு உள்ளாகும் ஒரு கடும் ஆபத்தில் இடுகிறது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் அநேகமானோர் (வாட்ஸ்அப்) தொலைபேசி அழைப்புக்கள், முகநூல் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் அணுகப்பட்டனர்.

“ நான் தனியே இருப்பதினால் அவன் என்னை வருவதற்கு அழைத்து அச்சுறுத்துவான் என நான் அச்சம் கொண்டிருந்தேன். எனது தனிப்பட்ட விபரங்கள் அனைத்தும் அவனுக்குத் தெரியும். ”

ரமணி, கண்டி, மத்திய மாகாணம்

“ ஏதேனும் வகையில் நான் உனக்கு உதவுவதற்கு விரும்புகிறேன், அதனாலேயே உனது இலக்கத்தை கருமபீடத்திலிருந்து பெற்றேன்., தனது பெயர் பத்மசிறி என அவன் எனக்கு சொன்னான், ஆனால் அது பொய்யான பெயர். ”

கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

“ இறுதியாக அந்த இலக்கத்தை நான் தடை செய்து விட்டேன். அதன் பின்னர் அவன் வேறொரு இலக்கத்திலிருந்து என்னை அழைப்பதற்கு ஆரம்பித்தான். பின்னர், அந்த இலக்கத்தையும் கூட நான் தடை செய்து விட்டேன்... ”

லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

“ அதன் பின் அவன் என்னை இரவில் அழைக்க ஆரம்பித்தான். எல்லா வேளையிலும் அழைப்பதற்கு ஆரம்பித்தான். (வாட்ஸ்அப்) இற்கு குரல்பதிவுகளை அனுப்புவதற்கு ஆரம்பித்தான். இதன் பின்னர் இந்த இலக்கத்தை எனது கணவரிடம் கொடுத்தேன். கணவர் அவனை அழைத்து எனக்கு அழைப்பு எடுக்க வேண்டாம் என சொன்னார். இருப்பினும் அவன் கேட்பதாக இல்லை. எல்லா சமயத்திலும் அழைப்பை எடுப்பான். ”

மாலனி, கண்டி, மத்திய மாகாணம்

“ அதன் பின்னர் நீதிமன்றத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் இரவு வேளையில் எனக்கு வீடியோ அழைப்பு எடுப்பதற்கு ஆரம்பித்தான். சாப்பிட்டேனா, அல்லது குடித்தேனா, என்ன செய்கிறேன் எனக் கேட்டு எனக்கு அழைப்பை எடுத்து கேட்க வேண்டிய தேவை இல்லையே... பகல் வேளையில் அவன் சாதாரண அழைப்புகளை எடுப்பான். இரவு வேளையில் வீடியோ அழைப்புகளை எடுப்பான். வீடியோ அழைப்புகளுக்கு ஒரு போதும் பதில் அளித்ததே இல்லை. எனது கணவரைப் பற்றிய

தகவல்களை அவன் தருவராகச் சொல்லியிருந்ததினால் பகல் வேளைகளில் வரும் அழைப்புகளுக்கு நான் பதில் அளிப்பேன். ’

மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

‘

என்னுடன் இருந்தவர் (பாலுறவு வைத்துக் கொண்டவர்) எனக்கு (வாட்ஸ்அப்) மூலம் செய்தி அனுப்பினார். அந்தரங்கப் பகுதிகளின் நிர்வாணப் படங்களை அனுப்பினார். என்னை மீண்டும் சந்திப்பதற்கு விரும்பினார். நான் அவை எல்லாவற்றையும் தவிர்த்தேன். மற்றைய நபர் எனது நண்பியோடு இருந்தார். அவருடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனது நண்பியும் அவருடன் எந்த விதமான பிரச்சினையையும் கொண்டிருக்கவில்லை. ’

வத்சலா, கொழும்பு, மேல் மாகாணம்

‘

நான் இவற்றுக்கு இணங்க மாட்டேன் என நான் ஒரு தடவை அவனிடம் கூறினேன். கடைசியில், அவனது இலக்கத்தை, எனது தொலைபேசியில் நான் தடை செய்து விட்டேன். இலக்கத்தை தடை செய்ததன் பின்னரே நான் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு போனேன். நான் சிகிச்சைப் பகுதிக்கு சென்ற பொழுது, அவன் கோபம் கொண்டவனாகக் காணப்பட்டதுடன் என் மீது எரிந்து விழுந்தான். ஒரு தடவையேனும் அவன் என்னுடன் பேசவில்லை. வரிசையில் இணைந்து கொள்வதற்கு எங்களுக்கு ஒரு இலக்கத்தையும் அவன் எடுத்து வைத்திருக்கவில்லை. அந்தக் குறித்த நாளில் பிற்பகல் 2 மணி வரை வரிசையில் நாங்கள் நின்றோம். அதன் பின் நான் சிகிச்சைக்கு போவதையே நிறுத்தி விட்டேன். ’

ராணி, மாத்தளை, மத்திய மாகாணம்

‘

ஒரு மாதத்திற்கும் மேலாக எனக்கு அழைப்பு எடுத்து அவன் என்னைத் தொந்தரவு செய்தான். ’

பாஹ்ரா, சப்ரகமுவ மாகாணம்

‘

அவனது பேஸ்புக் கணக்குக்கு என்னை இணைத்துக் கொண்டு, வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதற்கு என்னைக் கட்டாயப்படுத்தினான். அதன் பின்னர் அவன் பேஸ்புக் ஊடாகவும் அரட்டை அடிக்க ஆரம்பித்தான். வீடியோ அழைப்புகள் (வாட்ஸ்அப்) ஊடாகவே எடுக்கப்பட்டன. சமூக ஊடக வலையமைப்பில் நண்பர்கள் பட்டியலில் குற்றமிழைப்பவரை விருப்பமில்லாமலே வைத்திருக்க வேண்டியிருந்தது. “எவ்வளவுதான் எனக்கு விருப்பமில்லாமல் இருந்தாலும் எனது கணவர் திரும்பி வரும் வரை அவனை எனது பேஸ்புக் கணக்கில் தடை செய்யவில்லை.” நான் பயமடைந்திருந்தேன். ’


மனோரி, கண்டி, மத்திய மாகாணம்

தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் என்பவை பாலியல் இலஞ்சத்திற்கு முகங்கொடுத்துப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் பாதிப்புக்கு முகங்கொடுக்கும் தன்மையை பன்மடங்கு அதிகரிக்கின்றன. உடல்ரீதியான ஒரு பிணைதலின் பின்னரும் பாலியல் இலஞ்சத்தைக் கோருவது தொடரப்படலாம் என்பதுடன் அது நீடிக்கலாம். பல்வேறு சந்தர்ப்பங்களில், தரவுகளின் இரகசியத்தன்மையின் ஒரு மீறலையும் இது சம்பந்தப்படுகிறது. இந்த ஒவ்வொரு சம்பவத்திலும் அவற்றின் சக்தித் திறன் காரணமாக அலைபேசிகள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் அணுகல்கள் மற்றும் கோரிக்கைகளை எதிர்த்து நிற்பது என்பன சாத்தியமற்றவையாகப் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் காண்கின்றனர்.

## 5.11. பெருந்தொற்றின் பாதிப்பு

கற்கையில் பங்குபற்றியவர்களால் விபரிக்கப்பட்ட பாலியல் இலஞ்ச சம்பவங்களில் பெருந்தொற்று ஒரு பாதிப்பைக் கொண்டிருந்தது. சில சம்பவங்களில், உதாரணத்திற்கு, மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ராணி என்பரால் குறிப்பிட்டதைப் போன்று முடக்கத்தின் போது நடமாட்டத்திற்கான கட்டுப்பாடுகள் குறிப்பிட்டளவு பாதுகாப்பை வழங்கியுள்ளன.

வேறு சில சந்தர்ப்பங்களில், பெண்களையும், மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்களையும் பாலியல் இலஞ்சம் மேலும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வகையில் ஆபத்தில் தள்ளியது. பாலியல் இலஞ்சத்திற்கான பாதிப்புக்குள்ளாகக் கூடிய தன்மைக்கு வழிகோலும் தேவைகளை பெருந்தொற்று அதிகரித்தது.



‘ அந்த நாட்களில் கொரோனா புதிதானதாக இருந்தது. மக்கள் எல்லாவித தவறான கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தனர். அதனால், வாடகைக்கு இடம் வழங்குவதற்கு மக்கள் விரும்பவில்லை ’

பிரியா, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

‘ இராணுவத்தினர் சிவப்பு நிற ‘கப்’ ரக வாகனத்தில் வந்தனர். கொரோனா ஆரம்ப நாட்களின் போது என்னிடமும் எனது நண்பியிடமும் பணமோ அல்லது உணவோ எதுவும் இருக்கவில்லை. நாங்கள் இரவு 7 மணியளவில் வெளியில் போய் நள்ளிரவு திரும்புவதற்கு திட்டமிட்டிருந்தோம். இரவு 11 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. நாங்கள் பெரிதாக எதனையும் நினைக்கவில்லை. அது பார்ப்பதற்கு ஒரு சாதாரண ‘கப்’ வாகனம் போலவே இருந்தது. அவர்கள் வாகனத்தில் ‘உள்ளே ஏறு, உள்ளே ஏறு’ என்ற சொன்னதுடன் எங்களிடம் அடையாள அட்டையைக் கேட்டார்கள். அவர்கள் எங்களை உள்ளே ஏறுவதற்கு கேட்டார்கள். நாங்களும் உள்ளே ஏறினோம். அண்மையிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்திற்கு நாங்கள் கூட்டிச் செல்லப்பட்டோம்... பொலிஸ ிடம் எங்களைப் பாரம் கொடுக்கப் போவதாக அவர்கள் சொன்னார்கள். எங்களால் ஏன் வேலைக்குப் போய் தொழில் செய்ய முடியாது எனக் கேட்டு எங்களை நன்கு திட்டினார்கள். ஆனால் (யதார்த்தத்தில்) வேலைகளுக்காக

> நாங்கள் நேர்காணல்களுக்குப் போனால், நேர்காணல் செய்பவர்கள் எங்களை பின்னர் அழைப்பதாகச் சொல்லி எங்களை நிராகரித்து விடுகிறார்கள். இதை நாங்கள் யாரிடம் சொல்வது? ’
>
> வத்சலா, கொழும்பு, மேல் மாகாணம்

இது இலக்கு கொள்ளப்பட்ட கற்கையைத் தேவைப்படுத்துகிறது. இதேபோன்ற ஏனைய நெருக்கடிகளில் பாதிப்பைப் புரிந்துகொள்வதற்கு அது உதவும்.

## 5.12. ஏனைய சிந்தனைகள்

நீண்ட நேர்காணல்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக, தெரிவிக்கப்பட்ட பின்வரும் கருத்துக்கள் சுவாரசியமானவையாகும். பாலியல் இலஞ்சத்தின் பொதுவான நிகழ்வு தொடர்பில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பல அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தனர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் முற்றிலும் ஆதரவற்றவர்களாக இருக்கவில்லை என்ற கருத்தினை லலிதா கொண்டிருந்தார்.

> ‘ இந்த மாதிரி விடயங்கள் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றது என நான் நினைத்தேன், இந்த விடயங்களுக்கு பல ஆட்களும் இதற்கு இரையாவர் என நான் நினைத்தேன். ஆனால், நாங்கள் எங்களது அறிவை உபயோகித்தால், எங்களை நாங்கள் காப்பாற்றுவதற்கு முடியும். ’
>
> லலிதா, மாத்தளை, மத்திய மாகாணம்

பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் சிலர் தங்களது நடவடிக்கைகளின் ஒரு வினைத்திறனான அப்பியாசித்தலின் மூலமாக பாலியல் இலஞ்சத்திற்கு எதிராக செயற்பட்டனர். சட்டத்திற்கு புறம்பான மற்றும் வன்முறையை நாடிய நிகழ்வு ஒன்றினை லக்ஸ்மி நினைவு கூர்ந்தார். பாலியல் இலஞ்சத்திற்கு எதிராக போராடுவதற்கு வார்த்தைத் துஷ்பிரயோகத்தை தாங்கள் எவ்வாறு நாடினர், என்பதை கயானி மற்றும் லலிதா ஆகிய இருவரும் விவாதித்தனர்.

> ‘ சில நாட்களுக்குள்ளாகவே, இதே விடயத்தை எங்களது கிராமத்திலுள்ள மற்றொரு நபரிடம் காண்பிப்பதற்கு அவன் முயன்றான். அந்தப் பெண்ணோ அவனை நன்கு அடித்து விட்டதாக நாங்கள கேள்விப்பட்டோம். கிராமத்திலுள்ளவர்கள் இந்த விடயத்தை கவனத்திற்கு எடுத்து அவனை அங்கிருந்து துரத்தி விட்டார்கள். ’
>
> லக்ஸ்மி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

> ‘ அவனை எவ்வாறு திட்டினேன் என நினைவுபடுத்துவதற்கு கூட முடியாது. ஓர் அரை மணித்தியாலத்திற்கு நான் அவனைத் திட்டியிருக்க வேண்டும். அவன் குறுக்கே ஒன்றும் பேசாது கேட்டான். அது அங்கேயே முடிந்தது. அதன் பின்னர் அவனிடமிருந்து எந்த அழைப்புகளையும் நான் பெறவில்லை ’
>
> கயானி, ஹம்பாந்தோட்டை, தென்மாகாணம்

> ‘
> நான் அவனைப் பார்த்து கத்திய பின்னர் நான் அங்கிருந்து அகன்றேன், அவன் சங்கடத்துக்கு ஆளாக்கப்பட்டான். எனது குரல் குறையவில்லை. தற்செயலாக ஒரு கதிரையைக் கூட நான் புரட்டி விட்டேன். அவனுக்கு என்ன செய்வதென தெரியவில்லை, இது வெறும் ஒரு பகிடி தான் என அசடு வழிந்தபடி, அவன் சொன்னான். இதில், வேடிக்கையான விடயம், இவை அனைத்தின் பின்னர் பொலிஸ் அறிக்கையை பெற்றுக்கொண்டு நான் வெளிநாடு சென்று விட்டேன். ’
>
> கயானி, ஹம்பாந்தோட்டை, தென் மாகாணம்

## 5.13. இலக்குக் குழுக் கலந்துரையாடல்களில் இருந்து பெறப்பட்ட மேலதிக சிந்தனைகள்

நீண்ட நேர்காணல்கள் மூலமாகப் பெறப்பட்ட சிந்தனைகளை, குறிப்பாக பாலியல் இலஞ்சத்தின் தனிப்பட்ட பாதிப்பு, தவறுக்கான பரிகாரங்களை நாடுவதற்கான தயக்கம், மற்றும் பாலியல் இலஞ்சம் காணப்படும் தன்மை தொடர்பான சிந்தனைகளை இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் உறுதி செய்தன. பாலியல் இலஞ்சம் பிரத்தியேகமான வகையில் குற்றமாக்கப்படல் வேண்டும் மற்றும் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும் என பலர் எண்ணினர். எனினும், மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்களுடனான இலக்குக் குழுக் கலந்துரையாடல் முக்கியமான சிந்தனைகளை வழங்கின என்பதுடன் அவை கீழே மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பிடத்தக்க வகையில், இலக்குக் குழுக் கலந்துரையாடல்களில் பங்கெடுத்த பலரால் பாலியல் குற்றங்கள் மற்றும் விசேடமாக பாலியல் இலஞ்சம் ஆகியவற்றை வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. மேலும், தனியார் மற்றும் அரச செயற்பாட்டாளர்களுக்கிடையில் யார் பாலியல் இலஞ்சத்தைக் கோரினார்கள் எனவும் அவர்கள் வேறுபடுத்தவில்லை. வங்கி முகாமையாளர்கள், தொலைத்தொடர்பு முகவர்கள், தனியார் ஆய்வுகூடங்கள் மற்றும் நுண் நிதி கடன் வழங்கும் முகவர்கள் உட்பட பாலியல் இலஞ்சம் கோரிய தனியார் துறைச் செயற்பாட்டாளர்கள் பலரின் உதாரணங்களை பங்குபற்றுனர்கள் வெளிப்படுத்தினார்கள்.

### 5.13.1. மாற்றுப்பாலின சமூகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சிந்தனைகள்

மாற்றுப்பாலின சமூகத்தின் மத்தியில் பாலியல் இலஞ்ச நிகழ்வில் தெளிவாக மேலதிக அடுக்குகளாக இருக்கும் சிக்கல்தன்மைகளை இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் சுட்டிக்காட்டின. பங்குபற்றியவர்களில் பலர் பாலியல் தொழிலாளர்களாவர். பாலியல் இலஞ்சத்திலிருந்து சட்டத்தின் ஊடாக அவர்களுக்கு பாதுகாப்பு அநேகம் இல்லாதிருந்தது. பாலியல் மற்றும் பால்நிலைச் சிறுபான்மையினர்களின் அங்கீகரிப்பின்மை மற்றும் வணிக ரீதியான பாலியல் தொழிலாளர்களுக்கான அங்கீகாரமின்மை போன்றன சமுதாயத்தில் அவர்கள் சட்டத்தால் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையையே வெளிப்படுத்தின.

இந்த சட்டச் சூழ்நிலையில், இலக்குக் குழுக் கலந்துரையாடலில் பங்குபற்றயோரின் கருத்துப்படி, பாலியல் இலஞ்சம் கோருவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கள் தற்றுணிவு அதிகாரத்தை துஷ்பிரயோகித்தனர். இந்த யதார்த்ததை பிரதிபலிக்கும் வகையில், பாலியல் இலஞ்சத்தை பின்வரும் வழிகளில் பங்குபற்றியோர்கள் விபரித்தனர்.

> ‘
> உன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உனது உடம்பைக் கொடுத்தல் ’
>
> இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

‘

பாலியல் இலஞ்சம் என்பது [அவளைப் பொறுத்தவரை] வாய்ப்பு கிடைத்தால் அவர்கள் பாலுறவு கொள்வது. உதாரணத்திற்கு, நாங்கள் பொலிசாரால் பிடிபட்டோம், அவர்கள் எங்களிடம் பணம் கேட்கவில்லை. "சந்தோஷமான தருணங்களை எங்களுக்கு நீ தந்தால், போவதற்கு நாங்கள் உன்னை விட்டு விடுகிறோம், என அவர்கள் சொன்னார்கள். ’


இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

‘

அவர்கள் எங்களது உடம்பை அதிகாரத்தினால் பலவந்தமாக எடுத்துக் கொள்கிறார்கள். அதனால், அது சட்ட விரோதமாகும். ’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

மாற்றுப்பாலின நபர்கள் மற்றும் வணிக ரீதியான பாலியல் தொழிலாளர்களுக்கான சட்டப் பாதுகாப்பு இல்லாமையிலிருந்து நன்மைகளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடியதாகத் தெரிகின்றது.



‘

ஒரு சமயம், பாலத்திற்கு அருகே நான் எனது வேலையில் இருந்தேன். சிவில் உடையிலிருந்த ஒருவர் எங்களை நோக்கி டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி வந்தார். பின், எனது வாடிக்கையாளரிடமிருந்து ரூ.2,500 ஐ பிடுங்கிக் கொண்டார். சிவில் உடையிலிருந்த பொலிஸாருக்கு என்னைத் தெரியும். இது எங்கள் [தொழில் செய்யும்] பகுதி. அதனால், அவர் என்னிடம், அங்கிருந்து போய் விடும்படி சொன்னார். பின், நான் வேலையை செய்தேனா என்று கேட்டார். "நீங்கள் தான் எங்களை அதனைச் செய்வதற்கு விடவில்லையே", என நான் அவரிடம் சொன்னேன். பின், அந்தப் பொலிஸ்காரர் என்னிடம் பெற்ற இலஞ்சப் பணத்திலிருந்து ரூ.500 ஐத் தந்து விட்டு அங்கிருந்து போனார். ’

குமாரி, இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

‘

சந்தியில் நாங்கள் 3 பேர் நின்றோம். நாங்கள் அங்கு நிற்கும் போது, இந்தத் தடவை நாங்கள் பொலிஸாருக்குப் பணம் கொடுக்கவில்லை என்றால் எங்களை 6 மாதங்களுக்கு சிறையில் போடப் போவதாகச் சொன்னார்கள். [அவர்கள்] எனது சகாக்களிடமிருந்து ரூ.5,000 கேட்டார்கள்... என்னை அவர்களது ஜீப் வாகனத்தில் ஏறும்படி அவர்கள் சொன்னதும், நான் அங்கிருந்து ஓடிப் போய் ஒரு தூர இடத்துக்குச் செல்லும் பேருந்தில் ஏறிச்சென்று வேறொரு சந்தியில் இறங்கிக் கொண்டேன். பின்னர், எனது சகாக்களிடமிருந்து ரூ.5,000ஐ

பெற்றுக்கொண்டார். இலஞ்சத்தை வாங்கிக் கொண்ட பிறகும் அவள் மேல் அவர்கள் ஒரு வழக்கைப் பதிவு செய்ததை நாங்கள் அறிந்து கொண்டோம். என்னையும் ஒரு நேரம் அவர்கள் பிடித்துச் செல்வார்கள், எனக்குத் தெரியும்.’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

‘பெண்ணுடன் இருப்பது போலத் தோன்றும். ஆனால், இரண்டு ஆண்கள் பாலுறவு கொண்டிருக்கும் போது, அவர்களைப் பிடித்து, அவர்களது குடும்பத்தார்களிடம் இவை எல்லாவற்றையும் சொல்வோம் என அச்சுறுத்துகிறார்கள். சிலவேளைகளில், அந்த மனிதர் திருமணம் செய்தவராக இருக்க முடியும். குழந்தைகளைக் கொண்டிருக்க முடியும். பாலியல் இலஞ்சத்தைப் பெற்றுக்கொள்வது இலகுவானது. நான் நினைக்கிறேன் அவர்கள் [ஆண்கள்] எங்களை விட பாலியல் இலஞ்சத்திற்கு அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

பாலியல் தொழிலாளர்களை துஷ்பிரயோகம் செய்வதற்கும், அவர்களில் அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஏனையவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களைப் போல பாவனை செய்கையில் இந்த நிலை மேலும் சிக்கலுக்குரியதாகின்றது.

‘சில சமயங்களில், சிவில் உடையில் வரும் சில ஆட்கள், தாங்கள் பொலிசிலிருந்து வருவதாகச் சொல்வார்கள். அநேகமான நேரங்களில் அவர்கள் எங்களது அடையாள அட்டைகளைக் காண்பிப்பதற்கு கேட்க மாட்டார்கள். அவர்களுக்கு என்ன வேண்டும் என நாங்கள் கேட்கும் போது, எங்களைப் பிரச்சினையின்றி விட்டுப் போவதாயின் தங்களுடன் பாலுறவு வைத்துக் கொள்வதற்கு அவர்கள் எங்களிடம் கேட்பார்கள்.’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

‘இரவு 9 மணியளவில் மாற்றுப்பாலினப் பெண்களாக நாங்கள் வெளியே செல்லும் போது, இந்த இலஞ்சச் சம்பவங்கள் நிறைய நடக்கும். இது எனக்கும் எனது சக ஆளுக்கும் நிகழ்ந்தது. ஒரு சமயம் அதிகாலை வரை எங்களுக்கு வாடிக்கையாளர் எவரும் இல்லை. இரண்டு பொலிஸார் அங்கு வந்த போது நாங்கள் ஏதோ கொஞ்சம் சம்பாதிப்பதற்கு நிற்பதாகக் கூறினோம். எங்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டி, அங்கே எங்களை நிற்க வேண்டாம் என்று சொன்னார்கள். அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். எனவே நாங்கள் இருவருடனும் நின்று கொண்டோம் [பாலுறவு வைத்துக் கொண்டோம்]. அந்த இரவில் அதுவே எங்களது முதல் வேலையாக இருந்ததால் குறைந்தது ரூ.100 தருமாறு நாங்கள் கேட்டோம். அந்த

அதிகாலை நேரத்தில் கடைக்கு போனால் எங்களுக்கு கடனுக்கு எதுவும் கிடைக்காது எனவே குறைந்தது ரூ.100 தரும்படி நாங்கள் விளக்கினோம். ஆனால், அவர்கள் வேலையை முடித்துக் கொண்டு, போவதற்கு முன், எங்களைத் தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு, எங்களைத் தள்ளிவிட்டுச் சென்றார்கள்.. ’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

பாலியல் இலஞ்சத்தின் அதிர்ச்சியூட்டும் தன்மையை குறித்து பங்குபற்றிய ஒருவர் பேசினார். அது, பாலியல் தொழிலாளர்கள் உள்ளாகக் கூடிய கொடூரமான அனுபவங்களை வெளிப்படுத்தியது.

‘ எங்களிடம் பாலியல் இலஞ்சம் கோரும் போது நாங்கள் நரக சித்திரவதையால் துன்பப்படுவோம். அவர்கள் மிருகத்தனமுள்ள அரக்கர் போன்றவர்கள். சில சமயங்களில் அவர்கள் எங்களைக் கடிப்பார்கள். அது வாய்வழிப் பாலுறவாக இருக்கும் போது அதற்கு எல்லை கிடையாது. எங்களது தொண்டைகளும், கழுத்துப் பகுதிகளும் காயம் பட்டு விடும். அவர்களின் கைகள் பலம் வாய்ந்தவை. தங்கள் கைகளால் எங்களது முடியைப் பிடித்து இழுத்த பின்னர் எங்கள் நிலைமை கலவரமாகி விடும். அது பல நாட்களுக்கு வலிக்கும்.. ’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

மாற்றுப்பாலின உறுப்பினர்கள் சட்டத்தினால் ஓரங்கட்டப்பட்டும் சமூகக் களங்கத்துக்கு ஆளாக்கப்படுத்தப்பட்டும் உள்ளதால் பாலியல் இலஞ்சங்களை வழங்குவதற்கு அவர்களைத் தேவைப்படுத்திய சந்திப்புகளின் பின், சுகாதார சேவைகளை அவர்கள் அணுகிப் பெற்றுக்கொள்வது அவர்களுக்கு கடினமானது என்பதை இலக்குக் குழுக் கலந்துரையாடலில் பங்குபற்றியோர்கள் குறிப்பிட்டனர்.

‘ பாலுறவால் பரவும் நோய் சிகிச்சைப் பிரிவுகளுக்கு நாங்கள் செல்லும் போது பல பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொள்கிறோம். 2019 இல், மாற்றுப் பாலின ஆட்கள் உட்பட, எல்லாருமே ஒரே சிகிச்சை அறைக்குப் போனோம். யாரேனுமொருவர் மாற்றுப்பாலின பாலியல் தொழிலாளியாக இருந்தால், பிரச்சினைகள் வாயிற் கதவிலேயே ஆரம்பித்துவிடுகிறது. இலஞ்சமாக ரூ.50-100 ஐ கொடுத்து, நாங்கள் உள்ளே போவோம். இப்போது நாங்கள் பாலுறவால் பரவும் நோய் சிகிச்சைப் பிரிவுகளுக்கு போவதில்லை. அவற்றிலிருந்து நாங்கள் விலகிப் போய்விட்டோம். எனினும், தற்போது சிகிச்சை நிலையங்களில் மாற்றுப் பாலினத்தவர்களுக்காக தனியான இடங்கள் உள்ளன. ’

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

பெருந்தொற்று அவர்களை பாலியல் இலஞ்சத்தின் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அதிகரித்த ஆபத்துக்குள் தள்ளியது. நடமாடுவதற்கான கட்டுப்பாடு என்பது, ஆணுறைகள் போன்ற பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார பாதுகாப்புக்கான அத்தியாவசியப் பொருட்களினைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகள் தடைபட்டன.

“

பொதுமுடக்கத்தின் போது எங்களுக்கு ஆணுறைகள் வாங்குவதற்கு ஒரு இடமும் இல்லாதிருந்தது. நிறுவனங்கள் (சிவில் சமூக ஸ்தாபனங்கள்) ஆணுறைகளைக் கொண்டிருந்த போதிலும், எங்களுக்கு விநியோகிப்பதற்கு அவர்களுக்கு வழியில்லாமல் இருந்தது. எங்களுக்கு ஒரு பெண் பாலியல் தொழிலாளியான நண்பி ஒருவர் இருந்தார்... பெருந்தொற்றுக் காலத்தில் ஒரு பொலிஸ்காரர் அவளுடன் ஆணுறை இல்லாது பாலுறவு வைத்துக் கொண்டார், அதனால் அவள் கர்ப்பம் தரித்து விட்டாள். கருக்கலைப்புக்காகப் பல விடயங்களை அவள் பண்ணிப் பார்த்தாள். பிரசவத்தின் போதான சிக்கல்களினால் வலியில் அவள் வீறிட்டுக் கத்தினாள். குழந்தை பிறந்ததும், குழந்தையை அவள் ஒரு பொலிஸ்காரருக்கு விற்றுவிட்டாள். அதன்பின் அவள் துன்புறுத்தப்பட்டாள், அவளது பணமும் பறித்துக் கொள்ளப்பட்டது. இது கொவிட்-19 சமயங்களின் போது நடைபெற்றது. தொழிலைத் தொடர்வதற்காக, அவள் பாலுறவு கொள்வதற்கு பலவந்தப்படுத்தப்பட்டும் அச்சுறுத்தவும் பட்டாள் இன்று வரை இவை பற்றி பேசுவதற்கு அவள் விரும்புவதில்லை. ஆனாலும் ஆரம்ப நாட்களில் சில விபரங்களை எங்களுக்கு கூறினாள். ”

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

பங்குபற்றியோர்களின் கண்ணோட்டத்தில், பாலியல் இலஞ்சம் என்பது ஒன்றை வழங்குவதற்குப் பதிலாக ஒன்றைப் பெற்றுக்கொள்வது என்பதாகும். சட்டம் அவர்களுக்கான குறிப்பிட்ட உரிமைகளை வழங்கவில்லை. சட்ட அமுலாகக உத்தியோகத்தர்களைத் திருப்திப்படுத்துவதற்கு பாலியல் கோரிக்கைகளை வழங்குவதன் மூலம் தங்களது இருப்பு மற்றும் தங்களது வேலை தொடர்பில் நாளாந்தம் போராடுவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

“

வழக்குகள் முடியும் வரை, எங்களது எல்லா வேலைகளயும் தள்ளி வைத்து விட்டு, நீதிமன்றங்களுக்கு நாங்கள் செல்ல வேண்டும். அது ஏற்படுத்தும் நஷ்டங்களை எவரும் இழப்பீடு செய்ய மாட்டார்கள். அதனால் எதையாவது செய்து சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். ”

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

“

பொலிஸ் பாலியல் இலஞ்சங்களைப் பெறும்போது அதை மற்றவர்களுக்கும் அவர்கள் சொல்கிறார்கள். பின், எங்களைத் தேடி மேலும் ஆட்கள் வருகிறார்கள். இது எங்களுக்கு மிகவும் தொல்லை தருகிறது. ”

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

“

என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பாலியல் இலஞ்சங்களுக்கு நான் இணங்குவேன். ”

இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

> நான் ஒரு மாற்றுப்பாலின ஆளென்பதால், அதனை எதிர்ப்பதற்கு நான் அச்சம் கொள்கிறேன்.
>
> இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

> எனது தொழிலைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக நான் [பாலியல் இலஞ்சங்கள்] கொடுப்பேன்.
>
> இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

> நான் [பாலியல் இலஞ்சங்கள்] கொடுப்பேன், ஏனென்றால் நான் தப்பியிருக்க வேண்டும்.
>
> இலக்குக் குழுக் கலந்துரையாடல் பங்குபற்றுனர், மேல் மாகாணம்

## 5.14. பிரதான தகவலளிப்போர் நேர்காணல்களிலிருந்து பெறப்பட்ட சிந்தனைகள் (KII)

இந்த கற்கையின் அமைப்பு ரீதியான கவனம் சுகாதார மற்றும் நீதித் துறைகளின் மீதாக இருந்தது. நீண்ட நேர்காணல்கள் மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல் என்பன மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தியதுடன், பாலியல் இலஞ்சக் குற்றமிழைப்பவர்களால் தற்போதுள்ள நடைமுறைகளும், அமைப்பு ரீதியான ஒழுங்குகளும் துஷ்பிரயோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றது. இதற்கான உதாரணங்கள், விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களைப் பார்வை இடுவதற்கான உரிமைகள் மீது சிறை உத்தியோகத்தர்களால் தற்றுணிவு அதிகாரத்தை அப்பியாசித்தல், சுகாதாரத் துறையில் இடமாற்றங்கள் அல்லது தங்கும் விடுதி வசதிகளை நிர்ணயிப்பதில் தற்றுணிவினைப் அப்பியாசித்தல் அல்லது ஆட்கள் முறைப்பாடுகள் செய்யும் போது பொலிஸாரின் பிற்தொடர்ச்சி நடவடிக்கைகள் என்பற்றை உள்ளடக்குகின்றன. மேலும், பாலியல் இலஞ்சத்தை செயல்திறன் மிக்கவகையில் தடுப்பதற்கான பொறிமுறைகளை தற்போதைய நிறுவன ரீதியான நடைமுறைகள் உள்ளடக்குவதில்லை. அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு குறைந்தபட்ச இடமளிக்கும் வகையில் நியம செயற்பாட்டு நடைமுறைகள் வலுப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளோ அல்லது திட்டங்களோ இல்லை. முறைப்பாடுகளைச் மேற்கொள்வதற்கோ அல்லது மாற்று நடவடிக்கைக்கான வழிமுறையை நாடுவதற்கோ பொறிமுறைகளும் அங்கு இல்லை.

சுகாதார மற்றும் நீதித் துறைகளைச் சேர்ந்த 12 பிரதான தகவலளிப்பவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள், நீண்ட நேர்காணல்களின் கண்டறிதல்களை உறுதி செய்தன. இந்தப் பிரதான தகவலளிப்பவர்கள் பாலியல் இலஞ்சத்தை இனங்கண்டு அதனை விளக்குவதற்கும் இயலுமாக இருந்தது. இலஞ்சத்தை குற்றமாக்குகின்ற பொது சட்டத்தின் கீழ் இது ஏற்கனவே ஒரு குற்றமாக இருப்பது பற்றி பலர் அறிந்திருந்தனர். இந்த குழு ஒரு மனநல மருத்துவ ஆலோசகர் (தேசிய மட்டம், மேல் மாகாணம்), பட்டப்பின்படிப்பு பயிற்சி வைத்தியர் (தேசிய மட்டம், மேல் மாகாணம்), ஒரு பெண் பொலிஸ் பரிசோதகர் (மத்திய மாகாணம்), மற்றும் சட்டத்தரணி (மேல் மாகாணம்) ஆகியோரை உள்ளடக்கியது எனினும், பாலியல் இலஞ்சம் பிரத்தியேகமான வகையில் குற்றமாக்கப்படவில்லை எனப் பலரும் குறிப்பிட்டனர். நோயாளிகள் அதே போன்று வைத்தியர்களாலும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கை மருத்துவ சபை பெறுகின்றதாக நேர்காணப்பட்ட ஒருவர்[42] தெரிவித்தார். அந்த முறைப்பாடுகளில் பாலியல்

[42] வைத்தியர் மற்றும் கல்வியியலாளர்

இலஞ்சமும் உள்ளடங்கியிருந்ததா என்பது தெளிவானதாக இருக்கவில்லை..

நீதித் துறையில் பாலியல் இலஞ்சம் இடம்பெறுவதாகவும், குற்றவியல் நீதி முறைமையால் பழிவாங்கப்படுவதாகவும், ஆனால் 'இரண்டாம்நிலை பழிவாங்கப்படல்' காரணமாக உத்தியோகபூர்வ முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு மக்கள் தயங்குவதாகவும், நீதித்துறையைச் சேர்ந்த ஒரு முக்கிய தகவலளிப்பவர்[43] குறிப்பிட்டார். 'பாலியல் இலஞ்சமொன்றுக்கான ஒருமுறையான அணுகுதல் அல்லது வேண்டுகோளை எதிர்ப்பதற்கு இயலாத எவரொருவரும்' பாலியல் இலஞ்சத்தின் ஒரு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் என இந்த நேர்காணப்பட்டவர் விபரித்தார். பாலியல் இலஞ்ச நிகழ்வுக்கான ஒரு முக்கிய காரணியாக பரஸ்பர நன்மை கருதப்படுதல் வேண்டுமென இந்த முக்கிய தகவலளிப்பவரால் தெரிவிக்கப்பட்டது. சட்ட தொழில் துறையில், 'பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் ஒரு பெரும்பான்மையினரை கனிஷ்ட பெண் சட்டத்தரணிகள் உருவமைக்கலாம்' என சட்டத் துறையிலிருந்தான ஒரு முக்கிய தகவலளிப்பவர்[44] குறிப்பிட்டார். 'குற்றமிழைப்பவருடன் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் தொடர்புபட வேண்டி ஏற்படும் சூழ்நிலைகளில்' பாலியல் இலஞ்சம் இடம்பெறுவதாக மற்றொரு முக்கிய தகவலளிப்பவர்[45] குறிப்பிட்டார். அரசத் துறையிலுள்ள தாமதங்கள் மற்றும் வினைத்திறன் இன்மை பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்படுவதற்கான ஆபத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இடுவதாகவும் அதே நேர்காணப்பட்ட நபர்[46] குறிப்பிட்டார். அரசத் துறையிலுள்ள தாமதங்கள் மற்றும் வினைத்திறன் இன்மை பாலியல் இலஞ்சத்திற்காக அணுகப்படுவதற்கான ஆபத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை இடுவதாகவும் அதே நேர்காணப்பட்ட நபர்[47] குறிப்பிட்டார். நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு நீதித்துறை உத்தியோகத்தர்களினால் புரியப்பட்ட பாலியல் இலஞ்சம் பற்றி முறைப்பாடுகளைத் தான் மேற்கொண்டதாக மற்றொரு முக்கிய தகவலளிப்பவர் தெரிவித்தார். அத்தகைய சந்தர்ப்பங்களில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நீதவான் இடமாற்றம் செய்யப்பட்டதாகவும், ஆனால் மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்[48] குறிப்பிட்டார்.

பாலியல் இலஞ்சம் வழங்குவதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை நிர்ப்பந்திப்பதற்கு தங்களது பதவி சம்பந்தப்பட்ட அதிகாரம் அல்லது வரப்பிரசாதத்தின் சாதகத் தன்மையை உபயோகிக்கின்ற குற்றமிழைப்பவர்களாக பொதுவாக ஆண்களே உள்ளனர் என்ற கண்ணோட்டத்தைப் அவர்கள் பலரும் கொண்டுள்ளனர். சமபாலுறவுகளிலுள்ள பெண்கள் குற்றமிழைப்பவர்களாக இருந்த சந்தர்ப்பங்கள் குறித்து தான் கேள்விப்பட்டிருப்பதாகவும் முக்கிய தகவலளிக்கும் ஒருவர்[49] குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களாக 'பெரும்பாலும் பெண் சிற்றூழியர்கள், சமபாலுறவுகளிலுள்ள இளம் ஆண்கள், கனிஷ்ட பெண் மருத்துவர்கள் மற்றும் பயிலுனர்கள் மற்றும் பொதுவாக நலிவுற்ற நிலைகளிலுள்ள ஆட்கள்' இலகுவில் பாதிக்கப்படக் கூடிய நபர்களாக' விபரிக்கப்பட்டனர்.[50]

'சமுதாயத்தில் பெண்களை நாம் எவ்வாறு கருதுகிறோம் என்பதுடன்' வறுமை மற்றும் மொழிப் பிரச்சினைகள் இதற்குப் பங்களிக்கும் காரணிகள் என மற்றொரு நேர்காணப்பட்டவர்[51] வறுமை மற்றும் மொழிப் பிரச்சினைகள் இதற்குப் பங்களிக்கும் காரணிகள் என மற்றொரு நேர்காணப்பட்டவர்[52] இனங் கண்டார். பாலியல் இலஞ்சத்திற்காக பரிகாரங்களை நாடும் போது 'பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பதால், பயங்கரமான விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும், மற்றும் அதில் எந்தவித நன்மைகளும் இருக்காது' என அதே முக்கிய தகவலளிக்கும் நபர்[53] குறிப்பிட்டார். 'செல்வாக்கு மிக்க மருத்துவ

43 குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர்
44 குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர்
45 சட்டத் தொழில்புரிபவர்
46 CIABOC உத்தியோகத்தர்
47 CIABOC உத்தியோகத்தர்
48 சட்டத் தொழில்புரிபவர்
49 மருத்துவர் மற்றும் கல்வியியலாளர்
50 மருத்துவர் மற்றும் கல்வியியலாளர்
51 உளவியல் ஆலோசகர்
52 குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்
53 உளவியல் ஆலோசகர்

தொழில் புரியும் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றினைச் செய்வதற்காக பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் இனங் காணப்படவோ அல்லது தனியாக்கப்படவோ விரும்பவில்லை' எனக் குறிப்பிடப்பட்டது.[54] 'தங்களது அனுபவங்கள் பற்றி பேசுவதற்கு எத்தனிக்கிறார்கள் என்பதனால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர் அல்லது பதவியிறக்கப்பட்டனர்' என மற்றுமொரு நேர்காணப்பட்டவர்[55] குறிப்பிட்டார். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு 'விடுமுறை, மேலதிக வேலை நேரம் மற்றும் பதவி உயர்வுகள் என்பவை மறுக்கப்பட்டு, அறிவித்தமைக்காகத் தனிப்படுத்தப்பட்டு, பிரபலமான மருத்துவத் தொழிலின் மகிமைக்கு தீங்கு விளைவிப்பதாகத் தவறாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றனர்' என்றும் நேர்காணப்பட்ட அதே நபர்[56] குறிப்பிட்டார்.

உள்ளக விசாரணைகள் ஊடாக குற்றமிழைத்தவர்களை பொறுப்புக் கூறச் செய்தல் என்பது பயனற்றதாகலாம், ஏனெனில் அத்தகைய விசாரணைகள் 'மேற்கொள்வதற்குக் கடினமானவை' மற்றும் 'நிறைவடைய நீண்ட காலம் எடுக்கும்' என மற்றுமொரு முக்கிய தகவலளிப்பவர்[57] குறிப்பிட்டார். 'எங்களது சட்ட அமுலாக்கம் மற்றும் வழக்குத் தொடுக்கும் உத்தியோகத்தர்களிடம் வரும் பொழுது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள், குறிப்பாக பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மீது அனுதாபம் மற்றும் கூருணர்வு என்பவை அங்கு பெருமளவில் இல்லாதுள்ளது' என நீதித் துறையிலிருந்தான ஒரு பிரதான தகவலளிப்பவர்[58] குறிப்பிட்டார். சுகாதாரத் துறையினுள் ஊழியர் மேற்பார்வை என்பது பலவீனமானது மற்றும் முறைப்பாட்டுப் பொறிமுறை ஏற்படுத்தப்படவில்லை என நேர்காணப்பட்ட மற்றொருவர்[59] குறிப்பிட்டார். 'பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான சட்டங்களின் கீழ் கனிஷ்ட ஊழியர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்' எனவும் நேர்காணப்பட்ட அதே நபர்[60] குறிப்பிட்டார். முறைப்பாடுகளுக்கான பெட்டி மற்றும் தேவையற்ற தாமதமின்றி 'சுயாதீன நிர்வாக விசாரணைச் செயற்பாடு' என்பவற்றை மற்றுமொரு நேர்காணப்பட்டவர் ஆலோசனையாக முன்வைத்தார்.[61] ஒரு பரிகாரமாக பயனுறுதியான சட்ட உதவி ஏற்பாடு என்பது மற்றொரு நேர்காணப்பட்டவரால் யோசனை தெரிவிக்கப்பட்டது. அதே நேர்காணப்பட்டவர்[62] 'வைத்தியசாலைகளை கணக்காய்வு செய்வதற்கு ஒரு மூன்றாம் தரப்பு' எனவும் ஒரு யோசனை தெரிவித்தார்.

பாலியல் இலஞ்சத் தவறொன்றின் வெற்றிகரமான வழக்குத் தொடுத்தல் நடவடிக்கை முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை ஊக்குவிக்க முடியுமென, முக்கிய தகவலளிப்பவர் ஒருவர் குறிப்பிட்டார். ஒரு வெற்றிகரமான வழக்குத் தொடுத்தல் நடவடிக்கை, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரின் கௌரவம் பாதுகாக்கப்படுவதையும் மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் போதுமான இழப்பீடு அளிக்கப்படுவதையும் உத்தரவாதப்படுத்துகின்ற ஒன்றாகவும் இருக்கும் என்பது இந்த முக்கிய தகவலளிப்பவரின்[63] அபிப்பிராயமாகும். மேலும், எந்தவொரு சட்டச் சீர்திருத்தமோ அல்லது கொள்கையோ கள யதார்த்தங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என நேர்காணப்பட்ட இதே நபர் குறிப்பிட்டார். உதாரணத்திற்கு, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தவறிழைத்தவருடன் அநேகம் நெருக்கமான தொடர்பில் இருந்திருக்கலாம் மற்றும் ஒரு சேவை, அனுமதி, பரிந்துரை போன்றவை அளிக்கப்படுவதற்கு தவறிழைத்தவர் மீது உண்மையில் தங்கியிருந்திருக்கலாம்.[64] குற்றத்தால் பலியானவர்களையும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை நாடு முழுவதிலும் அதன் கிளைகளை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும் எனவும், பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு அவை அணுகக் கூடியதாகவும், அவற்றின் சேவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என இந்த நேர்காணப்பட்டவர்[65] பிரேரித்தார். மேலும், பாலியல் இலஞ்சத்திற்கு எதிராகப் போராடுகின்ற

[54] மருத்துவர் மற்றும் கல்வியியலாளர்
[55] ஓய்வுபெற்ற தாதி மற்றும் கல்வியியலாளர்
[56] ஓய்வுபெற்ற தாதி மற்றும் கல்வியியலாளர்
[57] பட்டப்பின்படிப்பு மருத்துவப் பயிலுனர்
[58] சட்டத் தொழில்புரிபவர்
[59] மருத்துவர் மற்றும் கல்வியியலாளர்
[60] பட்டப்பின்படிப்பு மருத்துவப் பயிலுனர்
[61] மருத்துவர் மற்றும் கல்வியியலாளர்
[62] ஓய்வுபெற்ற தாதி மற்றும் கல்வியியலாளர்
[63] குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர்
[64] குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்
[65] குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர்

மற்றும் மற்றையவர்களைப் பாதுகாக்கின்ற அரச உத்தியோகத்தர்களின் ஒரு வலையமைப்பு ஸ்தாபிக்கப்படல் வேண்டுமெனவும் அவர்[66] யோசனை தெரிவித்தார்.


பாலியல் இலஞ்சத்திற்கான பரிகாரங்களை நாட விரும்பும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு தெளிவான ஆதாரமின்மை என்பது ஒரு பொதுவான தடையாக இருப்பதாக ஒரு பெண் சட்டத் தொழில்புரிபவர் குறிப்பிட்டார்.

> “… பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களில் அதிகளவில் ஆனோர் அவ்வாறானதொரு பொருத்தமற்ற வேண்டுகோளோ அல்லது அணுகுதலோ மேற்கொள்ளப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு ஆதாரத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை (புகைப்படங்கள் அல்லது குரல்பதிவுகள்). பின்னதாக, சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதும், நிலைநாட்டுவதும் அவர்களுக்கு மிகவும் கடினமானதாகின்றது.[67] ”
>
> நீதித் துறை, பெண் சட்டத் தொழில்புரிபவர், மேல் மாகாணம்

இலங்கையில் பாலியல் இலஞ்சம் மீது கவனம் செலுத்துவதில் பிதான தகவலளிப்பவர்களால் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இவை, ஓர் சட்டவரைபு பிரேரணைக்கு அமைவாக இலஞ்ச சட்டத்தை திருத்துதல், தமிழில் பணியாற்றுவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது மேலதிக உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல், இலஞ்சம் மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஒரு தொகுதி உட்பட அறிவூட்டுதல் என்பற்றை இவை உள்ளடக்கின.[68] பொலிஸிற்கான பயிற்சிக் கையேடுகள் பாலியல் இலஞ்சம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கவில்லை என மற்றொரு முக்கிய தகவலளிப்பவர்[69] குறிப்பிட்டார்.



[66] குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர்
[67] சட்டத் தொழில்புரிபவர்
[68] CIABOC உத்தியோகத்தர்
[69] பொலிஸ் பரிசோதகர்



# 6. அரச பொறுப்பாக பாலியல் இலஞ்சத்தைத் தடைசெய்தல்

பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் நீதி மற்றும் சுகாதாரத் துறைகளிலுள்ள பிரதான தகவலளிப்பவர்களின் அனுபவங்கள் மற்றும் கண்ணோட்டங்களிலிருந்து கருத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தப் பிரிவு அரசின் பொறுப்பு என்ற கண்ணோட்டத்திலிருந்து பாலியல் இலஞ்சத்தைப் பகுப்பாராய்கிறது. இந்த பொறுப்பு முப்பரிமாணம் கொண்டது. முதலாவது, பாலியல் இலஞ்சம் என்பது ஊழலின் கடுமையான மற்றும் அழிவுகரமான வடிவமாகும். அது ஜனநாயகம், சட்டவாட்சி, மற்றும் அரசியலமைப்பு ரீதியான அரசாங்கம் என்பவற்றை பாதிக்கும் கடுமையான மற்றும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளின் ஒரு குறிக்காட்டியாகும். இரண்டாவதாக, பாலியல் இலஞ்சம் என்பது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரின் பல்வேறு மனித உரிமைகளின் ஒரு மீறலாகும். இது தொடர்பில், அதன் மனித உரிமைக் கடப்பாடுகளை மதிப்பதற்கு, பாதுகாப்பதற்கு மற்றும் அதன் பூர்த்தி செய்தலுக்கு அரசு ஒரு கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இந்தப் பொறுப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் அரசின் தோல்வியின் அறிகுறியே பாலியல் இலஞ்ச நிகழ்வாகும். இந்த அனைத்துச் சம்பவங்களிலும், தமது மனித கௌரவம், சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாரபட்சத்திலிருந்து விடுபடுவதற்கான உரிமை என்பவற்றின் ஒரு மீறலை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அனுபவிக்கின்றனர். மூன்றாவது மற்றும் அதனுடன் தொடர்புடையதாக, பாலியல் இலஞ்சம் என்பது நபர் ஒருவருக்கு எதிரான குற்றவியல் குற்றமாக உள்ளது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பழைத்தவர்களுக்கு கடுமையான உடல்ரீதியான மற்றும் உள ரீதியான தீங்கினை அது ஏற்படுத்துகின்றது. அதன் நிகழ்வு, சமூக அமைப்பினை கடுமையாகப் பாதிக்கின்றது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான நீதியை உறுதி செய்தல் பொறுப்புக்கூறல், தண்டனை, புனர்வாழ்வு மற்றும் இழப்பீடு என்பவற்றை அது தேவைப்படுத்துகிறது.

## 6.1. மனித உரிமைகளின் ஒரு மீறலாக பாலியல் இலஞ்சம்

சுகாதாரம் அல்லது நீதித் துறைகளில் தொழில்வாய்ப்பின் ஒரு சூழ்நிலையில் பாலியல் இலஞ்சம் நிகழுமிடத்து, அது ஊழியர்களின் வேலை செய்வதற்கான உரிமை மீது, குறிப்பாக 'தனிநபருக்கு அடிப்படை அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரங்களைப் பாதுகாக்கும் நிலைமைகளின் கீழ் முழுமையானதும் உற்பத்தித்திறன் கொண்ட வேலை' மற்றும் 'பாதுகாப்பும் ஆரோக்கியமான வேலை நிலைமைகள்' என்பவற்றின் உரிமையில் ஓர் எதிர்மறையான பாதிப்பை அது கொண்டுள்ளது.[70] பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர் மனவதிர்ச்சி மற்றும் சமூகக் களங்கத்தை அனுபவிக்கிறார், அது பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவரது வேலைவாய்ப்பின் சுய-கண்ணோட்டம் மற்றும் அனுபவம் என்பவற்றைப் பாதிக்கிறது.

சுகாதாரத் துறையில் பாலியல் இலஞ்சம் நிகழும் போது, பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அல்லது அவர்களில் தங்கியிருப்போரின் சுகாதாரத்திற்கான உரிமை மீது அது ஒரு நேரடிப் பாதிப்பைக் கொண்டுள்ளது.[71] பாலியல் இலஞ்சத்தின் குற்றமிழைப்பவரைத் தவிர்க்கும் முகமாக தங்களுக்கான அல்லது மற்றவர்களுக்கான சுகாதாரப் பராமரிப்பைக் கைவிடுவதை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் விபரித்தனர். ஏனைய சந்தர்ப்பங்களில், சுகாதாரத்திற்கான தங்களது உரிமையை அனுபவிப்பதற்கு நாடுவதில், அவர்கள் பாலியல் இலஞ்சத்தின் இடர்நேரல் ஆபத்தில் உள்ளனர். பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் பலர், தங்களது மன ஆரோக்கியத்தில் ஒரு கடுமையான எதிர்மறைப் பாதிப்பைக் குறிப்பிடுகின்றனர்.

இந்த அறிக்கையில் கலந்துரையாடப்பட்ட பாலியல் இலஞ்சத்தின் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் தங்களது அந்தரங்கத்திலான ஓர் அத்துமீறலை அனுபவித்தனர். இது, தங்களது அலைபேசிகளில் வேண்டப்படாத தொடர்பாடல்களையும் உள்ளடக்குகிறது. அவர்களது தனிப்பட்ட தரவுகளின் இரகசியத் தன்மை மீறப்பட்டதுடன்

[70] பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICESCR) உறுப்புரை 6(2), உறுப்புரை 7(ii)(ஆ)
[71] பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICESCR) உறுப்புரை 12

சமரசம் செய்யப்பட்டது. அதனால், அவர்களின் அந்தரங்கத்திற்கான உரிமை அத்துமீறப்பட்டது.[72]

## 6.2. ஒரு குற்றவியல் தவறாக பாலியல் இலஞ்சம்

நீதித்துறையில் பாலியல் இலஞ்சம் நிகழும் போது, நீதி மற்றும் குற்றவியல் நீதியை அணுகுவதற்கான ஒரு தடையாக அது செயற்படுகின்றது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களில் அது கடுமையான விளைவுகளைக் கொண்டுள்ளது.

ஏனைய சந்தர்ப்பங்களில், குறிப்பாக மாற்றுப்பாலின சமூகத்தின் உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்டவாறு, நீதியை அணுகுவதற்கான தடையாக நீதித் துறை வருகின்றது. நீதித்துறையைச் சேர்ந்த சில பணியாளர்கள் தங்கள் தற்றுணிவு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்ற விதம், இலங்கையில் பாலியல் ரீதியாக சிறுபான்மையாக உள்ளவர்களின் பிரத்தியேகமான உரிமைகளுக்கான பாதுகாப்புகள் இல்லாமையால், அது அவர்களைப் பாலியல் இலஞ்சம் பெறும் அபாயத்தில் இடுகிறது.

இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் உள்ள பிரச்சினைகளின் காரணமாக பாலியல் இலஞ்சத்தை பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் முறையிடுவதில்லை என பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அதே போன்று சுகாதார மற்றும் நீதித் துறைகளின் பிரதான தகவலளிப்பவர்களினால் தெரிவிக்கப்பட்டது. அதன் விளைவாக, அவர்கள் அனுபவிக்கும் பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கான உரிய செயன்முறைக்கான உரிமை மற்றும் அதே போன்று ஒரு பரிகாரத்திற்கான உரிமையும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது.

பாலியல் இலஞ்சத்தை பிரத்தியேகமான குற்றமாக்குவதற்கு இலங்கை அரசு தவறியுள்ளது. மேலும், பாலியல் இலஞ்சத்தை தடுப்பதற்கும், மற்றும் அதற்குப் பரிகாரம் அளிப்பதற்கும் விசேட கொள்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு அரசத்துறையை அரசு தேவைப்படுத்தவில்லை. பாலியல் இலஞ்சத்தின் இடர்நேரல் ஆபத்தில் உள்ளவர்களின் மனித உரிமைகளை மதிப்பதற்கான ஒரு தவறுவதலுக்கு அது சமமாகின்றது. பாலியல் இலஞ்சத்தை தடுப்பதற்கும் மற்றும் தவறுக்குப் பயனுறுதியான புலனாய்வு, வழக்குத் தொடுத்தல், தண்டித்தல் மற்றும் பரிகாரம் என்பவற்றை வழங்குவதற்கும் உரிய கவனத்துடன் செயற்படுவதற்கும் மற்றும் நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அரசு தேவைப்படுத்தப்படுகின்றது.

## 6.3. ஊழலாகப் பாலியல் இலஞ்சம்


இலஞ்சம் மற்றும் ஊழல் என்பன ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பாட்சி முறைக்கு விரோதமானவை. பொது அதிகாரம் மக்களின் நம்பிக்கை மற்றும் மக்களின் சார்பில் மாத்திரமே அப்பியாசிக்கப்படுகிறது. இலங்கையில், இறைமை என்பது மக்களிடம் உள்ளது மற்றும் இந்த இறைமை பராதீனப்படுத்த முடியாதது என அரசியலமைப்பு பிரகடனம் செய்கின்றது. அரசினாலான அதிகார துஷ்பிரயோகம் உட்பட, எந்தவொரு தன்னிச்சையான நடவடிக்கையும் சமத்துவத்திற்கான ஓர் உரிமை மீறல் என இலங்கையின் உயர் நீதிமன்றம் தொடர்ச்சியாக தீர்மானித்துள்ளது.

இந்த கற்கைக்காக ஆராயப்பட்ட பாலியல் இலஞ்ச சம்பவங்கள் குறிப்பாக அதிகார துஷ்பிரயோகத்தின் ஒரு மோசமான வடிவமாகும். சட்டத்தினால் அவர்கள் வழங்குவதற்கு கடப்பாடு கொண்ட சேவைகளை வழங்குவதற்கு பாலியல் சலுகைகளைக் கோருவதின் மூலம், அரசின் முகவர்கள் சட்டத்தினால் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தற்றுணிவு என்பவற்றைத் துஷ்பிரயோகிக்கின்றனர். இங்கு பகுப்பாராயப்பட்ட சம்பவக் கற்கைகள் குற்றமிழைப்பவர்கள் தண்டனை விலக்களிப்புடன் செயற்படுவதையும், பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் அதிர்ச்சி மற்றும் அவர்களுக்கு இணைக்கப்பட்ட சமூகக் களங்கம் என்பவற்றைக் கையாள்வதற்கும் தனித்து விடப்படுகிறார்களெனவும் தெரிவிக்கின்றன. அவர்களுக்கு கிடைக்கும் வகையில் பயனுறுதியான சட்டப்பரிகாரங்களை அவர்கள் கொண்டிருப்பதில்லை. அதனால், புரையோடிப்போயுள்ள ஊழலிற்கு பாலியல் இலஞ்சம் சான்றாக உள்ளது. அதன் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அதன் தனித்துவமான அதிகாரம் மற்றும் தத்துவத்தைப்

[72] சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் (ICCPR), உறுப்புரை 17 மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சபையின் பொதுக்குறிப்பு

பயன்படுத்துவதற்கு அதன் முக்கிய செயற்பாட்டை அரசு நிறைவேற்றுவதற்கு தவறியமைக்கு அது சான்றாகிறது. ஜனநாயகம் தோற்கின்றது என்பதின் ஒரு அடையாளமாக பாலியல் இலஞ்சம் உள்ளது. மக்களின் பிரதிநிதிகளும், முகவர்களும் சட்டத்தின் வரையறைக்குள் தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தவறுகிறார்கள் என்பது மட்டுமன்றி தேர்தல் வாக்குகள் மற்றும் சட்டத்தின் ஊடாக தாம் பெற்ற அதிகாரத்தையும் தீவிரமாகத் துஷ்பிரயோகிக்கின்றனர்.






# 7. முடிவுரை

பாலியல் இலஞ்சத்தின் சுய அடையாளங் காணப்பட்ட பாதிக்கப்பட்ட தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்களின் பண்புசார் ஆராய்தலின் ஊடாக, இந்தக் கற்கை அதன் நிகழ்வினை உறுதி செய்கின்றதுடன், அதன் தீவிரத் தன்மையையும் விளக்குகின்றது. சுகாதாரம் மற்றும் நீதித் துறைகளில் பாலியல் இலஞ்சம் பதிவாகியுள்ளதுடன், குற்றமிழைத்தவர்கள் அரசின் முகவர்களாவர். பாலியல் இலஞ்சத்தின் விளைவுகள் ஆழமான மனவதிர்ச்சி ஏற்படுத்துபவை, சமூகக் களங்கத்தை உண்டாக்குபவை என்பவற்றுடன் பொருளாதார மற்றும் சமூகப் பின்விளைவுகள் உள்ளடங்கலாக ஏனைய எதிர்மறையான விளைவுகளைக் கொண்டவை என பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. பாலியல் இலஞ்சம் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களை மாத்திரமன்றி, அவர்களுக்கூடாக, அவர்களின் குடும்பத்தையும் கூடப் பாதிக்கின்றது. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த பெண்களின் அனுபவங்கள் கடுமையானவை, ஆனாலும், இந்த கற்கைக்காக நேர்காணப்பட்ட மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இதன் தீவிரம் மேலும் அதிகமாகும். பாலியல் இலஞ்சத்திற்கு அதிகம் பாதிக்கப்படக் கூடிய மற்றொரு வகை நபர்களாக பாலியல் தொழிலாளர்கள் விளங்குகின்றனர். மாற்றுப்பாலின சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், பாலியல் தொழிலில் ஈடுபடுமிடத்து, அவர்களது பாதிக்கப்படக் கூடிய தன்மையும் கூடுதல் கடுமையானது.

பாலியல் இலஞ்சம் மூன்று பரிமாணங்களைக் கொண்டது: ஓர் ஊழல் பரிமாணம், ஒரு மனித உரிமைகள் பரிமாணம் மற்றும் ஒரு குற்றவியல் நீதி பரிமாணம் என்பவை அவையாகும். தனிநபர் மற்றும் பரந்த சமுதாயம் மீது பாலியல் இலஞ்சத்தின் பாதிப்பைக் கவனத்தில் கொள்ளும் போது, மனித கண்ணியம் மீது பாலியல் இலஞ்சம் ஒரு பரவலான பாதிப்பைக் கொண்டுள்ளது. உடல்சார் நேர்மை, சமத்துவம் மற்றும் அந்தரங்கத்திற்கான உரிமை, மற்றும் பரிகாரத்திற்கான உரிமை உள்ளடங்கலாக பல்வேறு மனித உரிமைகளை அதன் நிகழ்வு மீறுகின்றது. தாங்கள் அனுபவித்த தீங்கிற்காக முறைப்பாடொன்றை மேற்கொண்டு மற்றும் சட்ட முறைமையின் ஊடாக பரிகாரம் ஒன்றைப் பெறுவதற்கு முடியும் என இந்த கற்கையின் பங்குபற்றுனர்கள் எவரும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. சட்டம் மற்றும் சட்ட நிறுவனங்களில் நம்பிக்கையின்மை என்பது ஆச்சரியம் தருவதாகவும், மற்றும் மாற்றமற்றதாகவும் உள்ளது. உண்மையில், அரச முகவர்களினாலேயே அதாவது, சட்டம் மற்றும் கொள்கைக்கு வலு அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பணியாளர்கள் மற்றும் எல்லா ஆட்களுக்கும் சட்டத்தின் சமமான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் அரச முகவர்கள் போன்றவர்களாலேயே பாலியல் இலஞ்சம் கோரப்பட்டுள்ளது. சட்டம், நிறுவனங்கள் மற்றும் அதன் பணியாளர்கள் ஊடாக பாலியல் இலஞ்சத்திற்கு ஏதேனும் தீர்வுகளை நாடுவதற்கு ஒரு தடையாக செயற்படுகின்றமை பாலியல் இலஞ்சத்தின் யதார்த்தமாக உள்ளது. அதனால், பாலியல் இலஞ்சத்திற்கான குற்றவியல் பொறுப்புடைமையை உறுதி செய்வது மிகவும் கடினமாகும். பாலியல் இலஞ்சம் நிகழும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சட்டமே சம்பந்தப்பட்டிருக்கின்றது. அதனால், பாலியல் இலஞ்சத்தை சட்டம் பயனுறுதியான வகையில் தடுக்குமா அல்லது பரிகாரமளிக்குமா என்பதில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் கூட சந்தேகம் கொண்டவர்களாக உள்ளனர். உண்மையில், சட்ட முறைமை மற்றும் அதன் கலாச்சாரம் குற்ற விலக்களிப்பை ஊக்குவிப்பதுடன் சட்டத்தின் குற்றமிழைப்பவர்களை பாதுகாக்கின்றது என அவர்கள் சுட்டிக்காட்டினர். பாலியல் இலஞ்சம் ஊழலாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்பதினால், அரசின் முகவர்களால் தற்றுணிவு அதிகாரத்தின் துஷ்பிரயோகம் காரணமாக பாலியல் இலஞ்சம் நிகழும் வழிகளை சுட்டிக்காட்டுகின்றது. பாலியல் இலஞ்சம், பொறுப்புக்கூறல் மற்றும் ஆட்சிமுறை நெருக்கடியின் ஒரு குறிக்காட்டியாகும்.



# 8. பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் தொடர்பான பரிந்துரைகள்

இந்த கற்கையின் பங்குபற்றுவோர்கள் அனைவரும் மனதில் சில குறித்த பரிந்துரைகளைக் கொண்டிருந்தனர். அவ்வாறான பரிந்துரைகளிலிருந்து இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை பயனுறுதியான வகையில் தடைசெய்வதற்கு, புலனாய்வு செய்வதற்கு, வழக்குத் தொடுப்பதற்கு மற்றும் தண்டணைகளை வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைகளை இந்த பிரிவு பிரேரிக்கிறது. பரிந்துரைகளில் சில கற்கையின் பங்குபற்றுனர்களிடமிருந்து நேரடியாக பெறப்பட்டன. இந்தப் பரிந்துரைகள் அரசு, சிவில் சமூகம், தொழில்சார் அமைப்புகள் மற்றும் சர்வதேச மட்டத்திலான ஸ்தாபனங்கள் என்பவற்றுக்கானவையாக இருந்தன. அரசுக்கான பரிந்துரைகள் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகள், நிர்வாக அமைப்புகள் மற்றும் பொலிஸ், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு போன்ற சுயாதீன நிறுவனங்கள் என்பதின் அடிப்படையில் மேலும் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 8.1. பாலியல் இலஞ்சத்தைத் தடுத்தல்

## அரசுக்கான பரிந்துரைகள்

**வாக்கெடுப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்ட அமைப்புகள்**

8.1.1. சட்டச் சீர்திருத்தம் ஊடாக பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் தடைசெய்தல் மற்றும் குற்றமாக்கல்

8.1.2. ஒப்புதலளிக்கும் அல்லது சம்மதம் தெரிவிக்கும் பராயமடைந்தோர் மத்தியில் ‘இயற்கை ஒழுங்குக்கு எதிராக தன்னிச்சையான வகையில் உடல் ரீதியான உடலுறவை’ குற்றமாக்கும் குற்றவியல் கோவையின் 365 மற்றும் 365 ‘அ’ பிரிவுகளை நீக்கல்.

8.1.3.1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தினை இரத்துச் செய்தல்.

8.1.4. பொது இடங்கள் மற்றும் அரசச் சேவைகளுக்கான அணுகும் வசதி உள்ளடங்கலாக அனைத்துப் பகுதிகளிலும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான சிறுபான்மையினரின் சம உரிமைகளை வெளிப்படையான வகையில் அங்கீகரித்தல்.

8.1.5. ஒரு கலந்தாய்வுச் செயற்பாட்டின் பின்னர் வணிக ரீதியிலான பாலியல் தொழிலைச் சட்டப்பூர்வமாக்கும் மற்றும் நெறிமுறைப்படுத்துவதற்கும் சட்டத்தை உருவாக்கல்.

8.1.6. ஊழலுக்கு எதிரான ஐ.நா சாசனத்திற்கு உள்நாட்டு சட்டப்பூர்வ தன்மையை அளிப்பதற்கு இயலும் வகையில் சட்டத்தை ஏற்று அனுமதித்தல்.

8.1.7. பாலியல் இலஞ்சத்தை தடுப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு மற்றும் வழக்கு தொடுப்பதற்கும், பரிகாரமளிப்பதற்கும் தேசிய மட்டத்தில் குறிப்பிட்ட கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுதல். அவ்வாறான கொள்கை ஓர் உள்ளிணைந்த மற்றும் அனைத்துப் பங்குதாரர்களும் சம்பந்தப்பட்ட வகையிலான பங்கேற்கும் செயன்முறை ஊடாக உருவாக்கப்படல் வேண்டும். தேசிய கொள்கை ஒன்றை வரைவதில் குறிப்பாக பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளாகக் கூடிய ஆபத்தில் உள்ள பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின சமூக உறுப்பினர்கள் கலந்தாலோசிக்கப்படுதல் வேண்டும். தேசிய கொள்கை காலத்திற்கு காலம் அடிப்படையில் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

**நிர்வாக அமைப்புகள்**

8.1.8. பாலியல் இலஞ்சம் தொடர்பில் ஒரு முற்றிலும் சகித்துக்கொள்ள முடியாத கொள்கையை உள்ளடக்குவதற்கு ஸ்தாபனக் கோவையை மீளாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.

8.1.9. பாலியல் இலஞ்சம் தொடர்பான தடை செய்தல் உள்ளடங்கலாக அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புகள் குறித்த கட்டாய மற்றும் எல்லாக் காலத்துக்கும் ஏற்புடையதாகக் கூடிய பயிற்சிகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

8.1.10. அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் போன்ற எதிர்காலத்தில் குற்றமிழைக்கும் சாத்தியம் கொண்டவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை இலக்கு வைத்து நடைமுறைப்படுத்தல்.

**சுயாதீன அரச நிறுவனங்கள்**

8.1.11. ஒரு சுயாதீன அரசியலமைப்பு பேரவையை மீள்அறிமுகம் செய்வதன் ஊடாக இலஞ்சம் அல்லது ஊழலை புலனாய்வு செய்வதற்கு ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையை உத்தரவாதப்படுத்தல்.

8.1.12. பாலியல் இலஞ்ச நிகழ்வுகளுக்கான காரணங்களை விசாரிப்பதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஆய்வுகளை நடத்துதல் வேண்டும். இந்த ஆய்வுகள் அனைத்துப் பங்குதாரர்களினதும் உள்ளீட்டுடன், கலந்தாய்வு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

8.1.13. அவ்வாறான ஆய்வுகளின் முடிவுகளைப் பகிரங்கப்படுத்தல்.

8.1.14. பாலியல் இலஞ்சம் மற்றும் அதன் கடுமையான தன்மை தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

தேசிய மட்டத்திலிருந்து சமூக மட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் நிகழுதல் வேண்டும்.

அத்தகைய நிகழ்ச்சிகளின் ஊடாக பெண்கள், மற்றும் பால்நிலை மற்றும் பாலியல் சிறுபான்மையினர் ஆகியோரின் பங்குபற்றலை உறுதி செய்தல்.

விழிப்புணர்வு ஏற்படுத்தலில் நாடகம் மற்றும் கலை வடிவங்களை ஈடுபடுத்தல்.

விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு முகநூல் போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தல்.

சமுர்த்தி பயனாளிகளுக்கான கூட்டங்கள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்ட கூட்டங்கள் ஊடாக சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

8.1.15. அரச உத்தியோகத்தர்கள மற்றும் பொது மக்கள் மத்தியில் பாலியல் இலஞ்சம் சம்பந்தப்பட்ட களங்கம் பற்றிய மனநிலையை மாற்றுவது நோக்கி செயலூக்கத்துடன் பணியாற்றல்.

8.1.16. பாலியல் இலஞ்ச சம்பவத்தில் தமது சக ஊழியர்கள் சிலரின் உடந்தை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல். அத்தகைய பயிற்சியானது, பொலிஸ் மூலமாக பாலியல் இலஞ்ச நிகழ்வினை தடுப்பதனை இலக்கு வைத்ததாகவும் மற்றும் பாலியல் இலஞ்சத்திற்கு ஸ்தாபிப்பதையும் இலக்காகக் கொள்ளுதல் வேண்டும்.

8.1.17. பல்கலைக்கழக மட்டம் போன்ற உயர் கல்வி மட்டத்தில் பங்குதாரர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு பயிற்சியளித்தலை இலக்கு வைத்துத் தேவைக்கேற்ற வகையில் உருவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை வழங்கல். மனித உரிமைகள் மீறலாக, குற்றவியல் தவறாக மற்றும் ஊழலின் ஒரு வெளிப்படுத்தலாக பாலியல் இலஞ்சத்தைக் கவனத்தில் கொள்வதற்கு அக்கல்வி நிகழ்ச்சி வடிவமைக்கப்படல் வேண்டும்.

## சிவில் சமூகங்களுக்கான பரிந்துரைகள்

8.1.18. பாலியல் இலஞ்சத்தை தடை செய்வதற்கு அரசின் பொறுப்பைப் பூர்த்தி செய்தலை பரிசீலிப்பதற்கு அளவுசார் மற்றும் பண்புசார் கற்கை மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

8.1.19. பாலியல் இலஞ்சத்தை தடைசெய்தலில் தற்போதைய சட்ட விதிமுறைகள் மற்றும் பரிகாரங்களின் பயனுறுதித்தன்மையைக் கண்காணித்தல்.

8.1.20. பாலியல் இலஞ்சத்தின் நிகழ்தல் மற்றும் அதன் பாதிப்பின் தீவிரம் குறித்து பொது மக்கள் மத்தியில் சிவில் சமூக ஸ்தாபனங்கள் செயலூக்கத்துடனான விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

8.1.21. பாலியல் இலஞ்சத்திற்கான பரிகாரங்களை நாடுவதற்காக கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆதரவளித்தல்.

8.1.22. பாலியல் இலஞ்சத்தில் பாதிக்கப்பட்டது தொடர்பில் தமது அனுபவங்கள் பற்றி பகிரங்கமாக பேசுவதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் வலுவூட்டுதல். இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்கள் மேல் திணிக்கப்பட்ட களங்கத்தைக் குறைக்கும்.

அவ்வாறான பொது ஈடுபாடு நீதியை நாடுவதற்கு அவர்களை ஊக்குவிக்கலாம்.

## தனியார் துறை, தொழில்சார் அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

8.1.23. பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் தடை செய்வதற்கும் மற்றும் ஒரு வலுவான மற்றும் நியாயமான முறைப்பாடுகள் பொறியமைப்பினை வழங்குவதற்கும் தொழில்சார் நடத்தைக் கோவைவயை மீளாய்வு செய்தல் மற்றும் மறுசீரமைத்தல்.

8.1.24. பாலியல் இலஞ்ச நிகழ்வை கண்காணிப்பதற்கு சிவில் சமூக முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

8.1.25.பாலியல் இலஞ்சத்தை வெளிப்படையான வகையில் குற்றமாக்குவதற்கு சட்டச் சீர்திருத்தங்களுக்கான ஆதரவு முயற்சிகளுக்கு உதவுதல் மற்றும் அனுசரணையளித்தல்.

8.1.26.பாலியல் இலஞ்சம் தொடர்பான சம்பவங்களில் தங்களது சக ஊழியர்கள் மற்றும் நீதித் துறையில் உள்ள சில ஊழியர்கள் உடந்தையாக இருப்பது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சட்டத்தரணிகளுக்கு பயிற்சியளித்தல். இத்தகைய பயிற்சியானது, இலஞ்ச ஒழிப்புச் சட்டம், பொது சட்டப் பரிகாரங்கள் (அடிப்படை உரிமைகள் மற்றும் எழுத்தாணைகள்) மற்றும் தனியார் சட்டப் பரிகாரங்கள் உட்பட பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான சட்டப்பூர்வமான பரிகாரங்களைப் பெறுவதற்கு தற்போதைய சட்டங்களைப் பயன்படுத்துவதற்கும், கவனத்தில் கொள்வதற்கும் சட்டத்தரணிகளை தயார்ப்படுத்தல் வேண்டும்.

## சர்வதேச அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

**சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்**

8.1.27. பாலியல் இலஞ்சம் தொடர்பான கற்கைக்கு ஒரு சூழ்நிலைப் பிரத்தியேக அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளல் அல்லது தொடர்ந்து பிரயோகித்தல் (விடயத்திற்கு ஏற்றவாறு).

8.1.28. பாலியல் இலஞ்சத்தின் நிகழ்வு மற்றும் பரிகாரங்களின் பயனுறுதித்தன்மை உட்பட பாலியல் இலஞ்சத்தின் நீண்ட கால ஆய்விற்காக அனுமதிக்கும் உதவித் தொகை மற்றும் செயல்திட்ட சுழற்சி வட்டங்களை வடிவமைத்தல்.

8.1.29. பாலியல் இலஞ்சம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தல் அல்லது ஆராய்ச்சி என்பன வேறுபட்ட மட்டங்களில், வேறுபட்ட செயற்பாட்டாளர்களுடன் கூட்டிணைவான செயலாற்றுதலுடன் நடத்தப்படுகின்றதை உறுதி செய்தல். பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை என்பன மதிக்கப்படுவதுடன், அத்தகைய பணிகளில் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

**சர்வதேச நிறுவனங்கள்**

8.1.30. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுடன் கலந்தாலோசித்தல் தொடர்பான விசேட வலியுறுத்தலுடன் பாலியல் இலஞ்சத்தின் நிகழ்வு, தடைசெய்தல் மற்றும் பரிகாரம் தொடர்பில் அறிவை விருத்தி செய்வதில் அனைத்து பங்குதாரர்களையும் கலந்தாலோசித்தல்.

8.1.31. பாலியல் இலஞ்சத்தை கையாள்வதற்கான உலகளாவிய விதிமுறைகள், கோட்பாடுகள் மற்றும் தரநியமங்களை உருவாக்குவதுடன் அவை உள்ளூர் உரிமைத்துவம் உட்பட, உள்ளூர் சூழ்நிலைகளுக்கு மாற்றியமைக்கப்பட முடியுமானவையாகும்.

# 8.2. புலன்விசாரணை மற்றும் வழக்கு தொடுத்தல்

## அரசுக்கான பரிந்துரைகள்

8.2.1. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைகுழுச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் ஆணைகுழுச் சட்டம் என்பன பாலியல் இலஞ்ச முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அல்லது ஆராய்வதற்கு இரண்டு ஆணைக்குழுக்களும் அதிகாரம் பெற்றிருக்கும் வகையில், இவற்றின் சட்டக் கட்டமைப்பு விதிமுறைகள் திருத்தப்படல் வேண்டுமா என்பதனை அடையாளங் காண்பதற்கு மீளாய்வு செய்தல்.

8.2.2. 2015ஆம் ஆண்டின் குற்றத்தில்

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் உதவியை முழுமையாக நடைமுறைப்படுத்தல்.

8.2.3. குறிப்பாக குற்றங்கள் மற்றும் குற்றங்களின் முறைப்பாடுகளைப் பகிரங்கமாக தெரிவிப்பதில், பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பினை வழங்குவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு சட்டத்தை திருத்தல்.

8.2.4. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் சார்பாக நெறிமுறை அக்கறை உள்ளவர்கள் முறைப்பாடுகள் செய்யக் கூடியவாறு பாலியல் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு நடைமுறைகளை மீளாய்வு செய்தல்.

#### நிர்வாக அமைப்புகள்

8.2.5. பாலியல் இலஞ்சம் பற்றிய முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு சுயாதீன மற்றும் பயனுறுதியான முறைப்பாட்டுப் பொறிமுறைகளை உருவாக்கல் மற்றும் பேணல்.

#### சுயாதீன அரச நிறுவனங்கள்

8.2.6. முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு இரகசிய அவசர தொலைபேசி அழைப்பு சேவை ஒன்றை உருவாக்கல்.

8.2.7. பாலியல் இலஞ்ச குற்றமிழைப்பவர்களை இனங் காண்பதற்கு இரகசியக் கண்காணிப்பவர்களை நியமித்தல்.

8.2.8. பாலியல் இலஞ்சம் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் கெமராவில் (camera) நடத்தப்படல் வேண்டும்.

## சிவில் சமூகங்களுக்கான பரிந்துரைகள்

8.2.9. பாலியல் இலஞ்சம் பற்றிய முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு கூட்டு நடவடிக்கையை பெண்கள் மேற்கொள்ள வேண்டும்.

8.2.10. பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான சிறுபான்மையினர் பொதுவாக பாரபட்சத்தை அனுபவிப்பதினால், பாலியல் இலஞ்சத்திற்கான பரிகாரங்களை நாடுவதற்கும், எதிர்காலத்தில் அது நிகழ்வதனை தடுப்பதற்கும் அவர்கள் கூட்டாக ஒழுங்கு செய்து, அணி திரட்டல் வேண்டும்.

## தனியார் துறை, தொழில்சார் அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

8.2.11. பாலியல் இலஞ்சம் தொடர்பாக முற்றிலும் சகித்துக்கொள்ள முடியாத கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் அது தொழில்சார் நடத்தைத் தவறு எனக் கருதப்படுதலும் வேண்டும்.

8.2.12. நிறுவன மட்டத்தில் ஒரு பாலியல் இலஞ்சம் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல்.

8.2.13. முறைப்பாடு செய்பவர்கள் எதிர்கொள்ளக் கூடிய அபாயங்களைத் தடுப்பதற்கும் மற்றும் தொழில்சார் சூழ்நிலைகளில் அவர்களது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப் படுத்தல்.

## சர்வதேச அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

#### சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள்

8.2.14. பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களுக்கான ஒருமைப்பாட்டிற்கான வலையமைப்புக்களை உருவாக்கல் மற்றும் பேணுதல்.

8.2.15. சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களினால் பாலியல் இலஞ்சத்திற்கான பொறுப்புக்கூறலை நாடுவதில் நாடு கடந்த கற்றல் மற்றும் அனுபவப் பகிர்வுக்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

#### சர்வதேச அரச நிறுவனங்கள்

8.2.16. சட்டச் சீர்திருத்தம், கொள்கை வகுத்தல் மற்றும் பாலியல் இலஞ்சத்தை புலனாய்வு செய்தல் மற்றும் வழக்கு தொடுத்தலுக்கான நிகழ்ச்சிகள் உட்பட அரச நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் மீள்பரிசீலித்தல்.

8.2.17. பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பில் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துவதற்கு அரசிற்கு பரிந்துரைகளை முன்னெடுத்தல். பாலியல் இலஞ்சத்தின் பயனுறுதியான புலனாய்வு மற்றும் வழக்குத் தொடுத்தலுக்கான ஆதரவினை (நிதிசார், பயிற்சி போன்றவை) வழங்குதல்.

# 8.3. நிவாரணம்

## அரசுக்கான பரிந்துரைகள்

**அரசினால் நியமிக்கப்பட்ட அமைப்புகள்**

8.3.1. ஒரு கடும் அபராதம் உட்பட, பாலியல் இலஞ்சத்திற்கான தண்டனையை உறுதி செய்யும் வகையில் இலஞ்சச் சட்டத்தை சீர்திருத்தல்.

8.3.2. பாலியல் இலஞ்ச நிகழ்வின் தீவிரத் தன்மைக்கு உரியதாக ஏற்றவாறான ஒரு காலப்பகுதிக்கு உரிய செயன்முறைகளைப் பின்பற்றி ஒரு சட்ட நீதிமன்றத்தில் பாலியல் இலஞ்சத்தில் ஈடுபட்டதாக குற்றம் காணப்பட்ட அரசச் சேவையைச் சேர்ந்த குற்றமிழைத்தவர்களுக்கான வேலைவாய்ப்பிலிருந்து ஒரு தடையை நடைமுறைப்படுத்தல்.

8.3.3. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவருக்கு பயனுறுதியான இழப்பீட்டினை வழங்கல்.

**நிர்வாக விடயங்கள்**

8.3.4. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு பயனுறுதியான நிதிசார் இழப்பீடுகளை வழங்குதல்.

**சுயாதீன விடயங்கங்கள்**

8.3.5. பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான உளவளத்துணை அளித்தல்.
பாலியல் இலஞ்சத்திற்கான புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுத்தல் பெறுபேறுகள் தொடர்பாக உள்ளூர் தரவுகளைப் பேணல்.

## சிவில் சமூகத்திற்கான பரிந்துரைகள்

8.3.6. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மத்தியில் ஒருமைப்பாடு மற்றும் ஆதரவு வலையமைப்பை வளர்த்தல்.

## தனியார் துறை, தொழில்சார் அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

8.3.7. பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு நிதிகளுக்கு பங்களித்தல்.

8.3.8. பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான பயனுறுதியான பரிகாரங்களை உறுதி செய்வதற்கு சட்டச் சீர்திருத்தத்திற்கு பரிந்துரை செய்தல்.

## சர்வதேச அமைப்புகளுக்கான பரிந்துரைகள்

**சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்கள்**

8.3.9. பாலியல் இலஞ்ச நிகழ்வு தொடர்பாக அதன் புலனாய்வு, வழக்கு தொடுத்தல் மற்றும் பரிகாரங்கள் தொடர்பில் உலக மட்டத்தில் தரவினை பேணல்.

8.3.10. பாலியல் இலஞ்சத்திற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள பரிகாரங்களின் தாக்கம் மற்றும் விளைவுகளை ஆய்வு செய்வதற்கு பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் குற்றமிழைப்பவர்களை கலந்தாய்வு செய்தல்.

**சர்வதேச ஸ்தாபனங்கள்**

8.3.11. பாலியல் இலஞ்சத்தின் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான பரிகாரங்களின் நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல்.

8.3.12. பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்தவர்களுக்கான பரிகாரங்கள் மற்றும் குற்றமிழைத்தவர்களுக்கான புனர்வாழ்வு என்பவற்றை அளிப்பதற்கு வழிகாட்டிகள் மற்றும் பரிந்துரைகளை உருவாக்குதல்.

# பின்னிணைப்புகள்

## பின்னிணைப்பு I: கற்கைக்காகப் பயன்படுத்திய கேள்விக்கொத்து

## பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணலுக்கான வழிகாட்டி

**A. பொதுவான குறிப்புகள்**

- இந்நேர்காணலின் நோக்கமானது பெண்கள் மற்றும் மாற்றுப் பாலின சமூகத்தில் இருக்கும் தனிநபர்களின் சுகாதாரம், நீதித்துறைகளுடனான அவர்களின் இடைத்தொடர்புகளின் போதான பாலியல் இலஞ்ச சம்பவங்களை அறிவதாகக் காணப்படுகிறது.
- நேர்காணப்படுபவரின் அனுபவம், கருத்துகள் மற்றும் நேர்காணப்படுபவர் ஏன் அவ்வாறான கருத்துகளைக் கொண்டிருக்கின்றார் என்பதனை முடிந்தவரை துல்லியமாகப் பதிவுசெய்வது உங்களது பொறுப்பாகும்.
- நேர்காணப்படுபவர் கூறுவது இக்கற்கையுடன் நேரடியாகத் தொடர்பு இல்லாமல் காணப்பட்டாலும் கூட, அவரைச் சுதந்திரமாகத் தனது கருத்துக்களைக் கதைப்பதற்கு அனுமதிக்கவும்.
- இக்கற்கையின் விடயப்பரப்பு கூருணர்வுமிக்கது என்பதனால், நேரடியாகக் கேள்விகளைக் கேட்க முன்னர் பங்கேற்பாளர் சௌகரியமாகும் வரை காத்திருங்கள்.
- பங்கேற்பாளர் பதற்றம் இல்லாமல் சௌகரியமாக இருப்பதை நீங்கள் உணர்ந்ததன் பின்னர், பாலியல் இலஞ்சம் தொடர்பான அவரின் அனுபவம் பற்றிக் கேள்விகளை எழுப்புங்கள்.
- நேர்காணலின்போது பங்கேற்பாளர் தமது அனுபவம் தொடர்பான எந்தவொரு அசௌகரியம்/அதிர்ச்சியின் காரணமாகக் கலந்துரையாடலை இடையே நிறுத்தினால், அவரை/அவளை தொடருமாறு கட்டாயப்படுத்த வேண்டாம்.
- இக்கற்கை தொடர்பாகப் பங்கேற்பாளர் குறிப்பிடும் மேலதிக தகவல்களை அறிந்துக்கொள்ள, இவ்வழிகாட்டலிலுள்ள கேள்விக்கு அப்பால் கேள்விகளைக் கேட்கத் தயங்க வேண்டாம்.
- பங்கேற்பாளர் இக்கற்கை சம்பந்தமாக மேலும் விரிவாகக் கூறக்கூடிய விபரங்களைக் குறிப்பிட்டால் அவற்றை மேலதிகமாக ஆராய்ந்து பதிவு செய்து கொள்ளவும்.
- நேர்காணல் பற்றிய உங்களின் சொந்தக் குறிப்புகளையும் அவதானிப்புகளையும் மேற்கொள்ள நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு நேர்காணலுக்கும் உங்களது சொந்தக் கண்ணோட்டங்களை உள்ளடக்கவும்.

**B. நேர்காணலை ஆரம்பித்து வைத்தல்**

- உங்களைப் பற்றியும் சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் பற்றியும் அறிமுகப்படுத்தவும்.
- அறிந்தவற்றுடன் ஆரம்பிக்குக
- உங்களைப் பற்றிய அறிமுகத்துடன் அல்லது
- குறிப்பிட்ட இட அமைவின் விசேட தன்மை போன்ற பொதுவான விருப்பங்கள் பற்றிக் கதையுங்கள்.

**C. இணக்கம் தெரிவித்தல்.**

- நேர்காணலின் நோக்கம் நேர்காணலின்போது உள்ளடக்கப்படவுள்ள பொதுவான விடயங்கள், பங்குபற்றுனர்களின் உரிமைகள் பற்றித் தெளிவுபடுத்துக - கேள்விகளைக் கேட்டல், பங்குபற்றுவதற்கு மறுத்தல், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நேர்காணலில் இருந்து விலகுதல் என்பன அவர்களின் உரிமைகளாகும். பங்குபற்றுனர்கள் கட்டாயமாக இரகசியமாகவும் அனாமதேயமாகவும் பாதுகாக்கப்படுவார்கள்.
- இணக்கம் தெரிவித்ததை எழுத்துப்பூர்வமாகப் பெற்றுக் கொள்ளவும். அத்தோடு தேவைப்பட்டால் ஓர் மேலதிக கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லவும். நீங்கள் அடுத்த கட்டத்தைத் தொடரும் முன்னர், பங்கேற்பாளர் உங்களுடன் பதற்றம் இல்லாமல் சௌகரியமாக உணர நேரத்தை வழங்கவும்.

**D. முக்கிய அம்சங்கள்**

- இப்பகுதியில், நேர்காணப்படுபவர் தனது கதையைப் பற்றிச் சொல்வதற்கு நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டும். நேர்காணப்படுபவரின் பொது வாழ்க்கை அனுபவம் பற்றி நீங்கள் கேள்விகளைக் கேட்க முடியும். மேலும் அவரின் குடும்பம், அவர் வளர்ந்த இடம் போன்ற பலவற்றையும் கேட்க முடியும். அதனால் உங்களால் நேர்காணப்படுபவரைப் பற்றி அறிந்து கொள்ள முடிவதோடு அது நேர்காணப்படுபவர் உங்களோடு சரளமாக சௌகரியமாகக் கதைக்கவும் வழிவகுக்கும்.
- பின்வரும் கேள்விகளை உள்ளடக்க முடியும் - உங்களைப் பற்றி எனக்குக் கூற முடியுமா? யாராவது உங்களை அறிமுகப்படுத்தும் படி கேட்டால் நீங்கள் என்ன கூறுவீர்கள்?
- கீழ்க்காணும் (கட்டாய) கேள்விகளை நோக்கிக் கலந்துரையாடலை வழிநடாத்துக..

**1. நேர்காணப்படுபவரின் சுயவிபரம்.**

1. பெயர்
2. தொடர்பு இல (இணக்கம், பின்னூட்டலைப் பெறுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படும்)
3. வயது
4. நிரந்தர வதிவிடம் (மாவட்டம்/கிராமம்/கிராம சேவகர் பிரிவு)

**2. பாலியல் இலஞ்சத்துடன் தொடர்புபட்ட சம்பவம்.**

இது நேர்காணலின் மிக முக்கிய அம்சமாகும். பாலியல் இலஞ்சத்துடன் தொடர்புபட்ட சம்பவத்தின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தயவுசெய்து கீழ்வரும் வடிவத்தைப் பின்பற்றுக. தயவுசெய்து சம்பவத்துடன் தொடர்புபட்ட கீழ்வரும் தகவல்களை நிறுவித் தெளிவுபடுத்துக.

2.1 எச்சூழ்நிலையின் கீழ் பாலியல் இலஞ்சம் (வெளிப்படையாக/இரகசியமாக காணப்பட்டிருக்கலாம்) வேண்டப்பட்டது/ கோரப்பட்டது?

- சம்பவம் இடம்பெற்ற துறை அல்லது அரச நிறுவனம்
- தொடர்புபட்ட உத்தியோகத்தர்களின் பதவி (அறிந்திருந்தால்)
- திகதி
- நேரம் (அது நாட்கணக்கில், மாதக்கணக்கில் இருந்திருக்கலாம் எனவே சம்பவத்தின் காலப்பகுதியைக் குறிப்பிடுக)
- இடம்

2.2 நடந்தது ஒரு சம்பவமா அல்லது சம்பவங்களின் தொடரா?

- பாலியல் இலஞ்சம் சம்பந்தமான செயல்களில் முன்னரோ அல்லது தற்போதோ நீங்கள் எவ்வளவு காலமாக உள்ளாகிக் கொண்டிருக்கின்றீர்கள்?

2.3 என்ன வகையான/என்ன முறையான பாலியல் இலஞ்சத்தை அவர்கள் கோரினார்கள்? (விபரிக்குக)

உதாரணம்: கடப்பாட்டுக்கு உட்பட்ட அரசாங்க சேவைக்கு/உதவிக்கு வேண்டுகோள் விடுக்கப்படுவதைத் தொடர்ந்து கீழ்க்குறித்த செயல்கள்

- மது போதையில் ஒரு பெண் தனியாக வசிக்கும் வீட்டிற்குச் சென்று பாலியல் இச்சைகளைத் திருப்திப்படுத்தும்படி கோருதல்
- பாலியல் தொந்தரவு மற்றும் முறையற்ற நடத்தை.
- ஓர் பாலியல் உறவை ஆரம்பிக்கக் கோருதல்.
- கணவனை இழந்த பெண்ணொருவரைக் குற்றம் புரிபவரோடு தனியாக மாலை வேளையில்/ அலுவலகத்திற்கு வெளியே சந்திக்குமாறு கேட்டல்/அவருடன் ஒரு சுற்றுலா செல்லுமாறு கேட்டல்.
- குறிப்புணர்த்தும் கருத்துகள், மறைமுக சிற்றின்ப இகழ்ச்சி மட்டுமல்லாமல் பாலியல் ஊடாட்டத்திற்கு உள்ளாதல். தீர ஆராயும் கேள்விகள் கேட்கவும்.
- பாலியல் இலஞ்சத்தை மறுக்கும் போது அல்லது தவிர்க்கும் போது, வாய்மூல மிரட்டல்கள், தாமதிக்கும் சூழ்ச்சிகளைச் செய்தல்.

2.4 இச்சம்பவம் தொடர்பில் நீங்கள் என்ன விளைவுகளை அடையாளம் கண்டீர்கள்?

நெருக்கடியான நிகழ்வுகளுக்கு முன்னரும் பின்னருமான தொடர்புடைய சம்பவங்கள். உதாரணமாக.. தூரப் பிரதேசத்திற்குப் போக

வேண்டியிருந்தது, சமூகக் களங்கத்திற்கு உட்பட வேண்டிருந்தது, பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்பான அச்சம், ஆட்களுக்குத் தெரிந்துவிடும் என்ற அச்சம், பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர் மற்றும் ஏனைய விளைவுகள்.

2.5 உங்களிடம் பாலியல் தேவைகளை நிவர்த்தி செய்யக் கோரிய அந்த நபர், அதனை ஏனைய பெண்களிடமும் கோரினார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவ்வாறு தெரிந்தால் தயவுசெய்து விபரிக்குக.

**உளநலம், சமூகக் களங்கம், ஆதரவளிக்கும் முறைமை**

2.6 துஷ்பிரயோகம்/வன்முறை இடம்பெற்ற வேளையிலும் அதன் பின்னரும் உங்களின் மன நிலைகள்/உணர்ச்சி நிலைகள் என்னவாகக் காணப்பட்டது?

2.7 நீங்கள் உள ரீதியில்/உணர்ச்சி ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தால், யாரிடம் உதவியை நாடினீர்கள்? /யாரிடம் உதவிக்குச் சென்றீர்கள்?

2.8 நீங்கள் பாலியல் இலஞ்சத்தை வழங்கிக் கொண்டிருந்தபோது/வழங்கக் கட்டாயப்படுத்தப்பட்டபோது எவ்வாறு உணர்ந்தீர்கள்/உங்களின் மனநிலை என்னவாகக் காணப்பட்டது? சம்பவம் நடந்தபோது உங்களின் உடனடிப் பதில் என்னவாக இருந்தது?

2.9 இச்சம்பவத்தின் காரணமாக நீங்கள் ஏதாவது களங்கத்தை அனுபவித்துள்ளீர்களா? என்ன வகையான களங்கம்? (உள்ளார்ந்த/வெளியாக) சுய களங்கமா? சமூக களங்கமா?

உதாரணம் :

சமூகத்தினுள் நன்மதிப்பையும் மரியாதையும் இழக்கும் அச்சம் மற்றும் பிழையான நபராக மனதால் உணரும் அச்சம்.

பாதிப்பிலிருந்து தப்பிப் பிழைத்திருப்பவர்கள் தங்களை (பெறுமதியற்றவர்களாக) உணர்தல் அத்துடன் அவர்களது அபிலாஷைகள் எதிர்மறையான தாக்கத்துக்கு உள்ளாதல்.

2.10 நீங்கள் அதனை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்? (எல்லாவற்றையும் நீங்கள் தனியாகச் செய்தீர்கள் என்றால்)

2.11 நீங்கள் ஏதேனும் மருத்துவ உதவியை நாடினீர்களா? அவ்வாறு இருந்தால், எங்கிருந்து? எவ்வாறு? உதவியை நாடினீர்கள்? (வைத்தியசாலை, தனியார் வைத்தியர், மருந்தகம், குடும்ப வைத்தியர்). இச்சேவையைப் பெற்றவேளை உங்களுக்கு ஏதேனும் சவால்கள் இருந்ததா?

2.12 இக்காலப்பகுதியில் உங்களுக்கு உதவிய கட்டமைப்புகள் என்ன? உங்களுக்கு உதவிய நபர்கள் யார்? (நண்பர்கள், உறவினர்கள், கிராம அலுவலர், உளவள ஆலோசகர்கள் (Counsellors), உளவள ஆலோசக உதவியாளர்கள், குடும்ப நல உத்தியோகத்தர் (Family Counsellors))

2.13 இச்சம்பவத்தினால் நீங்கள் பாதிக்கப்பட்டபோது, உங்களுக்கு உளவள ஆலோசனை தேவைப்பட்டதா? தேவைப்பட்டிருந்தால் எக்கட்டமைப்பிலிருந்து/ எப்பொறிமுறையில் இருந்து அதனை நீங்கள் எதிர்பார்த்தீர்கள்?

**3. இணக்கமில்லாத பாலியல் செயல்கள்**

3.1 பாலியல் செயற்பாடுகள் பற்றிய உங்களின் புரிதல் என்ன?

3.2 சம்மதம் பற்றிய உங்களின் புரிதல் என்ன? சில பாலியல் செயற்பாடுகளுக்கு சம்மதம் கொடுப்பதற்கு/கொடுக்காமல் இருப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது என நீங்கள் நினைக்கிறீர்களா?

**4. தீர்வு**

4.1 இவ்வாறான விசேட சந்தர்ப்பத்தில் நீங்கள் யாருக்காவது முறைப்பாடொன்றைச் செய்தீர்களா?

4.2 ஆம் என்றால், யாரிடம், எப்போது முறைப்பாடு செய்தீர்கள்? சம்பவத்திதின்/சம்பவங்களின் எவ்வளவு காலத்திற்குப் பின்னர் நீங்கள் முறைப்பாடு செய்தீர்கள்?

4.3 அங்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா? அல்லது எடுக்கப்படவில்லையா? ஆம் என்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இல்லை என்றால், ஏன் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நீங்கள் நினைக்கிறீர்கள்?

4.4 நீங்கள் முறைப்பாடு செய்யவில்லையா? இல்லை என்றால், அதற்கான காரணம் என்னவாக இருந்தது?

4.5 மேலே குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏதாவது வேறு சேவையை நீங்கள் நாடினீர்களா? அவ்வாறு நாடினீர்கள் என்றால் அச்சேவை என்ன?

4.8 முறைப்பாடொன்றை மேற்கொள்வதற்கு மொழி ஒரு தடையாகக் காணப்பட்டதா? உங்களுக்கு பரீட்சியமான மொழியில் உங்களால் முறைப்பாட்டை மேற்கொள்ள முடிந்ததா?

4.9 இச்சம்பவம் தொடர்பாக நீங்கள் பொலிஸ் நிலையம்/வைத்தியசாலை சென்றபோது, மொழி ஒரு தடையாகக் காணப்பட்டதா?

**5. சட்டம்**

5.1 இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடைசெய்யும் சட்டம் பற்றிய உங்களின் புரிதல் என்ன?

5.2 சட்டத்தினால் பாலியல் லஞ்சம் கட்டாயம் தடை செய்யப்பட வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

5.3. குறித்த பெண் அனுபவித்த விடயம் சட்டத்தினால் தடைசெய்யப்பட வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏன் தடைசெய்யப்பட வேண்டும்?

நேர்காணலுக்கு முகங்கொடுப்பவர் அனுபவித்த நடத்துமுறை/வன்முறை, இலங்கையில் ஏதாவது சட்டங்களை மீறி இருக்கலாம் என அவள்/அவர் நினைக்கிறாரா? அவ்வாறு நினைத்தால், என்ன சட்டம்/சட்டங்கள் மீறப்பட்டுள்ளது?

- அவ்வாறு இல்லை என்றால், பாலியல் பயன்பாட்டை/இலஞ்சத்தை முடிவுக்குக் கொண்டுவர எவ்வகையான சட்டங்களை நாம் அறிமுகப்படுத்த/அமுல்படுத்த வேண்டியுள்ளது?
- நீங்கள் எதிர்கொள்ள நேரிட்ட பாலியல் பயன்பாடு/இலஞ்சம், இலங்கையின் இலஞ்ச சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா?
- உங்களின் கருத்தின்படி, கொள்கை அளவில் அரசு என்ன செய்ய வேண்டியுள்ளது
- என்ன வகையான பொறிமுறை/கட்டமைப்புத் தாபிக்கப்பட வேண்டும்? அல்லது அது ஏலவே உள்ளது என நினைக்கின்றீர்களா?

**6. நடவடிக்கை**

6.1 பாலியல் இலஞ்சத்தை முடிவுக்குக் கொண்டுவர நம்மால் என்ன செய்ய முடியும்?

6.2 இத்துடன் தொடர்புடைய இலஞ்ச ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு போன்ற அதிகாரபீடங்களுடன் உங்களுக்கு நேர்ந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் விரும்புவீர்களா? எடுத்துக்காட்டாக இது குறித்து ஒரு சத்தியக் கடதாசியை அல்லது முறைப்பாட்டை முன்வைப்பதன் மூலம் அவ்வாறு செய்ய விரும்புவீர்களா?

6.3 இவ்வாறான ஒரு வழி பயனற்றது என நீங்கள் நினைத்தால் வேறு என்ன முறைகள் மிக பயனுள்ளதாக இருக்கும்?

6.4 பாலியல் பயன்பாடு/பாலியல் இலஞ்சம் தொடர்பிலான மக்களின் மனப்பாங்கை நாம் எவ்வாறு மாற்றலாம் என நீங்கள் நினைக்கின்றீர்கள்

6.5 இக்கற்கையின் தேடல்களை (பாதிக்கப்பட்டவர்களின் தகவல்களை வெளிப்படுத்தாது) இச்சமூகத்தில் இருக்கும் ஏனைய பெண்களுடன் பகிர்வது அவசியமானது அல்லது முக்கியமானது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

6.6 அவ்வாறு நினைத்தால், இச்சமூகத்தில் உள்ள பெண்களுக்கு இத்தேடல்களையும், தகவல்களையும் கொண்டு செல்வதற்கு எது சிறந்த வழியாகக் காணப்படும்?

உதாரணமாக, நாடகம், திரைப்படம், கலந்துரையாடல், விளக்கக் காட்சி முன்வைப்பு (Power Point presentation), அவையரங்கம், சமூகக் கூட்டங்கள், ஈமச்சடங்கு கூட்டங்கள், பெண் வலையமைப்புக் கூட்டங்கள் மற்றும் ஏனைய பலவற்றின் ஊடாகக் கொண்டு செல்லலாமா?

**7. தொற்று நோய்**

தொற்று நோய் ஒரு செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அல்லது சம்பவத்திற்குச் சிக்கலை ஏற்படுத்தும் காரணியாக அல்லது வேறு சம்பந்தப்பட்ட வழியில் செல்வாக்குச் செலுத்தியதா?

**8. நேர்காணலில் இருந்து விலகுதல்**

நேர்காணலில் அனைத்து முக்கிய அம்சங்களும்

பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நேர்காணல் செய்யப்பட்டவரிடமிருந்து நேர்காணல் தொடர்பான அவர்களது கருத்துகளை மற்றும் பின்னூட்டலைப் பெறுவதை உறுதிப்படுத்துக. மேலும் அவரின் எவ்வகையான கேள்விகளையும் தெளிவுபடுத்துக.

- நேர்காணல் பற்றி நீங்கள் என்ன நினைத்தீர்கள்?
- உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கருத்துகள் இருக்கின்றதா?
- நீங்கள் எதிர்கொள்ள நேரிட்ட அத்துமீறல்/ குற்றம் தொடர்பாக நாம் உங்களுக்கு உதவி செய்யக்கூடிய வழிமுறைகள் ஏதேனும் உள்ளதா?
- சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினுடைய ஆற்றுப்படுத்தல் ஆவணமொன்றின் பிரதியொன்றை வழங்குக.
- நேர்காணல் பற்றிய உங்களின் சொந்தக் குறிப்புகளையும் அவதானிப்புகளையும் மேற்கொள்ள ஒவ்வொரு நேர்காணலிற்கும் உங்களது சொந்தக் கண்ணோட்டங்களை உள்ளடக்கவும்.

# பின்னிணைப்பு II: கற்கைக்காக அணுகிய நிறுவனங்களின் பட்டியல்

1. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC)

2. சிறுவர்கள் மற்றும் பெண்களின் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான இலங்கை பொலிஸ் பணியகம்

3. குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபை

# பின்னிணைப்பு III: நேர்காணல் மற்றும் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களின் மேலோட்டப் பார்வை

| | மத்திய மாகாணம் | மேல் மாகாணம் | ஊவா மாகாணம் | தென் மாகாணம் | சப்ரகமுவ மாகாணம் |
|---|---|---|---|---|---|
| நீண்ட நேர்காணல்கள் | 7 | 4 | | 5 | 3 |
| இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் | 1 | 1 | 1 | 1 | 1 |

நீண்ட நேர்காணல்கள்

| இல | புனைப்பெயர் | சாராம்சக் குறிப்பு | சார்த்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர் | வழங்கப்பட்ட உதவி/ தூண்டிய சம்பவம் |
|---|---|---|---|---|
| CS 01 கண்டி, மத்திய மாகாணம் | ரமணி | 40-50 வயதுப் பெண், கிராமம், கணவனை இழந்த பெண், தாய் | ஆண் சட்டத்தரணி | கூட்டுக் குடும்பத்தில் காணி தகராறு காரணமாக சட்ட ஆலோசனை நாடியமை |
| CS 02 ஹட்டன், மத்திய மாகாணம் | சீதா | 40-50 வயதான பெண், கிராமம், தாய், சுகவீனமுற்ற கணவர் | ஆண் தாதி | கணவர் வைத்திய பராமரிப்பு பெற்ற வேளையில் அவருக்கு மேலதிக பராமரிப்பு வழங்கியமை |
| CS 03 மாத்தளை, மத்திய மாகாணம் | லலிதா | [வயது குறிப்பிடப்படவில்லை] திருமணமானவர், தாய், கணவர் வெளிநாட்டில் வேலை செய்யும் போது சம்பவம் நிகழ்ந்தது | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | மகள் வீட்டுக்கு திரும்பி வராமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளச் சென்ற வேளை |
| CS 04 மாத்தளை, மத்திய மாகாணம் | ராணி | 20-30 வயது, பெண், இல்லத்தரசி | ஆண் வைத்தியசாலை உதவியாளர் | வைத்தியசாலையில் தாய்க்காக சிகிச்சை ஆலாசனை பெறுவதற்காக இலக்கம் ஒன்றை பெறுதல் |
| CS 05 கம்பஹா, மத்திய மாகாணம் | மனோரி | 20-30 வயது, பெண், இல்லத்தரசி | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | விளக்குமறியலில் உள்ள கணவருக்கு பிணை பெற்றுக் கொள்ளுதல் |
| CS 06 கண்டி, மத்திய மாகாணம் | மாலனி | 30-34, வயது, பெண், இல்லத்தரசி | ஆண் வைத்தியசாலை உதவியாளர் | வைத்தியசாலையில் தாயின் மருத்துவ சிகிச்சை ஆலோசனைக்கு முன்கூட்டிய அனுமதி பெறுதல் |

| இல | புனைப்பெயர் | சாராம்சக் குறிப்பு | சார்த்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர் | வழங்கப்பட்ட உதவி/ தூண்டிய சம்பவம் |
|---|---|---|---|---|
| CS 07 மாத்தளை, மத்திய மாகாணம் | ஜீவா | 40-50, பெண், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | காணாமல்போன அடையாள அட்டையின் மாற்றீட்டிற்கு பொலிஸ் முறைப்பாடு செய்தல் |
| CS 08 சப்ரகமுவா மாகாணம் | ஜயனி | பெண் | ஆண் சட்டத்தரணி | காணிப் பிணக்கு தொடர்பாக சட்ட ஆலோசனை நாடியமை |
| CS 09 இரத்தினபுரி, சப்ரகமுவ மாகாணம | ரூபா | 30-40 வயது, பெண், தாய் | ஆண் சட்டத்தரணி | தடுப்புக் காவலிலிருந்து கணவனை விடுவிப்பதற்கு |
| CS 10 சப்ரகமுவா மாகாணம | பஹ்ரா | 50-40 வயது, பெண், தாய் | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | விவகாரத்து செயற்பாடுகளில் சட்ட அமுலாக்கம் |
| CS 11 ஹம்பாந்தோ-ட்டை, தென் மாகாணம் | லக்ஸ்மி | பாடசாலை மாணவி | ஆண் வைத்தியர் | மருத்துவ உதவி நாடியமை |
| CS 12 ஹம்பாந்தோ-ட்டை, தென் மாகாணம் | கயானி | பெண், தாய் | ஆண் சிறை உத்தியோகத்தர் | விளக்குமறியலில் வைக்கப்பட்ட கணவரைப் பார்ப்பதற்கான உரிமைகளை நாடியமை |
| CS 13 மாத்தறை, தென் மாகாணம் | இரோமி | விசேட தேவைகள் கொண்ட பெண் | சுகாதாரத் துறையில் ஆண் அரச உத்தியோகத்தர் | இடமாற்றத்தை தடுப்பதற்கு நாடியமை |
| CS 14 ஹம்பாந்தோ-ட்டை, தென் மாகாணம் | பிரியா | பெண், மருத்துவ மாணவி | மேற்பார்வை வைத்தியர் | பயிற்சியின் போது விடுதி வசதிகளுக்காகப் பரிந்துரை நாடியமை |
| CS 15 காலி, தென் மாகாணம் | ஜெயா | பெண், புலம்பெயர் பணியாளர் | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | புலம்பெயர் வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் குடும்ப பயன் அறிக்கைக்கான அனுமதியைப் பெறுதல் |

| இல | புனைப்பெயர் | சாராம்சக் குறிப்பு | சார்த்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர் | வழங்கப்பட்ட உதவி/ தூண்டிய சம்பவம் |
|---|---|---|---|---|
| CS 16 கொழும்பு, மேல் மாகாணம் | நுஸ்ரத் | மாற்றுப் பாலினத்தவர். பாலியல் தொழிலாளர். | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | குற்றச்சாட்டை வலியுறுத்துவதிலிருந்து தவிர்ப்பதற்கும், காவலில் இருந்து விடுவிப்பதற்கும் |
| CS 17 கம்பஹா, மேல் மாகாணம் | ஜென்னி | பெண், பாலியல் தொழிலாளர், தாய் | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | தடுப்புக் காவலிலிருந்து கணவனை விடுவிப்பதற்கு |
| CS 18 கொழும்பு, மேல் மாகாணம் | ரீட்டா | மாற்றுப் பாலினத்தவர், 20-30 வயது, பாலியல் தொழிலாளர். | ஆண் வைத்தியசாலை உதவியாளர் | சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு |
| CS 19 கொழும்பு, மேல் மாகாணம் | வத்சலா | மாற்றுப் பாலினத்தவர், 20-30 வயது | ஆண் பொலிஸ் உத்தியோகத்தர் | குற்றம் சாட்டப்படாது தவிர்ப்பதற்கு, காவலில் இருந்து விடுவிப்பதற்கு |

முக்கிய தகவலளித்த நேர்காணப்பட்டவர்கள்

| | துறை | பதவிநிலை | பால்நிலை | மட்டம் |
|---|---|---|---|---|
| KII 01 | சுகாதாரம் | மனநல மருத்துவ ஆலோசகர் | ஆண் | தேசிய |
| KII 02 | சுகாதாரம் | மருத்துவ பட்டப்பின்படிப்பு, பயிலுனர் | ஆண் | தேசிய |
| KII 03 | சுகாதாரம் | மருத்துவர் மற்றும் கல்வியியலாளர் | ஆண் | தேசிய |
| KII 04 | சுகாதாரம் | குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் | பெண் | பிராந்திய |
| KII 05 | சுகாதாரம் | ஓய்வுபெற்ற தாதி மற்றும் கல்வியியலாளர் | பெண் | பிராந்திய |
| KII 06 | சுகாதாரம் | குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் | பெண் | பிராந்திய |
| KII 07 | நீதி | பிரதான பொலிஸ் பரிசோதகர் | பெண் | தேசிய |
| KII 08 | நீதி | குற்றம் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புத் தேசிய அதிகாரசபையின் உத்தியோகத்தர் | பெண் | தேசிய |
| KII 09 | நீதி | சட்டத் தொழில்புரிபவர் | பெண் | பிராந்திய |
| KII 10 | நீதி | CIABOC உத்தியோகத்தர் | பெண் | தேசிய |
| KII 11 | நீதி | பொலிஸ் பரிசோதகர் | பெண் | பிராந்திய |
| KII 12 | நீதி | சட்டத் தொழில்புரிபவர் | பெண் | பிராந்திய |

இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள்

| FGD | பங்குபற்றுவோர்கள் எண்ணிக்கை | பால்நிலை அடிப்படையில் | இடம் | வேலைவாய்ப்பு வகை |
|---|---|---|---|---|
| 01 | 10 | பெண் | தென் மாகாணம் | பொருத்தமில்லை |
| 02 | 10 | பெண் மற்றும் மாற்றுப்பாலினத்தார் | மேல் மாகாணம் | பாலியல் தொழிலாளர் |
| 03 | 10 | பெண் | சப்ரகமுவ மாகாணம் | பொருத்தமில்லை |
| 04 | 09 | பெண் | மத்திய மாகாணம் | பொருத்தமில்லை |
| 05 | 10 | பெண் | ஊவா மாகாணம் | பொருத்தமில்லை |

# உசாத்துணைகள்


- ‘பிரதி பலன்: இலங்கையில் பாலியல் இலஞ்சத்தின் ஒரு கற்கை’ டெய்லி எ/ப்டி பத்திரிகை (ஜனவரி 24, 2020) https://www.ft.lk/Opinion-and-Issues/Quid-pro-quo-A-study-of-sexual-bribery-in-Sri-Lanka/14-694260 இணைய முகவரியில் அணுகப்பட்டது,
- ‘பாலியல் சலுகைக்கான மிரட்டல்: ஒரு புதிய பெயர், பழைய ஒரு குற்றம்’ சிலோன் இன்டிபென்டன் ஜனவரி 4, 2020 (http://www.independent.lk/sextortion-a-new-name-an-age-old-crime/ இல் அணுகப்பட்டது)
- ‘பாலியல் இலஞ்சம்: ஊழலின் மௌனிக்கப்பட்ட பக்கம்’ செப்டெம்பர் 3, 2020, டெய்லி எ/ப்டி பத்திரிகை, https://www.ft.lk/Opinion-and-Issues/Sexual-bribery-The-silenced-side-of-corruption/14-705482எனும் இணைய முகவரியில் கிடைக்கப் பெற்றது.
- ஊழலைத் தடுத்தல் மற்றும் எதிர்த்து போராடுவதல் தொடர்பான ஆபிரிக்க ஒன்றியத்தின் சாசனம் 2003
- இலங்கையில் பாலியல் இலஞ்சத்தை கவனத்தில் கொள்வதற்கு சட்டம் மற்றும் கொள்கையை திருத்தல் (சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், வருடம்)
- வருடாந்த செயல்திறன் அறிக்கை (CIABOC 2019)
- பாலியல் சலுகைக்கான மிரட்டலைச் சுற்றியுள்ள மௌனத்தை உடைத்தல்: அதிகாரம், பாலுறவு மற்றும் ஊழல் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள் 8 (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் 2020)
- அரச மற்றும் பகுதியளவிலான அரசாங்கத்துறை தொழில்வாய்ப்புகளின் தொகைமதிப்பு - 2016 (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2018)
- இலங்கை அரசியலமைப்பு
- தினேஷா சமரரட்ன, சட்டவியல் கடன் வாங்கல் மற்றும் ஊடுருவும் செல்வாக்குகள்: இலங்கை பொதுச் சட்டத்தில் இந்திய சட்டவியல் 2(3) (2018) இந்திய சட்ட விமர்சனம் 205
- உலக ஊழல் நிலைக் குறிக்காட்டி 2019 இலங்கை (ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் 2019)
- பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் 1966
- மனோகரி பல்லேகெட்டிய எதிர் செயலாளர், கல்வி அமைச்சு SC/FR 76/2012இ உயர் நீதிமன்றக் குறிப்புகள், செப்டெம்பர் 28இ 2016
- பொருத்தமில்லா வகையில் பெயரிட்டு அழைத்தல், கேலி பண்ணுதல் மற்றும் பாலியல் சலுகைக்காக மிரட்டுதலை முடிவுகட்டுதல்: கருவித் தொகுதி (பெண் நீதிபதிகளின் சர்வதேச அமைப்பு 2012)
- குற்றவியல் கோவை
- பெண்கள் மற்றும் பெண் சிறுமியருக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் தொடர்பான எதிர்க்கட்சித் தலைவரின் ஆணைக்குழு அறிக்கை (டிசம்பர் 2014) 48 (இணைப்பு: http://gbvforum.lk/r-library/document/Report%20of%20the%20Leader.pdf)
- பாலியல் சலுகைக்கான மிரட்டல்: ஊழல் மற்றும் பாலியல் சுரண்டலின் ஒரு குற்றம் (சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் 2019)
- இலங்கை எதிர் அப்துல் ரசாக் குதுப்தீன்
- இலங்கையில் அரச தொழில்துறைகளின் நிலைமை - 2019 (அட்வோகாட்டா நிறுவனம் 2019)
- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனம் 2004
- தேசங்கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனம் 2000
- ‘அறிவு, மனப்பாங்குகள் மற்றும் கண்ணோட்டங்கள் மதிப்பாய்வு அறிக்கை: பாலியல்தன்மை மற்றும் இலங்கையில் டுபுடீவு ஆட்களின் அனுபவங்கள் பற்றி இலங்கைச் சமுதாயத்தின் பார்வைகள்’ (சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2021)

- ‘மாற்றுப்பாலின சமூக இலங்கையர்களை பின்தங்க வைக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை மீள்சிந்தித்தல்’ (ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மினிஸ்டர் பவுண்டேஷன் 2021).
- பொதுச் சேவை ஊழலில் பெண்களின் அனுபவம்- (டிரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல், இலங்கை, ஜூன் 2014)
- ‘உத்தேசிக்கப்பட்ட சட்டத் திருத்தங்களுக்கான கொள்கை ஆலோசனைகள்’, கைநூல் 4 (CIABOC 2019)

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்

16/1, மொரிஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி/தொலைநகல்: +94 11 2055404

www.cejsrilanka.org | srilanka.cej@gmail.com

/CEJ.SL
/cej_srilanka
/CEJ_SriLanka
/@CEJSriLanka

ISBN 978-624-5847-20-4